விலை சதம் 20.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, மாசி 2-ஆம் நாள். (14-2-59) இதழ் 2.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்ரிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## அடுத்த தேர்தலில் யாருக்கு வெற்றி?

### பண்டாவா? டட்லியா? என். எம். அவர்களா?

— நமது அரசியல் நிருபர் —

**அடுத்த பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறும்? முக்கியமான இந்தக் கேள்வியை 'டிரிபியூன்' பத்திரிகை கிளப்பி பண்டாரநாயக்காவும் அவரைச் சேர்ந்தவருமே வாக்காளரின் அதிக தொகையினரின் ஆதரவைப் பெறக் கூடுமென்று கூறி அதற்கான காரணங்களையும் அலசியுள்ளது.**

அடுத்த தேர்தல் வர இன்னும் இரண்டு வருடங்களுக்கு மேலுள்ளன. அதற்குள் இதைப் பற்றி யோசிப்பானேன்? எம். ஈ. பி. கட்சிக்குள் கொந்தளிப்புகள் அதிகரித்துச் சமீபத்தில் அம்பலத்துக்கு வந்ததிலிருந்து இந்த ஆட்சி சிறிது காலமும் நீடிக்குமா, அல்லது கட்சியே முறிந்து விடுமா என்பன போன்ற சந்தேகங்கள் சில அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளன. பண்டார நாயக்காவின் தலைமையில் எதிர்பாராத முறையிலே அதிகாரத்துக்கு வந்த எம். ஈ. பி. கட்சியின் ஆட்சி ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்காதென்றும், அதற்குள் அது முடிந்து விடுமென்றும் முன்னர் சிலர் அரசியற் சோதிடங்கள் கூறினர். தங்களுக்குத் தேர்தலில் மேலதிகமான பலம் கிடைக்குமென்று அக்கட்சியே எதிர்பார்த்ததில்லை. என்ருலும் யு. என். பி. படுதோல்வியடைந்து, எம். ஈ. பி. ஆட்சிக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் மூச்சுப் பிடித்து நிற்கின்றது. எதிர்க் கட்சிகள் எவ்வளவோ கிளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் நடாத்தியும் அவசர நெருக்கடி முதலியனவைகளைப் பிரகடனம் செய்து அந்த ஆட்சி நீடித்து வருகிறது. ஆகவே இந்தஆட்சி இன்னும் இரண்டு வருடகாலம் தள்ளாடிக்கொண்டாவது நிற்குமாயின் அதில் வியப்பில்லை.

#### மூன்று பெண்டாட்டிகள்

'இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாடுவது போல்' என்று வசனமுண்டு. ஆனல் மூன்று அரசியற் பெண்டாட்டிகளை, பண்டார நாயக்கா மூன்று வருடங்களாகச் சமாளித்து வருகிருர். லங்கா சுதந்திரக்கட்சி, வி. எல். எஸ். எஸ். பி (புரட்சிசமசமாசக்கட்சி) பாஷா பெரமுனை முதலிய மூன்றையும் ஒன்று சேர்த்து எம். ஈ. பியாக அமைத்துக் கூட்டு அமைச்சரவையை எவ்வளவோ உள்வீட்டுச் சங்கடங்களைச் சமாளித்துக் கொண்டு முதலமைச்சர் பதவியில் மூன்று வருடங்கள் இருக்க முடிவது ஒரு பெரிய அரசியல் அதிசயம். இதற்கு மிகுந்த சாமர்த்தியமும் கெட்டித்தனமும் வேண்டும். சென்ற மே மாதக் கலவரத்தில் பண்டார நாயக்காவின் அரசாங்கம் கலைக்கப்பட்டு பிரதம தேசாதிபதியின் ஆட்சி ஏற்பட்டு ஆறு மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும், ஆகவே தேர்தலுக்குத் தயாராகும்படியும் சில அரசியற் தலைவர்கள் மனக் கோட்டைகட்டி பகிரங்கமாகப் பிரசாரங்களும் செய்தார்கள் என்ருலும் கலகமாகிற பெரிய கண்டத்தை அவசர நெருக்கடிப் பிரகடனம் செய்யச் செய்து பண்டார நாயக்கா சமாளித்துப் பாதுகாத்துக் கொண்டு வருகிருர். இப்படி மாதங்கள் பத்து ஓடிவிட்டதையும் கண்டபின் பொதுத் தேர்தல் சீக்கிரத்தில் ஏற்படும் என்ற நம்பிக்கை அரசியல் எதிரிகளுக்கும் மெதுவாக மறைந்துவிட்டது.

#### கட்சிக்குள்ளே பிளவுகள்

இப்போது எம். ஈ. பி. கட்சிக்குள்ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளுமே பிளவுகள் அதிகரித்துப்பொதுக்கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் தினசரி அடிபடுகின்றது. ஆனலும் முதலமைச்சர் ஒரு விதமாக இதையெல்லாம் கட்சிக் கூட்டத்தில் சமாளித்து வருகிருர். கட்சிக்குள் கருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும் பொதுக் கூட்டங்களில் அம்பலப்படுத்தித் தாக்கப்படாதென்றும் கட்சிக்கொள்கைகளை எல்லாரும் பின்பற்ற வேண்டுமென்றும் சென்ற வாரம் நடந்த கட்சிக் கூட்டத்திற் பலத்த வாக்கு வாதத்திற்குப் பின் ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரிசல்களை எல்லாம் ஒட்டுப் போட்டு மூடிவைத்துவிட்டார் பண்டார நாயக்கா.

இது கைகூடியதற்கு முக்கிய காரணம் பிளவுபட்டு குலைந்தால் அதிகாரப் பதவி போய் விடுமென்ற பீதி பொதுவாக அக்கட்சியில் எல்லாருக்கும் இருப்பதால்தான் இந்நிலையில் பொதுத் தேர்தல் நடந்தால் அக்கட்சியில் பலர் வெற்றிபெற முடியுமா என்பது சந்தேகம். இந்தப்பயம் காரணமாகத் தங்களுக்குள் என்ன

(16-ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றங்களிற் சிங்களம்

### யாழ்ப்பாண வழக்கறிஞர் கண்டனம்

"அரசாங்க மொழிச் சட்டம் அரசியல் திட்ட விதிகளுக்கு மாருனது. ஆகவே சட்டவிரோதமாகும். அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதும் சட்ட விரோதம். அப்படிக் கொணர்ந்தால் நீதிநிர்வாகம் சீர்குலையும். இதனல் நாட்டில் வகுப்புத்துவேஷநெருக்கடி அதிகரித்துநீதிமன்றங்களிலும் வகுப்புவாதம் புகுந்து விடும்." இவ்வாறுவழக்கறிஞர் சங்கம் கூடி இந்த உத்தரவைக் கண்டித்தது. அத்துடன் இவ்வுத்தரவை நீக்கிவிட வேண்டுமெனவும்ஏகமனதாகக் கேட்டுள்ளது. வழக்கறிஞர்களுடைய இக்கூட்டத்திற்கு திரு.ஸி. பொன்னம்பலம் தலைமை வகித்துப் பேசுகையில் இந்த ஏற்பாடு தமிழரை அடிமைச்சாதியினராக்கி விடுமென்ருர். திருவாளர்கள் எம். பாலசுந்தரம் ஏ. அமிர்தலிங்கம் ஸி. அருளம்பலம்எஸ்.ஆர்.கனகநாயகம்முதலியோர் அரசாங்க மொழிச் சட்டத்தையும் அது நடைமுறையில் இருந்து வரும் முறையையும் வன்மையாகக் கண்டித்தனர். இதனல் தமிழ் பேசும் வழக்கறிஞர்கள் தமிழில் ஒன்றுமே செய்ய முடியாமற் போவதுடன் நாட்டிலே மானம் மரியாதையுடன் வாழமுடியாதென்றும் கூறினர்.

யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் ஏகோபித்துக்கண்டித்ததைஅரசினர் மதித்து நிதானத்துடன் நடந்துகொள்ளுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரதிநிதிகள் சபையில் அமளி

### எம். ஈ. பி. ஆட்சீ நீடிக்குமா?

— நமது கொழும்பு நிருபர் —

**இலங்கைப் பிரதிநிதிகள் சபையிற் பொதுசனப் பாதுகாப்புத்திருத்த "மசோதா" சென்ற வியாழனன்று நிறைவேறிய முறையும் அன்று அங்கு நடந்த அமளி பற்றியும் அரசாங்க ஆட்சியுட்பட இலங்கையில் யாரும் பெருமை கொள்ள முடியாது.**

இனி, இங்கு சனநாயகம் சரிவர நடைபெற முடியுமா? எம். ஈ. பி. கட்சி தொடர்ந்து நிலைபெற முடியுமா! என்ற சந்தேகங்களும் இப்போது எழுந்துள்ளன.

சனப் பிரதிநிதிகள் சபையிலே பொலிசார் புகுந்து எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 12 எம். பிக்களை ஒவ்வொருவராகத் தூக்கிக்கொண்டு போய்ப் பலாத்காரமாக வெளியேற்றினர். "எம். ஈ. பியின் சரித்திரத்தில் இன்று ஒரு திருப்பம். அதன் வீழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது." என்றும் "எம். ஈ. பி. ஒழிக!" என்றும் கோஷங்கள் எழுந்தன.

இந்த முக்கிய "மசோதா" பற்றி விவாதத்தை உடன் முடித்து விடக்கூடாதென்றும் பலர் பேச விரும்புவதால் இதற்கு அவகாசமளிக்கவேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் என். எம். பெரேரா வேண்டினர். ஆனல் இது மறுக்கப்பட்டு விவாதம் யு. என். பி. கட்சித் தலைவர்களில் ஒருவரான எம். டி. பண்டா பேசிக் கொண்டிருக்கையில் திடீரென முடிக்கப்பட்டதால் எதிர்ப்புகள் கிளம்பிவிட்டன.

விவாதத்தை இன்னும் ஒரு நாள் நீடித்துவிடலாமென்பது முதலமைச்சர் பண்டாரநாயக்காவின் சொந்தக் கருத்தாம். ஆனல், கல்வி அமைச்சரும் மற்றும் சிலரும் இரவு பகலாக எதிர்த்து விவாதத்தை நீடித்தால் தாங்கள் பதவிகளைத் துறந்து விடுவதாகப் பயமுறுத்தினராம். இந்தப் பூச்சாண்டிக்கு முதலமைச்சர் பணிந்து விட்டார். அப்படியின்றி இவர் முன் கூட்டியே சனநாயக முறைப்படி எதிர்க்கட்சித் தலைவருடன் விவாத முறைபற்றிக் கலந்துபேசி, ஒரு சுமுகமான முடிவு செய்திருந்தால் இந்த அசம்பாவிதங்களை எல்லாம் தடுத்திருக்கலாம்.

அவ்விதம் செய்யாததால் சபாநாயகரின் தலைமையும் தர்ம சங்கடத்துக்குள்ளாகி விட்டது.

எம். ஈ. பி. க்கு இவ்வளவு எதிர்ப்பும் சங்கடமும் ஏற்படுவது, யு. என். பிக்கு அதிக மகிழ்ச்சியளிப்பதுடன் மீண்டும் அதிகாரத்துக்குவர அவர்கள் இதைப் பெரிதும் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இலங்கையிற் பொதுசன அமைதிநிலவி, இங்கு சனநாயகம் வெற்றி பெறமுடியுமா? அல்லது பாகிஸ்தான் முதலிய நாடுகளில் ஏற்பட்டிருப்பது போன்ற சர்வாதிகார ஆட்சிதான் ஏற்படக் கூடுமா! என்று பொது மக்கள் இப்போது அதிக கவலையுடன் பேசிக் கொள்கிருர்கள்.

முதலமைச்சரின் இராசதந்திரத்துக்கு இது பெரியசோதனை. மற்ற நெருக்கடிகளைச் சமாளித்தது போல் அவர் இதையும் சமாளித்து விடுவாரா என்பது இனித்தான் தெரியவரும்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




பிரிட்ஜஸ்டோன் டையர்கள் மோட்டார்த் தேவைகள் எல்லாவற்றையும் திருப்தி செய்யும் வண்ணம் உற்பத்தியாக்கப்பட்டிருக்கின்றன.

ஏக விநியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன் : 496 தந்தி : "ஓட்டோஸ்"

**விற்பனைக்கு**

Z 4994 (Morris Eight) மொறிஸ் எயிற் கார் விநோதன்ஸ் அன் கோ, யாழ்ப்பாணம்.

திறமான இரும்புப் பெட்டிகள் வேண்டுமா? எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எவர் சில்வர் பாத்திரங்களுக்கு எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வேலைப்பாடுகள் அமைந்த திறமான இரும்புக் கேற்றுகள் வேண்டுமா? எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

"தியாசன்ஸ்" தேயிலை திறமானது, சிறந்தது, T. தியாகராசா அன் சன்ஸ், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தியாசன்ஸ் தேயிலை வேண்டுமா? T. தியாகராசா அன் சன்ஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தேயிலையில் சிறந்ததும் திறமானதும் தியாஸன்ஸ் தேயிலையே, T. தியாகராசா அன் சன்ஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வான் EL நம்பர் Station Wagon த. பெ. இல. 49

"ரலி" சைக்கிள் R. ராமசாமி உடுவில் ரோட், மானிப்பாய்.

சுத்தமான முட்டைகளுக்கு 66, பண்ணை ரோட், யாழ்ப்பாணம்.

**தேவை**

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் சிறு வீடு வாடகைக்கு தேவை த. பெ. இல. 49.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ருடியோ கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஈழநாடு வரி விளம்பரம்**

★ திருமண அறிவிப்பு
★ விற்பனவு
★ கொள்வனவு

ஆகியவற்றைக் குறைந்த செலவில் விளம்பரம் செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு:-

ஈழநாடு வரி விளம்பரப் பகுதி
தபாற் பெட்டி எண் 49
யாழ்ப்பாணம்.

தந்தி: "விநோதன்ஸ்" தொலைபேசி எண்: 286

உங்கள் வீட்டுத் தேவைக்கான சகலவிதமான பொருட்களையும் விநியோகம் செய்யும்

★

**வீட்டுக்கு வீடு விநியோக சேவை**
(House to House Delivery Service)

★

விநியோகஸ்தர்கள்:
**நோமாட் பால்**

★

**விநோதன்ஸ் அன்ட் கம்பனி**
சில்லறை மொத்த வியாபாரிகள்,
108, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்

உயர்ந்தரக "பிறவுண்" பேப்பரில் இயந்திரத்தினாலும், கையாலும் தயாரிக்கப்பட்ட பொருட்கள் போடும் உறைகள் எல்லாவித அளவுகளிலும் மற்றும்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட
★ லங்கா மனிலா
★ லங்கா கிறீம் வூவ்
★ லங்கா பாங்கர்
★ லங்கா லயிட் வெயிட்
★ லங்கா கொமர்ஸல்
★ லங்கா கிறீரிவ்ஸ்

என்வலப்புகளும் மொத்தமாக விற்பனைக்கு இருக்கின்றன.

**கலாநிலையப் பதிப்பகம்**
சிவன் கோவில் மேலை வீதி
யாழ்ப்பாணம்

# அருள் வழி

## ஆட்டுகின்றனன் ஆடுகின்றனம்

*யோகிராஜ் சச்சிதானந்தா*

உலக சேவையே உத்தமன் பூசையெனக் கருதி உலக சமாதானத்துக்காகவும், மக்களது நல்லொழுக்க வாழ்விற்காகவும், பாடுபட்டு மனித இனத்தின் சாதிமதபேத புத்திகளைச்சாடி, அனைவரும் ஒன்றுபட்டு உயர் வாழ்விலே திளைப்பதற்குத்தவத் திருவருள் நெறி நின்று, பணியாற்றவந்த **ஈழநாடு** சீரும் சிறப்புமுற்று வாழத் திருவருளை நாடுதும்.

**ஈழநாடு** ஈந்துவக்கும் நற்கருத்துக்கள் மூலம், இறைவன் திருவிளையாடல்களை வாழ்வில் நன்கு விளங்கி, இன்ப துன்பச் சுழலில்லா நல்வாழ்வு வாழ்வோமாக.

உலகெலாம் படைத்த இறைவன் தன்னுடைய பெருந்திட்டம் ஒன்றுக்கு அமைய அதனை நடத்தி வருகிறான். ஒரு புல்லின் நுனி முதல் புழு, பூச்சி, பறவை, விலங்கு, மனிதன் வரை அனைத்தையும் அவனது திட்டத்தை நிறைவேற்றும் கருவிகளாகவே படைத்துக் காத்துப் பயன்படுத்தி வருகிறான். உண்மை இதுவாக உயிர்களிற்சில அவன் அருட் செயல்களை மறந்து தாமே இயங்குவதாக எண்ணித் தாம்விரித்த வலையிலே தாமே சிக்கித் தத்தளிக்கின்றன. அதுவும் அவனது மறைத்தற் தொழிலால் நடைபெறுவதேயாகும்.

மண்முதல் விலங்கு ஈருக அனைத்துயிர்களையும் அவன் அருட்கை பிடித்து இயக்க, மக்கள் நிலையில் மட்டும் உயிர்களைச் சுய இச்சையில் இயங்கும்படி விடுத்துள்ளான். இது மக்களின் மனவிளக்கத்தைச் சோதித்து அவர்களைப் பக்குவப்படுத்தி ஆட்கொள்ளும் பொருட்டேயாகும். ஆனல், மக்களிற் பெரும்பான்மையோர் அச்சோதனையிற் பன்முறையும் தோல்வியே காண்கின்றனர்.

நினைந்து நினைந்தே மூச்சை இழுத்து வெளியே விடும் மக்கள் யாராயினும் உண்டா? தாம் உயிர்வாழ மிக அவசியமான மூச்சைத் தானும், தான் நினையாதிருக்கும் பொழுதே தம்முடைய உடலிற் போக்கு வரவு செய்து, உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் உத்தமனாகிய இறைவனே பிற செயல்களையும் செய்கிறான், என்பதை உணராது தமக்குத் தரப்பட்ட சிற்றறிவைப் பெரிதென மதித்து, ஆணவத்தின் பிடியில் அகப்பட்டு, தம்மூலம் நடைபெறும் செயல்களுக்குத் தாமே கருத்தர்கள் என எண்ணுகின்றனர். அந்தோ! அதனால் விளையும் பயன்யாது? அச்செயல்களின் பயன்கள் நலமெனவும், தீதெனவும் மாறி, அவ்வாணவ உயிர்களைப்பற்றிப் பிறவிப் பெருங்கடலில் ஆழ்த்துகின்றன.

ஆகவே, அன்பர்களே! இவ்வுலகில் நடைபெறும் செயல்கள் அனைத்தும் அவன் செயல் என்றறிந்து, நாம் கருவிமாத்திரமாக இருந்து, இன்ப துன்பச் சுழல்கள் நிறைந்த பிறவிப் பெருங் கடலில் வீழாது கருமயோகிகளாக வாழ்வோமாக!

"என்னிடம் மனம்வைத்து என்னிடமே அன்பு செய்து, என்னையே பூசித்து என்னையே வணங்குவாயானல் என்னையே நீ அடைவாய். எனக்கு நீயே பிரியமானவன்; இதுவே நான் உனக்குச் சொல்லும் சத்திய வாக்கு" என்னும் பகவத் கீதை கூறும் மணி வாக்கியத்தைச் சிந்தித்து அதன்படியே ஒழுகி இன்புறுவோமாக!

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

### "சில்லறைச் சேட்டை"

யாழ்ப்பாணம் பஸ்ஸில் பிரயாணம் செய்யப்போகிறீர்களா? அப்படியானல் நேரே கடைக்குப் போங்கள். ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ பணத்தைக் கடைக்காரரிடம் கொடுத்துச் சில்லறையாக்கிக் கொள்ளுங்கள். ("கடைக்காரர் மாற்றித் தரமாட்டேன்" என்கிருரா? அட! ஒரு சிகரட்டோ, அல்லது வெற்றிலை ஒன்ருே வாங்கினல் மாற்றித் தராமல் என்ன செய்வார்?) சில்லறையாக்கி விட்டீர்களா? மடியிலே இறுக்கிக் கட்டிக் கொள்ளுங்கள் ஆஹா! கலீர், கலீர் என்று அந்தச் சில்லறைகள் எவ்வளவு இனிமையான ஒலியை எழுப்புகின்றன! அந்த ஒலியிலே மயங்கி, நின்ருல் பஸ்ஸைத் தவற விட்டு விடுவீர்கள்! ஓடிப் போய் பஸ்ஸில் ஏறிக்கொள்ளுங்கள்.

ஏனய்யா, பேய் மாதிரிச் சத்தம் போடுகிறீர்கள்? இதெல்லாம் யாழ்ப்பாணப் பஸ்வண்டிகளிலே சரிப்பட்டுவராது. அதோ! அந்த மூலையிலே இருக்கிற மனித மூட்டையின் மேலே பாரத்தை ஏற்றிச் சிறிது 'றெஸ்ட்' எடுத்துக் கொள்ளுங்கள்!

இதோ! மக்கள் முன்னணி அரசாங்கத்தின் பிரதிநிதியான கண்டக்டர் ஐயா தரிசனம் கொடுக்கிருர்! அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்.

"ஏய்! எங்கே போகிருய்!"

"அச்சுவேலிக்கு"

"சரி! இந்தா டிக்கட். 40 சதம் எடு. சில்லறை இல்லாவிட்டால் இறங்கி நடையைக்கட்டும் கெதியாய்".

"இதோ சில்லறை வைத்திருக்கிறேனே! இந்தாருங்கள்". பல்லைக் காட்டிய வண்ணம், சிறிது குழைந்து கொண்டு பணத்தைக் கொடுங்கள்.

"கல கல கல" ஐயையோ! இது என்ன ஐயா! சில்லறையை எல்லாம் கீழே கொட்டி விட்டீர்களே! ஐயோ! பாவம்!"

"சீச்சீ! இதென்னப்பா தொந்தரவாக இருக்கிறது, காசைப் பத்திரமாய் வைத்திருக்கத் தெரியவில்லையே உனக்கு! நீ தேடி எடுக்கும் வரை பஸ் நில்லாது. நீ இறங்கப்பா! அண்ணை பஸ்ஸை எடு".

அவ்வளவுதான்! இறங்கி நடையைக் கட்டுங்கள்! "நடராஜா சேர்வீஸ்" தான் இருக்கவே இருக்கிறதே!

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம், **சோனு**
11-2-59.

### மௌனம் சாதிப்பதேன்?

யாழ்ப்பாணத்தில் வானொலிக் கிளை நிலையம் ஒன்று மிக அவசியமெனச் சில வருடகாலமாக அரசினருக்கு வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆனல் அரசினரோ இதில் எவ்வித அக்கறையும் காட்டுவதாயில்லை. சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலும் இதன் அவசியம் எடுத்துக்காட்டப்பட்டது. அரசினர் இது விஷயத்தில் மௌனம் சாதியாது இத்தேவையை இனியேதும் நிறைவேற்றிவைப்பார்கள் எனப் பொதுமக்கள் எதிர் பார்க்கின்றனர்.

யாழ்ப்பாணம் **க. சித்திரவேல்**

### வீதிகளின் அழகு!

இலங்கையில் இன்று சுகாதாரக் குறைபாடு அதிகரித்து வருகின்றது. இக்குறைபாடு நீடித்துவருவதற்குக் காரணங்கள் பலவாக இருப்பினும் சம்பந்தப்பட்டவர்களின் அக்கறையின்மையே இதற்கு முக்கிய காரணமாகும்.

உதாரணமாகக் குப்பையைத் தெருவோரங்களிற் குவிப்பதால் எவ்வளவு கேடு விளையுமென்பதை மக்கள் இன்னும் உணராதிருப்பது வருந்தத்தக்கதே. ஓரத்திற் போடப்படும் குப்பை கூளங்கள் நாளடைவில் வீதி முழுவதும் பரவிப் பாதைசாரிகளுக்கு மிகுந்த இன்னலை உண்டாக்குகின்றன. அழுகிப்போன பதார்த்தங்கள், அழுக்கடைந்த பொருட்கள், உடைந்த கண்ணாடித் துண்டுகள் இப்படி எத்தனை எத்தனையோ...... இந்த அழகிலும் நகரத்தில் வாழ்கின்ருேமென்ற பெருமை நம்மை விட்டு அகலவில்லை. பொது மக்களின் நடைபாதையாக அமையவேண்டிய வீதிகள் குப்பை குவிக்குமிடங்களாக அமையக் கூடாதென்பதை அனைவரும் உணரவேண்டும். பிற நாட்டினர் நம் நாட்டுக்கு வந்தால் வீதிகள் சுத்தமாய் இருப்பதைப் பார்த்து எம்மைப் பாராட்டுவார்கள். இதை நன்குணர்ந்து நாம் அனைவரும் நகர வீதிகளைச் சுத்தமாக வைத்திருக்க முயலவேண்டும்.

**எஸ். நாகராஜா**
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாண நூல் நிலையம்

யாழ்ப்பாண நகரசபையின் ஆதரவில் மக்களனைவர்க்கும் பயன்படக்கூடிய நூல்நிலையம் ஒன்று நிறுவப்படுவது மகிழ்ச்சிக்குரியதே. இக்கட்டடத்தை விரைவில் பூர்த்தி செய்யப் பொதுமக்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கவேண்டும்.

இந்த உணர்ச்சி வடபகுதியின் எல்லைக்குள் மாத்திரம் நிற்காது, நாடு முழுவதும் பரவுதல் அவசியமாகும்.

**'புத்தகப்பிரியன்'**
பருத்தித்துறை.

இந்நாட்டில் இன்று இயங்கிவரும் தலதாபன தேர்வுமுறைகளிற் காணப்படும் இரு முக்கிய குறைபாடுகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

# தலதாபன ஆட்சியிற் குறைபாடுகள்

— சா. பெ. —

பிரதிநிதித்துவ ஆட்சிக்கு முதற்படியாக அமைந்துள்ளது தலதாபன ஆட்சியாகும். தலதாபனங்களுக்கு மக்கள் சிறந்த, தகுந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பினால் மட்டுமே இத்தாபனங்கள் நன்முறையில் இயங்கமுடியும். இத்தாபனங்களில் இன்று மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்களே நாளை மத்திய அரசாங்கத்தையும் நடாத்த நேரிடும். தலதாபனங்களைச் சிறந்த நிர்வாகத்தில் இயங்க வழிகாட்டுவதொன்றே மத்திய அரசாங்கம் திறமையுடன் இயங்க வழிகோலுவதாகும். ஈழநாட்டில், இன்று இயங்கிவரும் தலதாபன தேர்வு முறைகளிற் காணப்படும் இரு முக்கிய குறைபாடுகளை எடுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தலதாபன ஆட்சியென்பது கிராம, பட்டின, நகர, மாநகர ஆட்சிக் கழகங்களைக் குறிப்பதாகும்.

**1. தலதாபனங்கள் கட்சி வேற்றுமைக்கு அப்பாற்பட்டிருத்தல் அவசியம்.**

இன்றைய அரசியற் சீர்கேட்டுக்கு ஓரளவு கட்சிமுறையும் காரணமாகும். மேலைநாடுகளிற் காணப்படுவதுபோன்ற சிறந்த கட்சிமுறை ஆட்சியை இன்னும் ஈழத்து மக்கள் பெறவில்லை. கட்சிமுறையில் நாம் இன்னும் நற் பயிற்சி பெறவேண்டுவது அவசியம். ஆகவே, அதற்குள் இம்முறையை, தலதாபன ஆட்சியிலும் நுழைத்து வேடிக்கை பார்த்தல் தகாது. பாராளுமன்ற ஆட்சிக்கு மட்டுமே நாம் கட்சியாட்சிமுறையை வைத்துக்கொள்ளுதல் பொருத்தமானது. நமது நகர, பட்டின, கிராம ஆட்சிக்கழகத் தேர்தல்களின்போது கட்சி வேற்றுமைகள் புகுந்தால் அவை என்றும் நம்மைவிட்டகலா. பாராளுமன்றத் தேர்தலின்போது ஏற்படும் கட்சிப்பாகுபாடுகள் தேர்தல் முடிந்தபின் வெகு சீக்கிரமாக நம்மை விட்டகலும். ஆயின் நம் கிராமத்திலோவெனில், வென்றோரும் தோற்றோரும் அவர் தம் கட்சிகளும் நம்முடனே நாடோறும் பழகவேண்டியவர்கள். ஆகவே இக்குரோதங்கள் வளர்ச்சிபெறுவதுடன் நம் சொந்தக்கிராமத்தின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக விளங்குவதும் திண்ணம்.

கட்சிகள் தமக்கென ஒரு சில இலட்சியங்களையும் கொள்கைகளையும் உடையன. அவற்றின் பிரதான நோக்கு முழுத் தேசத்தின் நன்மையையும் அபிவிருத்தியையும் கருத்திற் கொண்டிருக்குமே தவிர, தனிப்பட்ட ஒரு கிராமத்தின் அல்லது பட்டினத்தின் முன்னேற்றத்தைக் கொண்டதாகக் கருதப்படமாட்டாது. அன்றியும் தலதாபனங்களிலே தங்கள் செல்வாக்குப் பரவுதல் வேண்டும் என்ற ஒரே காரணத்தை முன்னிட்டு நம் தேச அரசியற் கட்சிகள் தங்கள் பிரதான இலட்சியங்களையும் மறந்துவிட்டு, தலதாபன தேர்தல்களில் ஈடுபடுகின்றன. இதனால் கிராமத்தில் அல்லது பட்டினத்திற் கட்சிகள் அவ்விடத்துமக்களின் அரைப்பகுதியினரின் செல்வாக்கையும் இழந்துவிடுவதுடன் தங்கள் பிரதான இலட்சியங்களையும் செயலாற்ற முடியாதவைகளாகின்றன. இக்கட்சிகள் தங்கள் இலட்சியத்தையும் கொள்கைகளையும் காப்பாற்றுதற்காகப் போராடும், வாதாடும் இடம் பாராளுமன்றமே அன்றி தலதாபனங்கள் அல்ல. தலதாபனங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட இடங்களின் முன்னேற்றத்திற்கும் விருத்திக்குமாக உழைப்பதையே தம் பிரதான இலட்சியமாகக் கொள்ளவேண்டுமே தவிர தனிப்பட்ட கட்சிகளின் பெருமைக்கும் சிறப்புக்குமாகக் கருமமாற்றுதற்கல்ல என்பதையும் இத்தருணத்திற் கவனித்தல் வேண்டும்.

ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கும் கட்சி, தன் கட்சியைச் சேர்ந்தோர் எங்கெந்த தலதாபனங்களை ஆட்சிசெய்கின்றார்களோ அந்தந்த தலதாபனங்கட்கே ஆக்க விருத்தித் திட்டங்களையும், உதவிகளையுமளிப்பதுடன், தன் எதிர்க்கட்சியினர் ஆட்சி செய்யும் தலதாபனக் கழகங்களைப் புறக்கணித்து அவற்றை முன்னேற்றத்தின் எல்லையை அடையவிடாது தடுப்பதையே தன் தொழிலாகக் கொண்டிருப்பதை நாம் சர்வசாதாரணமாகக் காண்கின்றோம். இதன் பின் அடுத்த பொதுத்தேர்தலில் இன்னோர் கட்சி ஆட்சி பீடத்தை ஏற்கும்போது முன்னர் நன்மை பெற்றோர் அவற்றையிழக்க வேறு சில தலதாபனங்கள் அதிக நன்மையைப் பெறக்கூடும். இந்நிலை மாறி அரசாங்கம் தலதாபனங்களைப் பாரபட்சமின்றி நோக்கச் செய்தற்கு ஓரேயொரு மார்க்கம் தலதாபனங்கள் கட்சிமுறைக்கு அப்பாற்பட்டிருத்தலேயாகும்.

**2. தலதாபனத்தலைவர்கள் வரியிறுப்போரால் நேரடியாகத் தெரியப்படல் வேண்டும்.**

ஒரு தலதாபனத்தின் முதலாவது பிரஜையாக விளங்குபவர் அத்தாபனத்தின் ஆட்சிக் கழகத் தலைவரேயாவர். இத் தலைவர் (மேயர்) இப்போதைய முறைகட்கிணங்க நகர பிதாக்களாலே தெரியப் படுகின்றார். தலதாபனங்களின் தலைவர் தேர்வை இலங்கையில் இதுவரை தொடர்ச்சியாய்க் கவனித்துவந்திருப்போர் சனநாயக முறைக்கு வெகு தூரத்தில் நம் நாடு உள்ளது என்றே கூறுவர். நகரபிதாக்களிற் சிலர் ஒன்றுகூடித் தம்முள் முறைகேடான சில ஒப்பந்தங்களைச் செய்வதும் அதற்கிணங்க ஒருவர் தலைவராகத் தெரியப்படுவதும், பின்னர் இந்த ஒப்பந்தங்கள் முறியடிக்கப்படுதலும் தலைவராயிருப்பவரை வில்லங்கமாகப் பதவியைவிட்டுத் துரத்துவதும் இங்கு சர்வ சாதாரணம். கட்சிகள் சேர்ந்தால் இன்னும் பல வேடிக்கைகள் காணப்படும். கட்சித் தலைமைப் பீடம் தலதாபன தலைவரை நியமிக்கும் விஷயம் கட்சியங்கத்தவரிடையே பிளவுகளை ஏற்படுத்தும். சிலரை ஒரு கட்சியிலிருந்து மற்றக் கட்சிக்குள் மாற்றப் பகீரதப்பிரயத்தனங்கள் நடைபெறும். அதிகஅங்கத்தவர் உள்ள கட்சியில் தலைவர் நியமனத்தினால் ஏற்பட்ட பிளவைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு அக்கட்சியில் மனம் உடைந்தவர்கள் சிலரை, தங்கள் கட்சியிற் சேர்த்து அவர்களையே தங்கள் கட்சியின் சார்பாகத் தலைவர், உபதலைவர் பதவிகளில் நியமிப்பதுமான பல்முறைகள் இப்போது தலதாபனத் தலைவர் தேர்விலே புகுந்துகொண்டிருக்கின்றன.

இவைகள் அனைத்தும் நீங்கப்பெறுவதுடன் ஒரு தலதாபன வரியிறுப்பாளனுக்கு அவனது ஆட்சிக் கழகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பெறுதல் வேண்டும். அவனிடமுள்ள இந்த உரிமையைத் தற்போது நகர பிதாக்கள் தங்கட்குச் சாதகமாக்கிக் கொண்டு பாவைக் கூத்தாட்டுவதுபோன்ற தலைவர்களை நடத்திக்கொண்டிருக்கின்றனர். இம்முறை ஒழிதல்வேண்டும். தலைவராக விரும்புவோர் அபேட்சகராக வருதல் வேண்டும் நாட்டின் வரியிறுப்போரிடம் சென்று தாங்கள் தலைவராகத் தெரியப்பட்டால் அந்நகரத்தின் அல்லது கிராமத்தின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு, அபிவிருத்திக்கு ஆற்றவிருக்கும் சேவைகளை, திட்டங்களைத் தெரிவித்தல் வேண்டும். வரியிறுப்பாளர்கள் இத் திட்டங்களை ஆராய்ந்து தாம் விரும்புபவரைத் தலைவராகத் தெரிதல் வேண்டும். அங்கத்தவர் தெரிவும் தலைவர் தெரிவும் ஒரே நேரத்தில் நடைபெறுதற்கான ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும். அங்ஙனம் செய்யப்படின் செலவும் குறையும். ஒவ்வொரு வாக்காளரும் ஏககாலத்தில் இரு சீட்டுகள் அளிக்கப்பெறுவர். ஒன்றில் தமது வட்டாரப் பிரதிநிதியைத் தெரிதற்கான புள்ளடியையும், மற்றதில் தலைவரைத் தெரிதற்கான புள்ளடியையும் இடலாம். இவ்விதமே உப தலைவரும் தெரியப்படலாம்.

மேனாட்டு மொழிகள் பல உலகமொழிகளாக இன்று விளங்குகின்றன. அவ்வாறே தமிழ்மொழியையும் உலகமெலாம் பரவச் செய்வதற்கான — வழிவகைகளை இக்கட்டுரையில் அதன் ஆசிரியர் கூறுகின்றார். —

# உலகமெலாம் தமிழோசை பரவுதற்கு வகைசெய்தல்

— கி. லக்ஷ்மணன் எம். ஏ. (றோயல் கல்லூரி கொழும்பு)

சோவியத்து யூனியனிலுள்ள டாஷ்கென்ற் என்னும் நகரிலே சென்ற ஒக்டோபர் மாதம் பிரமாண்டமான மாநாடொன்று நடைபெற்றது. அது ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் மாநாடு. ஐம்பதுக்கு மேற்பட்ட தேசங்களிலிருந்து ஏறக்குறைய இருநூறு பிரதிநிதிகள் அம் மாநாட்டிற் பங்குபற்றினர். அவர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட மொழிகளையுடையோர். ஒருவருடைய மொழி அநேகமாக மற்றவருக்குத் தெரியாது. எனினும் கூட்டத்திலே பேசும் ஒவ்வொருவரும் என்ன பேசுகின்றார்கள் என்பதை ஏனையோர் அனைவரும் அறிதல் வேண்டும். இதற்கான ஏற்பாட்டை, மாநாட்டு ஒழுங்குகளைக் கவனித்தவர்கள் செய்திருந்தனர். அத்தனை மொழியாளர்களையும் ஐந்து மொழிகளுக்குள் அடக்கியதுதான் அவர்கள் செய்த ஏற்பாடு. அவர்கள் ஐந்து மொழிகளைத் தெரிந்தெடுத்தார்கள். ஒவ்வொருவருடைய பேச்சையும் அந்த ஐந்து மொழிகளிலும் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்தாலே போதுமென அவர்கள் அறிந்து கொண்டனர். அவை ஐந்தும் அவ்வளவு பிரசித்தம் பெற்றவை. அவற்றுள் ஒவ்வொன்றும் அங்குள்ள பலரும் அறிந்ததாயிருந்தது. இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த என் மனம் எங்கள் தமிழ் மொழியைப் பற்றி எண்ணத் தொடங்கியது. பிறதேசங்களிலே நடைபெறும் இத்தகைய மாநாடுகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட மொழிகளுள்ளே தெரிந்தெடுக்கப்படும் ஐந்து மொழிகளுள்ளே தமிழும் ஒன்றாகக்கூடிய நிலை என்றாவது ஏற்படுமா என எண்ணினேன்.

**இடம்பெறாத காரணம்**

அங்கு தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து மொழிகளும் அண்மைக் காலங்களிலேயே விருத்தியடைந்தவை. ஆனால் தமிழோ பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விருத்தியடைந்த மொழி. அங்ஙனமாயும் உலக அரங்கில் அது இடம்பெறாத காரணமென்ன? உலக அரங்கிலே தமிழும் இடம்பெற வேண்டுமானால் என்ன செய்தல்வேண்டும்?

பாரதி 'தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்' என எழுதினானே, அங்ஙனம் கூறியதன் கருத்தென்ன? தமிழொலி பிறதேசங்களிலே கேட்கச் செய்வதற்கு ஒரு வழி பிறதேசங்களுக்குப் பெருந்தொகையான தமிழர் சென்று அங்கு குடியேறுவது. இது தானா பாரதி கருதியது! இது இன்று நடக்கக்கூடியதுமன்று. ஒவ்வொரு நாட்டினரும் பிறநாட்டினர் தம் நாட்டில் வந்து குடியேறவிடாது தடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயுள்ளனர். அன்றியும் பிறதேசத்திலே தமிழோசை கேட்க வேண்டுமானால் அத்தேசத்தவர் தமிழின் சிறப்பை அறிந்து தாமாகவே விரும்பித் தமிழைக் கற்று அதனைத் தமக்கிடையே பேசுவதன் மூலம் அவ்வோசை பரவவேண்டும். அதிலேதான் சிறப்புண்டு. அங்ஙனமன்றித் தமிழர் சிலர் அத்தேசங்களுக்குச் சென்று அங்கு தங்கும் நாள்களில் தமக்குள்ளே தமிழைப் பேசுவதிற் சிறப்பெதுவுமில்லை.

பிறதேசத்தவர்கள் தமிழைத் தாமாகவே விரும்பிக் கற்கும்படி தூண்டவல்ல சிறப்பெதுவும் தமிழில் உண்டா? எப்போது ஒரு மொழியை அம்மொழிக்குரியவனல்லாத பிறனொருவன் தானாகவே விரும்பிக் கற்க முற்படுவன்?

சில காலத்துக்கு முன் ஆற்றல் மிகுந்த ஒரு தேசம் ஆற்றல் குறைந்த ஒரு தேசத்தோடு போர் தொடுத்து அதனைப் போரிலே வென்று அடிமையாக்கி ஆட்சிபுரியும் நிலைமை நிலவியது. அந்நிலையிலே அடிமைகளானோர் ஆட்சியாளருடைய மொழியை விரும்பிக் கற்க முற்பட்டனர். இவ்வழியாலும் இன்று தமிழோசையை உலகமெலாம் பரப்புதல் இயலாது. தமிழராகிய நாம் நமக்கு ஆற்றல் இருந்தாற்கூட பிறநாட்டினரை அடிமைகளாக்க ஒருபோதும் விரும்போம். அங்ஙனம் விரும்பினும் அதற்கு இன்றைய உலகம் இடங்கொடாது.

[10-ஆம் பக்கம் பார்க்க]

"றோயல்" தலைமுடிகளுக்கும் மற்றும் பெண்கள் விரும்பும் கவர்ச்சிகரமான நாகரீகமான பல வித பொருட்களுக்கும் சிறந்த இடம்

பென்ஸி பலெஸ்

மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் முதலிய வேலைகளுக்கும் உகந்த இடம்




சுந்தரம்ஸ் பற்றறி சேவிஸ்

402, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்

சிறு கதை

# சூழ் நிலை

ரா. பாலகிருஷ்ணன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

'நேர்ஸிங்' பயிற்சி முடிந்த பிறகும் நிர்மலா டில்லிக்குச் செல்ல விரும்பவில்லை. சென்னையிலேயே பிரசவ ஆஸ்பத்திரியொன்றில் வேலை கிடைத்துவிட்டது, அவளுக்கு. தங்கை எப்படியாவது நிம்மதியாக இருந்தாற் சரி என்று இருந்துவிட்டான், சிவராமன். பயிற்சிக் காலத்திலும் சரி, பயிற்சி முடிந்து நேர்ஸாகப் பணியாற்றத் தொடங்கியபிறகும்சரி, வாரம் ஒரு முறை அல்லது, பத்து நாட்களுக்கொருதடவையாவது நிர்மலா என் வீட்டுக்கு வரத் தவறியதில்லை. என் மனைவிக்கும் நிர்மலாவிடம் மிகுந்த பிரியம். என் குழந்தையும் அவளிடம் ஒட்டுதலாக இருந்து வந்தான்.

ஆஸ்பத்திரி அதிகாரிகளும், சகநேர்ஸ்களும் நிர்மலாவிடம் அன்போடு பழகிவந்தனர் என்பதை அவ்வப்போது நான் அவளைச் சந்திக்க ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது அறிந்தேன். நிர்மலா மன நிறைவோடு இருப்பது குறித்து சிவராமனுக்கும் அடிக்கடி எழுதிக்கொண்டிருந்தேன். சேவையில் நிர்மலாவுக்குள்ள ஆர்வம்பற்றி ஆஸ்பத்திரி அதிகாரி என்னிடம் புகழ்ந்துரைப்பது வழக்கம். அத்தகைய சேவை எண்ணற்ற மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்ற காரணத்தினலேதான் போலும், வாழ்வின் தொடக்கத்திலேயே அவள் ஒரு பேரிடியைத் தாங்கிக்கொள்ளும்படி நேரிட்டது! அவள் மண வாழ்க்கை சீராக அமைந்திருந்தால், அவளது கரம் பற்றியவன் அற்பாயுளில் மறைந்து போகாதிருந்திருந்தால் அவள் சேவை முழுவதும் கணவன் ஒருவனுக்குத்தானே கிடைத்திருக்கும்?

இளமையிலேயே கருகிப்போன வாழ்க்கையின் துன்ப நினைவுகளை மறந்து, நிர்மலா மகிழ்ச்சியோடு இருக்கிருள் என்பதில் நான் திருப்தியடைந்தேன். அந்த நிறைவு நீடித்ததா?

ஆஸ்பத்திரி அதிகாரி எழுதிய கடிதம் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. "இரண்டு நாட்களாக நேர்ஸ் நிர்மலா வேலைக்கு வரவில்லை. விடுதியிலும் அவளைக் காணேம். தங்கள் வீட்டுக்கு அவள் வந்திருந்தால் உடனே அழைத்துவரவும். முன்னதாக அனுமதி பெற்றுக் கொள்ளாமல் வேலையைப் புறக்கணித்துவிடுவது பெருங் குற்றம். அவளுடைய பாதுகாவலன் என்ற முறையில் தங்களிடம் இதுகுறித்துப் பேச விரும்புகிறேன். உடனே தயவுசெய்து தாங்கள் ஆஸ்பத்திரிக்கு வர முடிந்தால் நல்லது."

செய்வதறியாது ஒருகணம் தயங்கிநின்ற நான், அக் கடிதத்தை மடித்துச் சட்டைப்பைக்குள் திணித்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன். 'எங்கே போயிருப்பாள், நிர்மலா? சென்னையில் அவளுக்குத் தெரிந்த மனிதர்கள் வேறு யாருமில்லையே? விடுமுறை நாட்களில் எங்கள் வீட்டுக்குத் தானே அவள் வருவது வழக்கம்? அண்ணனிடம் போயிருக்கவும் நியாயமில்லை. அப்படியே போவதாயிருந்தாலும் என்னிடம் தெரிவித்திருப்பாளே?...' என் சிந்தனை வளர்ந்துகொண்டே போயிற்று. ஆனல், அவளைப்பற்றித் தவருக எதுவும் எண்ணுவதற்கு மட்டும் என் மனம் இடந்தரவில்லை.

நான் போனசமயம் ஆஸ்பத்திரி அதிகாரி —அந்தப் பெண்மணிக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும்—வார்ட்டுகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், "நிர்மலா உங்கள் வீட்டுக்கும் வரவில்லையா?" என்று வினவினர்.

அவள் என் வீட்டுக்கு வந்தால் நான் ஏன் அலறிப்புடைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்திருக்கப்போறேன்?

"இல்லையே? உங்கள் கடிதம் கிடைத்தபிறகுதான் எனக்கு விஷயம் தெரிய வந்தது" என்றேன் கவலையுடன்.

"நிர்மலா மிகவும் நல்ல பெண்தான். எனினும் லீவு கோரி ஒரு மனுக்கூட எழுதித் தராமல் இப்படி இரண்டு நாட்களாக வேலைக்குவராமல் இருப்பது ஆஸ்பத்திரி விதிகளின்படி குற்றமாகும். அவள் செய்கை எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாயிருக்கிறதே!" என்ருர் அந்த அதிகாரி கடுமையுடன்.

"அவள் அண்ணவுக்குத் தெரியப்படுத்திவிட்டீர்களா?" என்றேன் பதட்டத்துடன். அவனுக்குத் தெரிந்தால் மிகவும் வேதனைப்பட்டிருப்பான் பாவம்!

"இன்னம் எழுதவில்லை. உங்களைக் கலந்து பேசியபிறகுதான் ஒரு முடிவுக்கு வரலாமென்று எண்ணியிருந்தேன். விபரீதமாயிருக்கிறதே இந்தப் பெண்ணின் போக்கு! அவளைப்பற்றி எவ்வித தகவலுமில்லையே?" என்ருர் அந்த அம்மாள் சற்று அனுதாபம் நிறைந்த குரலில்.

சலவைசெய்த துணிகளுடன் அருகில் நின்ற ஒரு ஆயா தயக்கத்துடன் எங்கள் அருகில் வந்தாள். "எனக்கு ஒரு சந்தேகமுங்க........" என்று இழுத்தாற்போலக் கூறினுள்.

"என்ன சந்தேகம் உனக்கு, ஆயா? நிர்மலாவைப்பற்றியா?" அதிகாரி கேட்ட கேள்வி இது.

"ஆமாங்க. அந்தப் பதினேழாம் நம்பர் 'வார்ட்' இருக்குது பாருங்க—'ஸ்பெசல் வார்ட்'... அதிலே ஒரு பெண்பிள்ளை பத்து நாளைக்கு முந்திப் பிரசவித்து இறந்துபோச்சுதே......"

"ஆமாம், அதற்கென்ன?" —சூபரிண்டெண்டு இடை மறித்துக்கேட்டாள்.

"அந்த அம்மாவைப் பார்க்க அவுங்க புருஷன் அடிக்கடி வந்துபோயிக்கிட்டு இருந்தாரு. அவுங்ககூட நிர்மலா 'கசமுச'ன்னு ஏதோ இரகசியமா பேசிக்கிட்டு இருந்ததை ஜாடையாகக் கவனிச்சேன். இரண்டு மூணு தடவை கவனிச்சேன், ஆனல்,அப்போ அதைப்பற்றித் தவரு எதுவும் நான் நினைக்கேல்லே......ஒருகால் அந்த ஐயாவை விசாரித்துப்பார்த்தால்......"மேலேபேசத் தோன்ருமல் தயங்கினுள், ஆயா.

ஆஸ்பத்திரி அதிகாரி என்னை நோக்கி, "'ஸ்பெஷல் வார்ட்' பதினேளாம் நம்பரில் ஒரு பெண் 'ஸிஸரியன் ஆபரேசன்' செய்யப்பட்டு இறந்தாள். அவள் விலாசத்தை ஆபீசில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். நீங்களே முடியுமானல் அந்த முகவரிக்குச்சென்று விசாரித்துப்பாருங்களேன்?" என்று கூறவும் நான் ஆஸ்பத்திரி அலுவலகத்தை நோக்கி நடந்தேன் நம்பிக்கையின்றி. என் மனத்தில் இப்போது பல சந்தேகங்களும் குழப்பங்களும் தோன்றலாயின.

குறிப்பிட்ட முகவரியைப் பெற்றுக்கொண்டு நான் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினேன்.

நிர்மலா இவ்வளவு கேவலமாக நடந்துகொள்ளக்கூடிய பெண்ணு? ஆயா சொன்னது மெய்யாக இருக்குமா? நிர்மலாவைப்பற்றி அவள் ஏன் அபாண்டமாகப் பொய் கூறவேண்டும்? அவள் சொன்னதை எப்படி நம்பாமலிருப்பது? இரண்டு நாட்களாக அவள் யாரிடமும் சொல்லாமற் கொள்ளாமல் வெளியேறித்தலைமறைவாயிருக்கக் காரணம்? மேயப்போன மாடுகூட அஸ்தமித்தவுடன் கொட்டிலைத்தேடிவந்துவிடுமே? இத்தகைய சூழ்நிலையில் ஆயா கூறியதை நம்பத்தான் தோன்றுகிறது. எவனே, முன்பின் தெரியாத ஒருவனுடன் நிர்மலா ஓடியிருப்பாளா? சே! என்ன பெண் இவள்! அவனைச் சும்மா விடக்கூடாது. மனைவியைப் பறிகொடுத்தவன், மறு வாரமே மற்ளொரு பெண்ணை இழுத்துக்கொண்டு ஓடுவதா? அவனைப் போலீசில் ஒப்படைத்துவிட்டுத்தான் மறுவேலை! ஆனல்...... அப்படிச்செய்வதன்மூலம் நிர்மலாவின் பெயரும் அடிபடத் தொடங்குமே? நிர்மலாவின் பெயருக்கு நாமே களங்கம் விளைப்பதா? சிவராமனுக்கு இது தெரியவந்தால், 'உன்னை நம்பி என் தங்கையை ஒப்படைத்துச் சென்றேனே—அதற்குரிய பரிசா இது?' என்று என்

(12-ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்புத் தமிழ்க் குரவை

வி. சீ. கந்தையா

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

சிலம்பு கூறும் ஆய்ச்சியர் குரவையும், குன்றக்குரவையும் தெய்வவழிபாடு கலந்தனவாகத் தெரிந்தாலும் பலவேறு களிநோக்குகளிலும் குரவையிடும் வழக்கத்தை ஏனைய தமிழ் நூல் சிலவற்றில் காணுகிருேம்.

"அருங்குறும் பெறிந்த
கானவருவகை
திருந்து வேலண்ணற்கு
விருந்திறை சான்மென
நறவு நாட் செய்தகுறவர்தம்
பெண்டிரொடு
மான்ருேற் சிறுபறை
கறங்கக்கல் லென்று
வான்ருேய் மீமிசையயருங்
குரவை" என்னும்

மலைபடுகாடமும் (318—322)

"பெருமலை
வாங்கமைப் பழுநிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையுங்
கண்டே'

என்னும் நற்றிணையும் (276)

"குறியிறைக் குரம்பைக்குரவன்
மாக்கள் வாங்கமைப் பழுநிய
தேறன் மகிழ்ந்து வேங்கைநீழற்
குரவையயரும்" என்னும்

புறப்பாட்டும் (129)

"கொடுந் தொழில் வல்விற்
கொலை இயகானவர்
நீடமை விளைந்த தேக்கட்தேறல்
குன்றகச் சிறுகுடிக்கிளையுடன்
மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக்குரவை
யயரும்" என்னும்

திருமுருகாற்றுப்படையும் (194—197)

(கானவர், குறவர், வேட்டுவர் என்பார்) கட்குடித்துக் குரவையயரும் வழக்குடையாரென்று கூறுகின்றன. ஆயினும் இவர்களது ஆடலிற் குரவைக்கூத்து மகளிர்க்கு மட்டுமே உரியது என்று வரையறைப் படுத்தப் பட்டிலது.

## பழங்கலை

இதுபோலவே மட்டக்களப்புக் காடுகளிலும் மலைச்சாரல்களிலும் வாழும் குறவர் குலத்தாரும், கட்குடித்தாடும் போது குரவையிடுதலைக் காண்கிருேம். அவரும் தலையிற் கலசம், வில், அம்புகள் என்பவற்றைவைத்து ஆடுகின்றனர். அவ்வாடல்களிற் பெண்பாலாரும் கலந்து கொள்ளலும், இருபாலாரும் வாயினற் குரவையொலி கிளத்தலும் வழக்கமாக உள்ளது. அவர்களுடைய ஆடலும் எந்தத்தாள் அமைதிக்கு உட்பட்டது என்று தெரியவில்லை. இக்குரவைக் கூத்தும் தனித்தனி நின்றே ஆடப்படுகிறது. வெயில்மிகுந்த ஆடி ஆவணி மாதங்களில் 'படுவான்' கரை (மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரை) வயல்களில் குறவர் வந்து குடிபுகுந்து சில கூடாரம் அடித்துத் தங்குதலையும் தமது தெய்வமொன்றுக்குச் சடங்கியற்றி உயிர்ப்பலியிட்டு இவ் வாடல் புரிவதையும் நாம் காணலாகும். அவர்கள் பொதுவாக முருகனைக் குறித்தே குரவையாட்டம் செய்கிருர்களென்று தெரிகின்றது.

"கடம்பின் சீர்மிகுநெடுவேட்
பேணித்தழூ உப்பிணையூஉ
மன்றுதொறும் நின்றகுரவை"

என்னும் மதுரைக்காஞ்சியும் (614-615), முருகவேட்குகந்த குரவையாடலைப்பற்றிக் கூறுகின்றது. குறவர் குரவையாடல் புரிதல் பெருவழக்கென்பதையே,

"கிழங்குமருந்தி இருந்தெம்
மொடின்று கிளர்ந்து குன்றர்
முழங்குங்குரவை இரவிற்கண்
டேகுக"

என்ற திருக்கோவையாரும் (127) கூறுகின்றதெனலாம்.

மேலும், மகளிர், கூடிநின்று குரவையிடுதற்குப் பதிலாக, மட்டக்களப்புத் தமிழகத்தின் சில கிராமங்களிலே "செம்பூதுதல்" என்னும் செயல் வழக்கத்தினையும் சிறுபான்மை உடையவராயிருக்கிருர்கள். குறிப்பிட்ட தொகையான மகளிர் கூட்டம் தனித்தனி செம்பை வாயில் வைத்து அதனுள் ஊதிக்கொண்டு பக்கமாகச் சாய்ந்து ஆடுகின்றனர். இதுவும் நடைமுறை இடங்களில் குரவையையே ஒத்தியல்கின்றது. எனினும் குரவை இடுதலோ, செம்பூதுதலோ இங்கு ஆடலாக அன்றி மங்கலமான இன்னெலி கூட்டும் செயல்களாகவே கருதப்படுகின்றன.

சில இடங்களில் மாத்திரம் மணநிகழ்ச்சி முடிந்த பின்னரும் கண்ணகி வழிபாட்டுக்காலத்தும் குரவையிட்டுக்கொண்டே மகளிர் தனித்தனி ஆடுகிருர்கள்.

புதிய நாகரிகப் பழக்கங்களும், மேல்நாட்டு நாகரிகப் படிப்புகளும் வளர, வளர இத்தகைய பண்டைக் கலைவளம் மக்களிடையிலிருந்து விடைபெற்றுக்கொண்டே வருகிறதெனலாம். புதுமைக் கல்வி பயின்ருேர் இப் பழங்கலை நிகழ்ச்சிகளில் மறைந்து கிடக்கும் நுட்பங்களையும் ஆய்ந்தறிந்து இவற்றைப் பேண முற்படுதல் பெரும் பயன் தருவதாகும்.

முற்றும்

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்கும்
சிறந்த இடம்

விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957

மலாயா கபே

உரிமையாளர்: M. K. கதிரவேலு
36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

இதோ வெளிவந்திருக்கிறது! சரித்திர பாடநூல்!

மாணவர் சரித்திரக் காட்சி
(இலங்கையும் உலகமும்)

8ஆம் வகுப்புக்குரியது
(தொன்மைதொட்டு கி. பி. 1500 வரையும்)

ஆக்கியோன்:
வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை
புனிதர் என்றியரசர் கல்லூரி
இளவாலை

கிடைக்குமிடம்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம். விலை ரூ. 3/-

# ஈழ நாட்டில்!

— கவிஞர் : மு. செல்லையா —

— விருத்தம் —

இந்துச முத்தி ரத்தி லின்பஞ்செய்
பொருள்கள் தாங்குஞ்
சுந்தர லங்கா வென்னுந் தோகையை
மணக்குங் காதல்
வந்திடு மேலை நாட்டு வாணிகக்
கப்பல் மைந்தர்
சிந்தையிற் பொங்க அன்னார் செய்செயல்
சிறிதோ அம்மா!

வந்தவர்க் குதவும் பண்பு வாய்ந்தவர்
தம்மை நாடித்
தந்திரப் பகைகள் மூட்டிச் சார்பல
போரை யூட்டி
எந்திரக் கருவி காட்டி இங்குத்தம்
அரண்கள் நாட்டிச்
சொந்தமாய் முழுது மாளுஞ் சூழ்ச்சியில்
தோய்ந்தா ரன்றே!

தந்நல மதுவே நாடித் தருபொருள்
திரட்டி னூர்கள்
எந்நலத் தொழில்க ளெல்லாம் இடையிலே
நலிந்த வன்றோ!
முன்னொரு போதி லீழம் முயற்சியால்
நெல்லை எங்கள்
அன்னைபா ரதத்துக் கீந்த அருங்கொடை
அழிந்த தந்தோ!

உணவினை இழந்தோந் தொன்மை உயர்வினைத்
துறந்தோங் கூட்டு
மணவினை புரிந்தோம். உண்டு வயிற்றையே
பேண லானோம்
இணரெரி அன்ன இன்னா இயற்றியே
கொலைபெ ருக்கும்
* பிணவினை யாலே எங்கும் பெரும்புக
ழீட்டு கின்றோம்.

இடையிலே புகுந்த உத்தி யோகமாம்
இனிமை யாலே
நடையிலே மாற்றஞ் செய்தோம் நம்கலா
சாரம் விட்டோம்
படையிலா யுதமி ழந்த பான்மையாய்
யாவர் மாட்டும்
மடையிலே துரும்பு போலும் வளர்துடிப்
பெய்திற் றிந்நாள்.

இன்றுநாம் கண்வி ழித்தே இறையள
வாக வேனும்
குன்றிய பழமை மீட்குங் கொள்கையில்
முயலா விட்டால்
துன்றிய துன்ப மென்னுஞ் சூறையில்
தூசி போல
நன்றிழிந் தல்லல் சேர்வோம் நாட்டுளீர்!
விரைவீர்! நன்கே!

* கொலைச் செயலில் இலங்கை முதலிடம் பெற்றமையைக் குறிக்கிறது.

இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்றோ - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:
புதிய மலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி
268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# வான வெளியில்

பெ. நா. அப்புஸ்வாமி

வானவெளியைப் பகலிலே பார்த்தால், சூரியன் ஒன்று மட்டுமே தகதக என்று விளங்கிக் கொண்டிருப்பது தெரியும். இரவிலே சூரியன் மறைந்த பின் பார்த்தாலோ, எண்ணிறந்த நட்சத்திரங்கள் தோன்றும். அவற்றின் இடையிடையே சிற்சில கோள்களும் காணப்படும். சிற்சில நாட்களிற் சந்திரன் தோன்றும், சிற்சில நாட்களிலே தோன்றாது. இவை எல்லாவற்றிலும் மிகப் பெரியது எது?

### கண்கூறும் சான்று


வெறும் கண்களாலே பார்க்கும்போது சூரியனே மிகப் பெரியது என்றும், சந்திரன் அதற்கு அடுத்தபடியாகப் பெரியது என்றும், சொல்லத் தோன்றும். இவற்றுக்கு அடுத்தபடியாக உள்ளவை மிகச் சிறியவை. அவற்றுள் சுக்கிரன், வியாழன், செவ்வாய் என்னும் கோள்களும் லுப்தகன், அகத்தியன், சுவாதி, திருவாதிரை, சித்திரை, கேட்டை என்னும் நட்சத்திரங்களும், சிறிய வடிவில் உள்ளவற்றிலே பெரியவையாகத் தோன்றும். இவை எல்லாவற்றையும் விட நமது பூமியே நமக்கு மிகமிகப் பெரியதாகத் தோன்றும்.

### பெரிது பெரிது, புவனம் பெரிது

பூமியிலே வாழும் நமக்கு நமது பூமியே மிகமிகப் பெரியதாகத் தோன்றுகிறது. நம்மோடு ஒப்பிடும்போது, அது உண்மையில் மிகப் பெரியது என்பது ஐயம் இல்லை. பூமி உருண்டை வடிவமானது. அதன் விட்டம் 8,000 மைல். ஆகவே, ஔவை சொல்லியபடி, புவனம் பெரிதுதான் — வெறும் கண்ணளவாற் பார்த்து முடிவுசெய்தால்.

### கருவிகளின் சான்று

ஆனல், வானநூல் நிபுணர்கள் பலவகையான கருவிகளின் துணையைக் கொண்டு, நமது பிரபஞ்சத்தில் உள்ள பற்பல வானப் பொருள்களின் அளவைக் கவனித்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் கூறுவது நம்முடைய வெறும் கண்கள் கூறும் சாட்சியத்திற்கு மிகவும் மாறாக உள்ளது.




படம் 1

பூமி நடுவில் உள்ளது. அதன் அளவு அவ்வளவானால், வியாழனின் அளவு எவ்வளவு, சந்திரனின் அயனவீதியின் அளவு எவ்வளவு, சூரியனின் அளவு எவ்வளவு என்றெல்லாம் இந்தப் படம் காட்டுகிறது.

### சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும்

சந்திரன் பூமியையும் சூரியனையும்விடச் சிறிதுதான். அது நட்சத்திரங்களை விடப் பெரியது அன்று. சூரியன் சந்திரனை விடப் பெரியது. பூமியைவிடச் சிறியது அன்று. ஆனல், எத்தனையோ நட்சத்திரங்களை விட அது சிறியது. இச் செய்திகள் எல்லாம் வியப்பாகத் தோன்றுகின்றன, அல்லவா? வானநூல் நிபுணர் கூறுவது நம்முடைய நேர் அனுபவத்திற்கு மாறாகத் தோன்றுகிறது. உண்மையில், அவர்கள் கணக்குப்படி பெரியவை யாவை? படிப்படியாகப் பார்ப்போம்.

### 1. சந்திரன்

சந்திரனின் விட்டம் 2,160 மைல், அதாவது, நமது பூமியின்விட்டத்திற் காற்பங்குக்குச் சற்றே அதிகம். அது பூமியைச் சுற்றி, சராசரியில், ஏறத்தாழ 240,000 மைல் தூரத்தில் ஓடி வருகிறது. அந்த அயனவீதியின் விட்டமானது பூமியின் விட்டத்தைப் போல் ஏறத்தாழ $60\frac{1}{4}$ மடங்கு பெரிது.

### செவ்வாய் முதலியவை


பூமியை விடச் செவ்வாய், சுக்கிரன் என்னும் இரண்டு கிரகங்களும் சிறியவை. வியாழன் மிகப் பெரியது. அதன் விட்டம் பூமியின் விட்டத்தை விட ஏறத்தாழ பதினெரு மடங்கு பெரிது. சூரியன் பூமியைவிட மிகமிகப் பெரியது. அதன் விட்டம் ஏறத்தாழ 865,000 மைல். அதாவது பூமியின் விட்டத்தைப் போல் நூற்றென்பது மடங்கு பெரியது.

### லுப்தகன்

லுப்தகன் என்பது வானவெளியிலே உள்ள நட்சத்திரங்களில் எல்லாம், மிகப் பிரகாசமாகத் தோன்றுவது. இதை மேல் நாட்டிலே ஸிரியஸ் என்று வழங்குகிறார்கள். இதன் விட்டம் சூரியனின் விட்டத்தைப் போலவே கிட்டத்தட்ட இரு மடங்கானது. இது சுவான மண்டலம் என்று சொல்லப்படும் நட்சத்திரக் கூட்டத்தைச் சேர்ந்தது.

### சுவாதி

அதைக் காட்டிலும் பெரியது சுவாதி. இது பூதேச மண்டலத்தைச் சேர்ந்தது. இதன் விட்டம் இரண்டு கோடி மைல். அதாவது, சூரியனின் விட்டத்தைப்போல் இதன் விட்டம் இருபத்து மூன்று மடங்கு பெரிது.




படம் 2


நடுவில் உள்ளது சூரியன். அதன் அளவு அவ்வளவானல், லுப்தகனின் அளவு எவ்வளவு, சுவாதியின் அளவு எவ்வளவு, ரோகிணியின் அளவு இவ்வளவு என்றெல்லாம் படம் காட்டுகிறது.

### 2. ரோகிணி

அதையும் விடப் பெரியது ரோகிணி. ரோகிணியின் விட்டம் 31,000,000 மைல். அதாவது, சூரியனது விட்டத்தைப் போல் முப்பத்தாறு மடங்கு உள்ளது. இது இடப ராசியைச் சேர்ந்த நட்சத்திரம். இடபத்தின் ஒரு கண்ணை இதைக் கற்பனை செய்திருக்கிறார்கள்.

### 3. கேட்டை

இத்தனை பெரிய ரோகிணியைக் காட்டிலும் பெரியது கேட்டை. தேள் வடிவமாகக் கற்பனை செய்யப்பட்ட விருச்சிக ராசியில் தேளின் நடு உடலில், செந்நிறமான காந்தியோடு அது ஒளிவீசுகிறது. இதன் தோற்றம் அநேகமாகச் செவ்வாயின் தோற்றத்தைப் போல் இருக்கும்—இரண்டும் செந்நிறமாகத் தோன்றுவதால். ஆனல், செவ்வாய் என்பது நின்று ஒளிவீசும் கோள்; கேட்டை என்பது மினுமினுத்து ஒளிவீசும் நட்சத்திரம். ஒன்று பூமியைவிடச் சிறியது; மற்றொன்று பூமியைவிடப் பல்லாயிர மடங்கு பெரியது. இதன் விட்டம் 245,000,000 மைல். அதாவது, சூரியனின் விட்டத்தைப்போல் இருநூற்று எண்பத்தைந்து மடங்கு பெரியது கேட்டை நட்சத்திரத்தின் விட்டத்தின் உள்ளே சூரியனும் சூரியனைச் சுற்றி ஓடும் புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய் ஆகிய கோள்களும் அவை வானவெளியிலே ஓடிவரும் பாதையும்கூட அடங்கி விடும்.




படம் 3

நடுவில் உள்ளது உரோகிணி, உரோகிணியின் அளவு அவ்வளவானல் கேட்டையின் அளவு எவ்வளவு, எப்சிலன் ஆரைகாவின் அளவு எவ்வளவு என்றெல்லாம் படம் காட்டுகிறது.

### இராம பாணம்

இவற்றை எல்லாம் விடப் பெரிய நட்சத்திரங்களும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று ஆரைகா என்று மேல்நாட்டிலே சொல்லப்படுவது. இந்தச் சொல்லுக்குத் தேர்ப்பாகன் என்பது பொருள். இதை நமது நாட்டிலே பிரம்ம மண்டலம் என்று சொல்லுகிறார்கள். இதிலுள்ள மூன்று நட்சத்திரங்களில் மேலைநாடுகளில் ஆட்டுக்குட்டிகளின் வடிவத்தைக் கற்பித்தார்கள். நமது நாட்டிலே இம் மூன்றை இராம பாணம் என்று சொல்லுகிறார்கள். அம்பின் நுனியைப் போல் முக்கோண வடிவமாக அமைந்தவை இவை. இவற்றுள் அம்பு முனையில் உள்ளது எப்சிலன் ஆரைகா என்னும் நட்சத்திரம். இது கண்ணுக்குச் சற்றே மங்கலாகவும், சிறியதாகவும் தெரியும். ஆனல், உண்மையில் இது ஒரு மிகப் பெரிய நட்சத்திரம். இதன் விட்டம் சூரியனின் விட்டத்தைப்போல் 2700 மடங்கு பெரியது. பூமியின் விட்டத்தை விட ஏறத்தாழ மூன்று இலட்சம் மடங்கு பெரியது.

### இதைக் காட்டிலும் பெரிது உண்டோ?

ஹெர்க்குலிஸ் என்று மேற்கத்தி நாடுகளிற் சொல்லப்படும் நட்சத்திர மண்டலத்துக்கு நமது நாட்டில் ஹரகுலேச மண்டலம் என்று பெயர். இந்த மண்டலத்தின் முக்கிய நட்சத்திரமாக உள்ள நட்சத்திரத்திற்கு அராபியர்கள் ராஸ் ஆல்ஜெதி என்று பெயரிட்டார்கள். இதுவரை கணக்கிட்டபடி இதன் விட்டம் சூரியனது விட்டத்தைப் போல் 800 மடங்கு பெரிதானது. பூமியின் விட்டத்தைவிட மூன்று லட்சம் மடங்கு பெரிது.

### பெரிதினும் பெரிது

ஆனல், அண்மையில் ருஷிய வானவிற்பன்னர்கள் சிலர் இதன் அளவு இன்னும் மிகப் பெரியது என்றும், இதன் விட்டம் சூரியனின் விட்டத்தைவிட 200,000 மடங்கும், எப்சிலன் ஆரைகாவின் விட்டத்தைவிட 75 மடங்கும் பெரியது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே, இதன் விட்டம் ஏறத்தாழ, 193,000,000,000 மைல்.

பெரியது கேட்கின், இதுவே
பெரியது
இதனது பெருமை சொல்
லவும் பெரிதே.

## மாதர் பகுதி

பேச்சு என்பது ஒரு செல்வம். இதை இடத்திற்கும் காலத்திற்கும் ஒப்ப சமயம் அறிந்து உபயோகிப்பதுதான் கடமை ........சமயோசிதமான பேச்சு வாழ்வை வளம் செய்யும்; தவறான பாதையிலே செல்லாமல் தடுக்கும். சமயம் தெரியாமல் பேசிவிட்டதனால் பலவகையான நஷ்டங்களும், தீமைகளும் ஏற்பட்டதும் உண்டு.

# ★ பேச்சுக்கலை ★

பேச்சு என்பது கடவுள் நமக்கு அளித்திருக்கும் வரப்பிரசாதம். எழுத்திலே கோணல் மாணல் இல்லாமல் வரிவடிவம் அழகாக அமைந்து இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமல்லவா? அதுபோலவே பேச்சிலும் ஒலி வடிவம் அழகாக அமைந்திருக்க வேண்டும். கேட்போரை வசீகரித்து, வியக்கச் செய்யும் முறையிற் சொற்கள் இருக்க வேண்டும். சிறந்த சொற்களோடு இனிய முறையில் உணர்ச்சி வேறுபாடுகள் தோன்றக் கூடியதாகவும் அமைய வேண்டும். குரலிலே கவர்ச்சி, வாக்கியங்களைச் சொல்லுவதிலே அழகு, சுத்தமான உச்சரிப்பு, பொருளின் தகுதிக்கும் உணர்ச்சிக்குமேற்ப குழைவு நெளிவு முதலிய உத்திகளைக் கையாளுபவர்கள் சிறந்த பேச்சாளராக விளங்கலாம். இது மேடைப்பேச்சுக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. நம்முடைய தினசரி வாழ்க்கையிலும் இது நல்ல பயன் தரும்.

பேச்சு என்பது ஒரு செல்வம். இதை இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப சமயம் அறிந்து உபயோகிப்பதுதான் நமது கடமை. மனத்தில் கள்ளமில்லாமலும் நல்ல எண்ணத்தோடும் பேசலாம். ஆனால் அது அந்த இடத்திற்கும் காலத்திற்கும் பொருத்தமில்லாவிடிற் பயனற்றுப் போகிறது. அதுமட்டுமல்ல, சிற்சில சமயங்களில் தீமை விளையவும் காரணமாகிறது. பொதுவாக நமக்குச் செவிகள் திறந்திருப்பானேன்? வாய் மூடியிருப்பானேன்? என்பது பற்றி நமது பெரியோர்கள் பின்வருமாறு சொல்வதுண்டு.

"பிறர் சொல்லுகின்றவைகளையெல்லாம் இருமடங்காக இரு செவிகளாலும் ஏற்றுக்கொள்ள வேணும். அதன் பொருட்டே செவிகளுக்கு மூடி இல்லை. ஆனால் பேசும்பொழுது முன்யோசனையின்றி மனம் போனபடி பேசிவிடக்கூடாது. மும்முறை யோசிக்கவேண்டும் என்பதன்பொருட்டே நாவுக்குப் பற்களையும் உதடுகளையும் காவலாக அமைத்திருக்கிறார். ஆகவே, நீ சொல்ல விரும்புவதை தடதடவென்று மனம் போனபடி பேசிவிடாதே. சிந்தித்துப் பேசு" என்றனர்.

இது சாதாரணமான பேச்சைப் பொறுத்த விஷயம், பேசுவது அழகாகவும், இனிமையாகவும், நன்மை பயப்பதாகவும் இருக்கவேண்டும். பயனற்ற பேச்சுக்களிலே பொழுதைச் செலவிடுதல் நன்மையன்று. பேசுவது சமயோசிதமாக இருக்கவேண்டும். சமயோசிதமாகப் பேசுவது என்பது அறிவின் வளர்ச்சியையும் ஆராயும் திறனையும் தீர்க்காலோசனையையும் குறிக்கிறது. இது எல்லோருக்குமே எளிதில் கைவருவதில்லை. பழக்கம் காரணமாக வரவேணும். நன்றாகப் பேசுவது, பிறர் மனம் நோகாமற் பேசுவது என்பதே ஒரு தனிக்கலை. அதை அனுபவம் என்ற நல்லாசிரியர்தான் கற்றுக்கொடுக்கிறார். சமயோசிதமாகப் பேசுவது என்பது நாமும் முயற்சிசெய்து பயிற்சிபெற வேண்டிய ஒரு கலை. இதை நம்முடைய தினசரி வாழ்க்கையிலே பயன்படும்படி செய்து கொள்ள வேண்டும்.

சமயோசிதமாகப் பேசுவதனால் பல நன்மைகள் விளையும். பெரிய தவறுகள் செய்பவரைத் தடுக்கலாம். வீண் மனத்தாங்கலும் மனக்கசப்பும் ஏற்படாமல் தடுக்கும். இப்பொழுது நாம் இந்த அவசர யுகத்திலே வாழ்கின்றோம். செயல் குறைந்து பேச்சு அதிகரித்துவிட்டது. பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் சிறு பெண்கள் முதல் கல்லூரி மாணவிகள் வரையில் தெரிந்தோ, தெரியாமலோ அதிகமாகச் சொளசொள வென்று பேசுகிறார்கள். இக்காரணமாக அடக்கம் குறைகிறது. சக்தி

* குகப்பிரியை *

வீணாகிறது. மனம் போனபடி பேசுவது வழக்கமாகவே ஆகிவிடுகிறது. மாணவிகள் மட்டுமென்ன? வீட்டிற் பெரும்பான்மையோரும் ஆற அமர ஒருவரோடொருவர் அளவளாவிப் பேசுவது குறைந்து அரையும், குறையுமாய், நின்றுகொண்டும், நடந்துகொண்டும் முழுவதும் கவனியாமலும் பேசத் தொடங்கிவிட்டோம். வேலைகள் அதிகமிருக்கும்பொழுது சிந்தித்துப் பேசும் திறனும் குறைந்து வருகிறது. ஒருவரை ஒருவர் விளங்கிக்கொள்வதில்லை. ஒருவர் தம் நோக்கத்தைச் சொல்லி முடிக்குமுன்பே நாம் தவறாக விளங்கிக்கொண்டு பதில் பேசிவிடுகிறோம். இப்படி ஒரு நிலை அவசரம் காரணமாக ஏற்பட்டுவிடுகிறது.

இந்தமாதிரி நிலை மாறி அமைதியாகப் பேசும்பொழுது தான் விஷயங்கள் தெளிவாகிறது. அப்படிப் பேசும்பொழுதும், அமைதி குறைவான சந்தர்ப்பங்களிலே பேசும்பொழுதும் சமயோசிதமாய்ப் பேசுவதுதான் நன்மை தரும்.

சமயோசிதமான் பேச்சு வாழ்வை வளம்செய்யும்; தவறான பாதையிலே செல்லாமல் தடுக்கும். சமயம் தெரியாமல் பேசிவிட்டதனால் பலவகையான நஷ்டங்களும், தீமைகளும் ஏற்பட்டதும் உண்டு. நம்முள் அநேகர் ஏதாவது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமில்லாதவைகளைச் சொல்லிவிட்டு, பிறகு ஏன் சொன்னோம் என்று வருந்துவதும் உண்டு. இதற்கு நமது தினசரி வாழ்க்கையிலே சிறுபொறி பெருநெருப்பாகும் பூசல்களை உண்டாக்குவதைப் பார்க்கலாம். வடநாட்டிலே ஒரு ரஜபுத்தர பெண், கணவனும், அவள் தம்பியும் சாப்பிடுகிறார்கள். தம்பி சுத்தமாய்ச் சாப்பிட்டான். கணவன் நாற்புறமும் சோற்றை இறைத்திருந்தான்—பேசத் தெரியாத அந்தப் பெண் கணவனை நோக்கி "தம்பி கச்சிதமாய்ச் சாப்பிட்டு விட்டான் நீங்களும் சாப்பிட்டிருக்கிறீர்களே!" என்று கேலியாகத்தான் பேசத்தொடங்கினாள். ஆனால் சந்தர்ப்பம் சரியாயில்லாத காரணத்தால் "நீங்களும் சாப்பிட்டிருக்கிறீர்களே" என்றதும் கணவன் "நாய்போல்" என்று சொல்லிவிட்டான். தான் சொன்னதோடுமல்லாமல் அப்படிப் பொருள்படத்தான் பேசினாள் என்று கருதிப் போர்செய்யவே முற்பட்டுவிட்டான். இது சரித்திரம் கண்ட உண்மை. சமயோசிதமாய்ப் பேசத் தெரியாததனால் விளைந்த தீமை.

இதேபோல் நம் வீடுகளில் நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நடக்கின்றன. உதாரணமாக என் தோழி விமலா பழமொழிகளை உபயோகித்துப் பளிச்சென்று பேசிவிடுவாள். சிலசமயங்களில் மிகவும் அருமையான விஷயங்களை ஒரு பழமொழியினாலே விளக்கிவிடுவாள். ஆனால் சமயோசிதமாகப் பேசவேணுமென்பதை மறந்துவிடுவாள். ஒருசமயம் ஒரு முதியவர், பெருஞ் செல்வர் எதிர்பாராதவகையிலே பொருள் நஷ்டமடைந்துவிட்டார். அவர் மிகுந்த வருத்தத்தோடு தமது மனநிலையைத் தெரிவித்தார். இவளும் அவருக்கு ஆறுதல் கூறவேணுமென்ற நல்ல எண்ணத்தோடு தான் பேசினாள். "இதென்ன பெரிய நஷ்டமா? யானை படுத்தாலும் குதிரை மட்டத்திற்குக்கீழ் போய் விடுமா?" என்று கூற விரும்பியவள் "இனி பெருங்காயம் வைத்தபாண்டம்போல்தான்" என்று சொல்லிவிட்டாள். இது அம் முதியவருக்குத் தம்மைப் பரிகாசம் செய்கிறாள் என எண்ணி இதனால் விபரீதங்கள் பல விளைந்தன. இவை சமயோசிதமாகப் பேசத் தெரியாததற்குச் சிறந்த உதாரணங்கள்.

இன்னொரு பெண்மணி செல்லம்மாள் அவள் அத்தைமகனுக்கே வாழ்க்கைப்பட்டிருந்தாள். கணவனுக்கும், அவன் தம்பிக்கும் மனத்தாங்கல்.காரசாரமான சண்டை. அதிலே இவளைப்பற்றியும் தம்பி குற்றம் சாட்டியிருக்கிறான். ஒருநாள்; நடுப்பகல். தம்பி வெளியே சென்றிருந்தான். தமையன் செல்லம்மாளை அழைத்து, நேற்று என் தம்பி அதைச் சொன்னான், இதைச் சொன்னான் என்று வரிசையாகக் குற்றப்பத்திரிகை படிக்கலானான். வெளியே சென்றிருந்த தம்பி திரும்பிவரும் நேரம் என்பதை அவள் அறிந்தாள். அவள் அத்தை பாவம்! பிள்ளைகளுக்கிடையே பேச வகையறியாத வளாய்த் திணறிக்கொண்டிருந்தாள். கணவனது குற்றப் பத்திரிகையனைத்தையும் ஆகா! அப்படியா சொன்னார் என்று வியப்புடனே ஏற்றுக்கொண்டாள் செல்லம்.

(தொடரும்)

### இந்திரா காந்தியின் நற்குணம்

இந்திரா எனது மகள். அவளை நான் நேசிக்கிறேன் எனச் சொல்லவேண்டியதில்லை. அவளின் நற்குணங்களைப் பற்றியும் சேவை செய்ய அவளுக்குள்ள ஆர்வம் பற்றியும், அவளின் நேர்மை, உண்மை பேசுதல் போன்ற அம்சங்களைப் பற்றியும் நான் பெருமையடைகின்றேன். என்னிடமிருந்து என்ன அம்சங்களை அவள் பெற்றிருக்கிறாளோ நான் அறியேன். ஒருவேளை இந்த நல்ல அம்சங்களை எல்லாம் அவள் தனது தாயிடமிருந்து பெற்றிருக்கலாம்.

—நேருஜி

### குழந்தை அறிவு

குழந்தைகளை வளர்ப்பது பெரிதல்ல; அவர்களின் அறிவை வளர்ப்பதே அதைவிடப் பெரிது. அல்லது தானே வளரும் அறிவையாவது தடைப்படுத்தாமலிருப்பது நல்லது.

"சோற்றை உருட்டாதே! உருட்டினால் தாய் தகப்பனை உருட்டி விடுவாய்!" என்று சொல்லாதீர்கள்.

"சோற்றை உருட்டிக் கொண்டிராதே! விரைவாய்ச் சூட்டோடு சாப்பிடு. இன்றேல் சமிக்காது" எனச் சொல்லுங்கள்.

"சாப்பிடும் போது ஒரு விரலை நீட்டிக் கொண்டே சாப்பிட்டால் விரல் நகத்தாற் கண்ணுக்கு ஆபத்து" எனச் சொல்லுங்கள்.

"இரண்டு கழுதைக்கு மத்தியிற் போகாதே! போனால் சாஸ்திரத்துக்கு ஆகாது" எனச் சொல்லாதீர்கள்.

"இரண்டு கழுதைக்கு மத்தியிற் போகாதே! போனால் எந்தக் கழுதையாவது ஒரு கழுதை உதைக்கும்" எனச் சொல்லுங்கள்.

கி. ஆ. பெ. வி.

### உண்மை வாழ்வு

விவாகஞ் செய்து கொண்ட தம்பதிகள் ஒருவரையொருவர் மதிக்கவும், நேசிக்கவும், கூட்டாளிகளாக வாழ்க்கை நடத்தவும் பயிலவேண்டும். காதலில்லை, தாய்தகப்பனார் செய்வித்த மணம், இது உப்பில்லாத சோறு பிறநாடுகளில் எவ்வளவு காதல், கதைகளிற் படிக்கிறோம். சினிமாவிற் பார்க்கிறோம். அதுவல்லவோ உண்மையான வாழ்வு என்று ஏக்கமடைந்து ஏமாற வேண்டாம். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நம்முடைய நாட்டிலும் ஆண் பெண்கள் கூடி உயர்வும் நயமும் பொருந்திய வாழ்வு நடத்தலாம். மின்னலைக் காண்கின்றோம்; அது உண்மையான வேகம், அழகான காட்சி. ஆயினும், மின்னல் மின்னினால்தான் மழை என்ற நியதி கிடையாது. மின்னல்தானாக உண்டாகும். உண்டானால் அழகுதான். ஆனால் மின்னல் இருப்பினும், இல்லையாயினும் மேகங்கள் கூடி மழை பெய்கின்றன அல்லவா? அப்படிப் பெய்வதால்தான் வாழ்வு.

—இராஜாஜி

★ பெண்களுக்குத் தேவையான நவநாகரிகமான பொருள்களுக்கும்

★ மற்றும் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களுக்கும்

★ "ரேயல்" தலைமுடிகளுக்கும்

சிறந்த இடமெனப் பெண்கள் கூறுவது

பென்ஸி பலெஸ்

ஒன்றே!

மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் பத்திரிகைப் பிரதிநிதிகளை அழைத்து மாநாடுகள் ஏற்படுத்துவது வழக்கம். இம்மாநாடுகளிற் பல்வேறு பத்திரிகைகளின் பிரதிநிதிகள் நாட்டின் அரசியல் சம்பந்தமாக எழும் சந்தேகங்களுக்குக் குடியரசுத் தலைவரிடமிருந்து விளக்கம் பெறுவார்கள். சமீபத்தில் அமெரிக்கா சென்று திரும்பிய சென்னை 'ஹிந்து'ப் பத்திரிகையின் துணையாசிரியர் திரு. எஸ். ஏ. கோவிந்தராஜன் அத்தகையதொரு மாநாட்டைப்பற்றி இங்கு எழுதியுள்ளார்.

# அமெரிக்காவின் குடியரசுத்தலைவர்

## பத்திரிகைப் பிரதிநிதிகளைச் சந்தித்தல்

அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐஸன்ஹோவர் அமெரிக்கப் பத்திரிகையாளரையும் வானொலிச் சேவையாளரையும் காலத்துக்குக் காலம் சந்திப்பது வழக்கம். அவருடைய பத்திரிகைக் காரியதரிசியின் கைச்சாத்துடன் அழைப்புகள் அனுப்பப்படும். பிறநாட்டுப் பத்திரிகையாளருக்கும் இவ் வழைப்புக் கிடைப்பதுண்டு.

"...பத்திரிகையின் பிரதிநிதியாகிய திரு......... அவர்களை அமெரிக்க குடியரசுத் தலைவர் பென்ஸில்வேனியா அவென்யூ, 17 ஆவது வீதியிலுள்ள நிர்வாகக் காரியாலயக் கட்டடத்தின் 434 ஆவது அறையில்... திகதியன்று காலை 10-30க்கு நடைபெறும் செய்தி மாநாட்டுக்கு வரும்படி அழைக்கிறார்" என அழைப்பிதழிற் கண்டிருந்தது.

பத்திரிகைத் தொழிலிற் பழுத்தவர்களுக்குக்கூட இந்த அழைப்பு ஒரு கிளுகிளுப்பைக் கொடுக்கும். உவாசிங்டனில் உள்ள குடியரசுத் தலைவரின் வாசத்துக்கு அடுத்ததாக அமைந்த இக்கட்டடத்துக்கு ஒகஸ்ட் மாத முற்பகுதியில் ஒரு கலகலப்பான புதன் கிழமையன்று மிகுந்த ஆவலுடன் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

### பிரதிநிதிகள் கூடினர்

பல அமெரிக்கப் பத்திரிகையாளரும் என்னைப் போன்ற வெளிநாட்டவர் சிலரும் அங்கு கூடினேம். தலைநகரிலும் பிற நகரங்களிலுமுள்ள பிரபல பத்திரிகைகளின் பிரதிநிதிகள் அனைவரும் குழுமியிருந்தார்கள். சில பத்திரிகைகளிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்டவர்களும் வந்திருந்தார்கள். ஒரு பெரிய நியூயோர்க் பத்திரிகையைப்பற்றிய கதையொன்று இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது. அப் பிரமாண்டமான பத்திரிகையின் ஊழியர் பலர் சில சமயம் இச் செய்தி மாநாடுகள் ஒன்றிலேதான் ஒருவரை ஒருவர் சந்தித்து அறிமுகப்படுத்தப் பட்டதுண்டாம்! அத்தனை பெரிய தாபனம் அது. எழுதுவதற்கோ, அச்சடிப்பதற்கோ வசதியான மேசைகள் உள்ள ஒரு அறைக்குள் அனுமதிக்கப் பட்டோம். சில நிருபர்கள் கொண்டுதிரிவதற்கு வசதியானதும், கொஞ்சமும்சத்தம்போடாதனவும், சுருக்கெழுத்தைத் தட்டெழுத்தால் பொறிக்கக் கூடியனவுமான நூதன இயந்திரங்களைக் கையோடு கொண்டு வந்திருந்தார்கள். இந்தியாவிற் போல வார்த்தைக்கு வார்த்தை பேசப்பட்டதன் குறிப்புகளை எடுப்பதில் இவர்களுக்கு அக்கறை இல்லை. அப்படிவேண்டுமானல், அதற்கென உள்ளவர்கள் தயாரிக்கும் உத்தியோக பூர்வமான அறிக்கைகளைப் பின்பு பெறலாம். முக்கிய சிக்கல்கள் சம்பந்தமாக நிர்வாகத்தின் (அரசாங்கத்தின்) நோக்கங்களென்ன, இலட்சியங்கள் என்ன என்பதை ஆராய்வதே நிருபர்களின் வேலை. அவ் வேளையில் மக்கள் மனதைக் குடைந்துகொண்டிருந்தசிக்கல், மத்திய கிழக்கு காரணமாக உயர்வட்ட மாநாடு ஒன்று நடைபெறுமா என்பதுதான். அதைப் பற்றித் துருவித்துருவிக் கேட்டார்கள். பக்குவமான கேள்விகளுக்குக் கிடைக்கும் விடைகளை நிதானித்து அலசினர்கள். அவற்றில் உள்ளர்த்தம் ஏதாவது தொனிக்கிறதா என்று தலையை உடைத்தார்கள்.

### தலைவர் வந்தார்

குசுகுசுவென்ற பேச்சொலி முடிந்தது. எல்லோரும் எழுந்துநின்றேம். பக்கத்தில் உள்ள ஒரு வாயில் வழியாக குடியரசுத் தலைவர் உள்ளே நுழைந்தார். இரண்டு, மூன்று மெய்க்காப்பாளர் தொடர்ந்தனர். சர்வவியாபகமான பத்திரிகைக் காரியதரிசியும் பின்னலேயே வந்தார். ஐஸன்ஹோவர் வணக்கம் தெரிவித்தார். எங்களை அமருமாறு சொன்னர்.



எஸ். ஏ. கோவிந்தராஜன்

ஒலிபெருக்கியின் முன்னல் நின்று ஒரு சிற்றறிக்கை விடுத்தார். 'சரி, கேளுங்கள்' என்ருர். மெய்க் காப்பாளர் கூடப் பின்னல் அமர்ந்து விட்டனர். ஆனல் மாநாடு முடிவடையும் வரை, அரைமணி நேரத்துக்கு, குறுக்குக் கேள்விகளால் தாக்கப்பட்டபோது, குடியரசுத் தலைவர் உட்காரவில்லை. அவர் நின்று கொண்டே பதிலிறுத்தார். கேள்வி கேட்பவர்கள் தங்கள் பெயர்களையும் தங்கள் தாபனங்களின் பெயர்களையும் முதலிற் கூறிவிட்டு வினக்களை விடுத்தனர். பலர் ஒரே நேரத்தில் எழுந்தபோதெல்லாம் குடியரசுத்தலைவர் பொறுமையுடன் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் அளித்தார். சனநாயகம் என்ருல் இதுவல்லவா சனநாயகம்! மக்கள் தலைவன் தன் பொறுப்பு வாய்ந்த வேலைகளை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு மக்களின் பிரதிநிதிகளுக்கு விளக்கம் தருகிருர். ஆண்களும் பெண்களும் அரைமணி நேரமாகக் கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி கொடுத்தார். நிதானம் தவறவில்லை. தன்னம்பிக்கை தயங்கவில்லை, நகைச்சுவைக் குப்பஞ்சமில்லை. இடையிடையே ஆவேசத்துக்கும் உணர்ச்சிக்கும்கூட இடமிருந்தது. நேரமானதும் மணிக் கூட்டைப் பார்த்தார். நிருபர்கள் விளங்கிக் கொண்டனர். அவர்களில முதியவர் ஒருவர் எழுந்து 'எங்கள் நன்றி' என்ருர். மெய்க் காப்பாளர் சகிதமாக 'ஐக்' 'விறுக்' கென்று வெளியேறினர். அதன்பிறகு பார்க்கவேண்டுமே! வரிசையாக இருந்த தொலைபேசிகளுக்கு ஓட்டம் பிடித்தார்கள் சிலர். காரியாலயத்துக்கே போய்விடலாம் என்று கருதியவர்கள் மோட்டாரை நோக்கிப் பறந்தார்கள். மாநாட்டின் செய்தி பற்றிய அறிக்கைகள் அமெரிக்காவின் சகல பாகங்களுக்கும், உலகனைத்துக்கும் நொடிப்பொழுதிற் பறந்தன.

### சனநாயகத்தின் சின்னம்

குடியரசுத் தலைவரின் செய்தி மாநாடு உயிருள்ள சனநாயகத்தின் விளைவு, துடிப்புள்ள சனநாயகத்தின் சின்னம். இது பிரிட்டிஷ், இந்திய பாராளுமன்றங்களில் நடைபெறும் 'கேள்வி நேரத்துக்கு' ஒப்பானது. சில வகைகளில் சிறந்தது என்றும் கூறலாம். இது அரசியல்வாதிகள் கூடி ஓர் அமைச்சரின் காலை இடறிவிடும் விளையாட்டல்ல. நிர்வாக ஊழலை அம்பலப்படுத்தும் முயற்சியுமல்ல. பத்திரிகையாளர் உள்ளதையுள்ளபடி அறிய உபயோகப்படும் ஒரு வாய்ப்பு மட்டும்தான். சில பத்திரிகைகளும் வானெலிகளும் கட்சிச் சார்புடையன. அவை இந்த அறிக்கைகளை வைத்துக் கொண்டு தங்கள் கட்சிப் பிரசாரம் செய்வதும் உண்டு. ஆனல், அங்கு வருபவர்களிற் பெரும்பாலோர் ஆட்சியாளர் கொள்கை, நடைமுறை ஆகியவற்றிலே தெளிவற்ற பகுதிகளைப் பற்றி விளக்கம் தேடுவதற்கே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவர். பாராளுமன்றம் கூடினல்தானே 'கேள்வி நேரம்'? காங்கிரஸ் கலைந்திருக்கும் வேளையிலும், அவர்கள் கூடுமிடத்தில் ஊர்பார்ப்பவர்களைத் தவிர வேறு யாரும் கவனிப்பாரற்ற சமயத்திலும் இச் செய்தி மாநாடு ஒழுங்காக நடைபெறும். இங்கு கேட்கப்படும் கேள்விகளின் தன்மைக்கும் தரத்துக்கும் கட்டுப்பாடு கிடையாது. பாராளுமன்றங்களிற் போலல்லாமல் இங்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டியதுகூட இல்லை.

சகல குடியரசுத் தலைவர்களும் இம்மாநாடு நடைபெறுவதை வரவேற்றனர் என்று கூறமுடியாது. தியோடோர் ரூஸ் வெல்ட் பத்திரிகையாளரைச் சந்திப்பதற்குப் பிள்ளையார் சுழிபோட்டு வைத்தார். வூட்ரோ வில்சன் இவற்றை வாரமிருமுறை நியதியாக்கினர். பிராங்க்ளின்டி ரூஸ்வெல்ட் இவற்றில் கலந்து கொள்வதிற் பேருவகை கொண்டதுமட்டுமல்ல, பேராசிரியர் ஹியூ ஏ போன் சொல்வது போல இவற்றைத் தலைமைக்கும் தொடர்புக்கும் சிறந்த சாதனங்கள் என்ற நிலைக்கு உயர்த்திவிட்டார். பியத்துப்

[10-ஆம் பக்கம் பார்க்க]

## ஈழநாடு இனிது வாழ்க

புலவர்மணி: ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

அறந்தலை கீழாய் அவனியி லெங்கும்
ஆசையும் அல்லலும் மிகுந்து
மறந்தலை மேலாய் மாநிலம் தீய
வாழ்க்கையி லாழ்ந்திடும் போது
சிறந்திடு தருமம் நாட்டிடத் தெய்வம்
திருவவ தாரஞ்செய் செயல்போல்
பிறந்தனள் ஈழ நாடெனுஞ் செல்வி
பேரொளித் திருவொடும் பொலிந்தே.

நற்றமிழ் போல நாடொறும் வளர்ந்து
நடுநிலை நின்றுதாய் நாட்டுப்
பற்றினை யினிய பண்புட னூட்டிப்
பகைவரும் விரும்பிடப் பணியிற்
செற்றமொன் றின்றித் தீயன கடிந்து
தெளிவுசே ரறநெறி புகட்டிக்
கற்றவர் கல்லார் கரமெலாந் திகழ்க
கவினுட னீழநா டினிதே.

சொல்லொடு பொருளுந் தொனிப் பொருள்
தானும் தூய்மையும் நேர்மையுந் துலங்க
தொல்லைசேர் பகைமை பிரிவினை யச்சம்
சோம்பலா மிருள்பல துடைத்துப்
பல்வகை வகுப்பும் பயன்பெறு மினிய
பான்மைசேர் அரசையிந் நாட்டில்
வல்லமை கொண்டு நாட்டியே யீழ
நாடுநன் குயர்ந்து வாழியவே.

உலகநிலை

## ஈ-ராக்கில் கலவரம்

ஈ-ராக்கில் ஒரே குழப்பமாய் இருக்கிறது. உதவி முதலமைச்சராய் இருந்த கர்னல் ஆரெப் முதலமைச்சர் கரீம்கானைக் கொல்லச் சதி செய்ததாகக் கைது செய்யப்பட்டபோது அமைச்சரவையினின்றும் சிலர் விலகினர். விசாரணையின் போது மரணதண்டனை வழங்க வேண்டுமென வற்புறுத்தியதனல் மக்கள் மத்தியிற் செல்வாக்கை இழக்கநேரிடுமென்று அமைச்சரவையிலிருந்து அறுவர் வெளியேறினர். கர்னல் ஆரெப்புக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எட்டுப் புதிய அமைச்சர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். அமைச்சரவையில் ராணுவ உத்தியோகத்தர் தொகை இதனல் அதிகரித்துள்ளது. பதவிதுறந்த அறுவரும் சிறையிலிடப்பட்டிருக்கிருர்கள்.

### தேர்தலை உடனே வை

ஆபிரிக்காவில் உள்ள டகோமே பிரதேசத்தின் தலைநகரான போர்ட்டோ நோவோவிற் புதிய குடியரசு அரசியல் திட்டம் ஒன்று மக்கள் சபையில் விவாதிக்கப் பட்டது. 'தேர்தலை உடனே வை' என்ற சுலோகங்கள் உள்ள கொடிகளைத் தாங்கிய மக்கள் கூட்டம் வெளியே நின்று பலத்த ஆர்ப்பாட்டம் செய்தது. இக் கூட்டத்தினரைக் கலைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிடப் பட்டது. கண்ணீர்ப் புகையை உபயோகித்த பொலிசார் அமைதியை நிலைநாட்டினர்கள். இப்பிரதேசம் ஒருகாலத்திற் பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

### ஐரிஷ் முதலமைச்சர் கூற்று

நாட்டின் நலத்துக்குப் பல கட்சிகள் சேர்ந்த கூட்டாட்சி உகந்ததல்ல என ஐரிஷ் முதலமைச்சர் ஈமன் டி' வலரா கூறியுள்ளார்.

பிரஞ்சு சிநேகப் பரிசு இம்முறை ஜப்பானிய எழுத்தாளர் கொஜிரோ செரிசாவா என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

### கவிஞர் கதி

ஸ்பானிய கவிஞர் டயோனிஸியோ றிட்ரூஜோ,. சட்ட விரோதமான பிரசாரம் செய்ததற்கும் ஆட்சிப் பீடத்துக்கு அபவாதம் விளைவிக்கும் கருத்துக்களை வெளியிட்டதற்குமாக விசாரணைசெய்யப்பட்டு ஐந்து வருட நன்னடத்தைப் பிணையில் விடப்பட்டிருக்கிருர்.

### மலான் காலமானர்

தென் ஆபிரிக்க முதலமைச்சர் டானியல் மலான் காலமானர். இறக்கும்போது அவருக்கு வயது 84.

### மிகப்பெரிய வைரம்

தென் ஆபிரிக்கச் சுரங்கங்களில் கிடைத்ததும் உலகத்தில் உள்ள மிகப்பெரியதும் என மதிக்கப்படும் வைரமொன்றினை அமெரிக்கர் ஒருவர் வாங்கியுள்ளார். இதன் நிறை 240 கரட்டுகள் (மூன்றே முக்கால் அவுண்ஸ்) இதன் விலை இரண்டரைக் கோடி பவுண். வெட்டிச் செப்பனிட்ட பிறகு 5 கோடி பவுண் பெறும்.

### சோவியத்தும் சீனமும்

சோவியத்து ருஷியா செஞ்சீனத்தில் தொழில் விருத்திக்கு 50 கோடி ரூபிள்கள் உதவுவதாக ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆங்கில நாணயத்தில் இதன் பெறுமதி ஏறக்குறைய $44\frac{1}{2}$ கோடி பவுண் ஆகும்.

### துங்கு ரஹ்மான் விலகினர்

மலாயா முதலமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மான் பதவியினின்றும் விலகிவிட்டார். தேர்தல்கள் சமீபிக்கின்றன. மும்மரமாகப் பிரசார வேலை செய்யவே பதவியைக் கைவிட்டிருக்கிருர். இவருடைய பதவியை டத்து அப்துல் றசாக் பின் ஹுசெயின் ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

### ஆஸ்பத்திரியில் டல்லஸ்

பெர்லின் சிக்கல்பற்றி ஐரோப்பிய நாடுகளில் பேச்சு வார்த்தை நடத்திய டல்லஸ் சத்திர வைத்தியம் பெற ஒரு இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிருர்.

### யப்பானிய இளவரசர்

யப்பானிய இளவரசர் வருகிற ஏப்ரல்மாதம் 10-ஆம் திகதி மிச்சிகோ ஷோடா என்னும் சாதாரணப் பெண்ணை மணந்துகொள்வார். இதற்காகப் பிரமாதமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. 3000 பேருக்கு 3 நாட்களுக்கு அரண்மனை விருந்து, இராஜோபசாரம் எல்லாம் நடைபெறும். யப்பானிய அரசர்கள் பரம்பரையின் மரபை மீறி வெளியே பெண்ணெடுக்கும் முதலாவது மன்னர் இந்த அக்கி ஹிட்டோ ஆவர். இது காரணமாக இவர் உலகத்தையே அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளார்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு மாசி மீ 2 உ (14-2-59)


## பொதுசனப் பாதுகாப்பு

மீண்டும் கலவரங்கள் ஏற்படாமற் பொதுசன அமைதியைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயே பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்திருப்பதாக முதலமைச்சர் கூறுகின்றார். ஆனால் இந்தச் சட்ட திட்டங்களால் மட்டும் உண்மையான அமைதியை ஏற்படுத்த முடியுமா? கலவரங்கள் ஏற்பட்டதின் அடிப்படைக் காரணத்தைக் கண்டுபிடித்து, அதை நீக்கத்தக்க வழிவகைகளைச் செய்வதே நாட்டின் அமைதியைப் பாதுகாக்கச் சரியான வழியாகும்.

சென்ற மே மாதக் கலவரங்கள் திடீரென ஏற்பட்டுவிடவில்லை. இருமுக்கியசமூகங்களும் இங்கு அமைதியாக வாழ்ந்து வந்திருக்கையில், சிங்களம் மாத்திரம் சட்டத்தை அவசரமாக, ஒருதலைப் பட்சமாக நிறைவேற்றியதே வகுப்புத் துவேஷம் அதிகரிக்கவும் கலவரங்கள் மூளவுங் காரணமாகும்.

நியாயமான அளவு தமிழ் உபயோகச் சட்டத்தால் மொழிச்சிக்கல் தீர்ந்துவிட்டதாக முதலமைச்சர் அடிக்கடி கூறுகிறார். ஆனால், தமிழ்பேசும் மக்களோ அப்படிக் கருதவில்லை. பல்லாண்டுகளாகத் தங்களுடைய மொழிக் கிருந்து வந்த சம அந்தஸ்து திடீரென நீக்கப்பட்டுவிட்ட விதமும், சென்ற கலவரத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களும் அவர்களிடையே இந்தச் சனநாயகத்தைப் பற்றியே பெருத்த அவநம்பிக்கையை ஏற்படுத்தி விட்டன. ஆட்சியிலும் அவர்களுக்கு இப்போது எவ்வித பங்குமில்லை.

இந்த நிலைமை மாறி இந்நாட்டிலுள்ள இரு முக்கிய சமூகங்களும் ஒத்துழைத்து அரசாட்சியை நடத்த முடியும் போதுதான், இங்கு உண்மையான அமைதி நிலவி சுபிட்சமும் ஓங்க முடியும்.

பொதுமக்கள் பாதுகாப்புடன் அமைதியாக வாழவே விரும்புகிறார்கள். சென்ற மே மாதக் கலவரங்கள் மீண்டும் ஏற்படாமல் அமைதியாக இந்நாட்டில் வாழமுடியுமா! என்று சிறப்பாகத் தமிழ்பேசும் மக்கள் கவலைப்படுகிறார்கள். அவசர நெருக்கடி ஆட்சி நீங்கிவிட்டால் மீண்டும் கலவரங்கள் ஏற்படுமோ என்ற அச்சம் அவர்களுக்கு உண்டு.

சாதாரணச் சட்டத்தால் இப்போது நாட்டின் அமைதிநிலையைப்பாதுகாக்க முடியுமென்ற நம்பிக்கை முதலமைச்சருக்கும் இல்லை. அதனால் தான் சென்ற பத்துமாத காலமாக அவசர நெருக்கடி உத்தரவை மாதத்துக்கு மாதம் நீடித்து வருகிறார்.

ஆனால் இந்த அவசர நெருக்கடி ஆட்சியை நிரந்தரமாக நீடித்துக்கொண்டு போக முடியாது. இது சனநாயகத்துக்கு மாறுகுமென்ற பலத்த ஆட்சேபங்கள் எழுந்துள்ளன. ஆகவே, நாட்டின் எந்தப் பகுதியில் கலவரம் தலை தூக்குகிறதோ, அங்குமட்டும் அவசர நெருக்கடி உத்தரவைப் போடவும் வேறு விசேஷ அதிகாரங்களைப் பெறவும் இப்புதிய சட்டத்தை முதலமைச்சர் கொண்டுவந்து நாடெங்கும் உள்ள அவசர நெருக்கடி ஆட்சியை முடித்துவிட விரும்புகின்றார்.

பழைய பாதுகாப்புச் சட்டப்படி முதலமைச்சருக்கு விசேஷ அதிகாரங்கள் எல்லாம் இருந்தும் அவை பாரபட்சமாகப் பிரயோகிக்கப்பட்டனவென்றும், கலவரங்களைக் காலாகாலத்தில் அடக்கமுடியவில்லை என்றும் பிரதிநிதிகள் சபையிற் குற்றம் சாட்டப்பட்டது. இந்நிலையிற் புதிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டால் அவை சரிவர நிறைவேற்றப்படுமென்பதற்கு என்ன உத்தரவாதம்?

அவசர நெருக்கடியை நீக்கி' பொது மக்கள் அமைதியுடன் பாதுகாப்பாக வாழ வேண்டுமென்று முதலமைச்சருக்கு உண்மையில் ஆவல் உண்டென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இந்த ஆவல் பூர்த்தியாக வேண்டுமாயின் அவர் துணிச்சலுடன் இங்கு எல்லா சமூகத்தவரும் சரிநிகர் சமானமாக வாழ முடியும்படியான அரசியற் பரிகாரங்களுக்கு வழிகளை வகுக்கவேண்டும்.

### இந்திரா காந்தி

திருமதி இந்திரா காந்தியை இந்தியக் காங்கிரஸ் மாசபைக்குத் தலைவராகத் தெரிவு செய்துள்ளது பாரதநாட்டில் மட்டுமன்றி உலகிலுள்ள பெண் குலத்துக்கே பெருமையும் மகிழ்ச்சியும் அளிப்பதாகும்.

இது வெறும் கௌரவப் பதவியல்ல. மிகவும் சிக்கலான பெரும் பொறுப்பாகும். உலக நாடுகள் பலவும் சிறப்பாகத் தென் கிழக்கு ஆசிய நாடுகளும் பலவற்றுக்கும் நேருஜியையே எதிர்பார்த்துள்ளன. சமாதான பாதையிலே சனநாயக சம தர்மத்தை நிலைநாட்டவும் உலக அமைதியைக் காக்கவும் முற்பட்டுள்ள நேருஜிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது காங்கிரஸ் தாபனமே.

அந்தத் தாபனத்திற் சமீப காலமாகப் பல சுயநலப்புல்லுருவிகள் புகுந்துள்ளதால் அதன் செல்வாக்குப் பல இராச்சியங்களிற் குறைந்து வருவதும் பல பிளவுகள் ஏற்பட்டுள்ளதும் பகிரங்க இரகசியம். இந்த ஊழல்களை நீக்கியும், ஒதுங்கியுள்ள தேச பக்தர்களை மீண்டும் அதிற் சேர்த்தும் அதைப் பலப்படுத்தக்கூடிய ஆற்றல் பெண் சக்தியான இந்திரா காந்திக்கே உண்டென்று கண்டு, இப்பதவிப் பொறுப்பை அவருக்கு அளித்திருக்கிறார்கள்.

பெண்சக்திகள் முனைந்தால் எந்தக்காரியந்தான் வெற்றி பெறாது! இந்திராகாந்தியின் தலைமையில் பாரதப் பெண்மணிகள் முன்வந்து தேசீயத் திருப்பணியிலே அதிகம் ஊக்கத்தில் ஈடுபட்டு நாட்டுக்கும் உலகுக்கும் நன்மைகள் பல செய்ய இது அரியதொரு சந்தர்ப்பமாகும். புலிக்குப் பிறந்தது நிச்சயம் பூனையாகாது. திருமதி இந்திரா காந்தியின் தலைமை நமது ஈழ நாட்டுப் பெண்களுக்கும் விழிப்பு உண்டாக்கி, இங்கும் பொது வாழ்விற் புத்துயிர் ஏற்படுத்த உதவவேண்டும்.

### கஷ்ட நிவாரணம்

கொழும்பிலே ஒரு வங்கியில் லிகிதராக வேலைபார்த்த 27 வயதுள்ள திரு. பாலகிருஷ்ணன் யாழ்ப்பாணப் புகை வண்டியிலே தற்கொலை செய்து கொண்டார். அவரது இளம் மனைவி சென்ற காலத்திற்பட்ட அவதிகளையும் குடும்பம் பிரிந்ததையும் புது வீட்டுக்கு நிந்தங் கொடுக்கக் கடன் கிடைக் காததால் தன்கணவன் தற்கொலை செய்துகொண்டதையும் மரண விசாரணையின் போது கூறிய சோகக்கதை, கல்மனதையும் கரைத்தது. அவர் தன் இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு இனி எப்படி வருமானம் இன்றி வாழ்க்கை நடத்துவது! இம் மாதிரிக் கஷ்டத்தால் திடீர் என இடிவிழுந்து சிதைந்த குடும்பங்கள் எவ்வளவோ?

கலகத்தித் கஷ்டமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு அளிக்கப்படுமென்று முதல் அறிவிக்கப்பட்டது. பின்னர் அமைச்சரவை நஷ்டஈடு எதுவும் வழங்க முடியாதென்று அறிவித்துவிட்டது. இதுகலகஅகதிகளுக்குப்பெரும் ஏமாற்றமாகும். இதற்குப் பெருந்தொகை தேவையென்று கூறப்படலாம். மிகவும் தேவைப்பட்டவர்களுக்கு ஓரளவாவது உதவியளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இந்தக்கடமையை அது செய்யக் காலங் கடந்துவிடவில்லை.

இவ் விஷயத்தில் அரசாங்கத்தையே நம்பியிராமல் பொதுமக்கள் தங்களாலான முயற்சிகளைச் செய்து கஷ்ட நிலைவரத்துக்குக் கூடுமான முயற்சிகளை எடுக்கவேண்டும். கலவரம் நடந்து பத்து மாதங்களாயிற்றென்றாலும் கஷ்டம் நீங்கவில்லை. யாரிடம் எங்கு முறையிடுவதென்று தெரியாமற் பலர் தவிக்கின்றனர்.

சமூக நன்மையை உண்மையிற் கருதும் பொறுப்புள்ளவர்கள் கட்சி முதலிய வேற்றுமைகளை மறந்து கஷ்ட நிவாரண நிதி திரட்டி இவ்வித அபலைகளுக்கு உதவ இது தக்க சமயமாகும்.

### பண்டித பட்டதாரிகள்

கொழும்பிலுள்ள கீழை நாட்டுக் கல்விச்சபை மூலம் தேர்ச்சியடைந்த பண்டிதபட்டதாரிகளுக்குப் பல்கலைக் கழகத்துஆங்கிலப்பட்டதாரிகளைப் போற் சம அந்தஸ்து அளிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்கதே. ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க வாயிலாகவும் மதுரைச் சங்க வாயிலாகவும் பண்டித பட்டம் பெற்றவர்களுக்கு அநேக சலுகைகளை அளிக்கக் கல்வி அமைச்சர் மறுப்பது நியாயமும் நேர்மையுமற்றதாகும். இதைப்பற்றி வட்டுக்கோட்டைப் பிரதிநிதி, பிரதிநிதிகள் சபையிற் கேட்ட போது கொள்கை அளவில் இதை ஒப்புவதாகவும் ஆனால் தமிழ் ஆசிரியர்கள் அதிக தொகையினர் என்ற காரணத்தால் அவர்களைநியமிக்கமுடியாதெனவும்அமைச்சர் கூறினார். கேட்ட கேள்வி ஒன்று. அமைச்சரின் மறுமொழியோ வேறொன்று. ஏற்கனவேயுள்ள பண்டித ஆசிரியர்களுக்கு வேற்றுமை காட்டாமல் சம சலுகைகள் அளிக்கப்படுமா என்பதே கேள்வி. கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட அமைச்சர் அதைக் காரியத்தில் நிறைவேற்ற மறுக்க முடியாது.

### நிரந்தர அடிமைகளா?

எம். ஈ. பி. ஆட்சி உதயமான போது நாட்டிலே மக்களாட்சி மலர்ந்துவிட்டதாக எம். ஈ. பி. கட்சியைச்சேர்ந்த தலைவர்கள் கொக்கரித்தனர். 'மனித உரிமைகளை எல்லாம் வாரி வழங்கிச் சகல இனத்தினரையும் 'ஸ்ரீ லங்கா' விற் சுயமரியாதையாக வாழ வகைசெய்வோம் என முதல் அமைச்சர் பண்டாரநாயக்கா அவர்களே வாக்குறுதி அளித்திருந்தார். இவை யாவும் தவிடுபொடியாகி வருவதைச் சமீபகாலச் சம்பவங்கள் உணர்த்தியுள்ளன.

ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியுள்ள எம். ஈ. பி. நாளிலும் பொழுதிலும் அதிகார மமதைகொண்டு அடிப்படை உரிமைகளையே காலடியிற் போட்டு நசித்துவருவதைக் கண்முன் காண்கின்றோம். இந்த அரசாங்கம் உண்மையாகவே மக்களது அரசாங்கமாக விளங்கும் என நாடு எதிர்பார்த்ததாகவும், ஆனால் இன்று அது கையாண்டுவரும் நடவடிக்கைகள் அத்தனையும் தொழிலாளர்களுக்கு பல தீமைகளை விளைத்து, அவர்களை நிரந்தர அடிமைகளாக்கி வருகின்றனவென்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் இரத்தினபுரியிலே நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மிக வன்மையாகக் கண்டித்துள்ளார். நாட்டின் வளத்துக்குப் பலவழிகளிலும் உழைத்துவரும் இந்தியத் தொழிலாளர்களுக்கு இன்று அடிப்படை உரிமைகள்தாமும் மறுக்கப் பட்டுள்ளன. அது மாத்திரமன்றி 'நாடற்றவர்கள்' என்ற வசைச் சொல்லுக்கும் ஆளாகியுள்ளனர். இவர்களும் மனித உரிமைகளைப் பெற்று வாழ இனியேனும் அரசினர் வழி காணவேண்டும்.

### பண்பற்ற செயல்

பிரதிநிதிகள்சபையில் வியாழக்கிழமையன்று நடந்த சம்பவம் பிரதிநிதிகள் சபையின் வரலாற்றில் இதுவரை நடைபெறவில்லை என்றே கூற வேண்டும். பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் சபையில் நிறைவேறியதை எதிர்க்கட்சியினரும் ஆட்சிக்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினரும் ஆட்சேபித்தனர். இதுகாரணமாக எதிர்க்கட்சித்தலைவரும் வேறு சில பிரதிநிதிகளும் பொலிசாரால் வெளியே தூக்கிச் செல்லப்பட்டனர். சனநாயகப்பண்புக்கு முற்றும் ஒவ்வாத இச் செயல் நாட்டிலே சனநாயகத்தின் எதிர்காலம் மிகுந்த ஆபத்துக்குள்ளாகிவருகிறதென்பதையே எடுத்துக்காட்டுகின்றது. மனிதத்தன்மையற்றகொடியதொரு சட்டம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறுவதற்குச் சனநாயகத்தில்நம்பிக்கையுள்ள தேசபக்தர்களும் உடந்தையாக இருந்தார்கள் என்பதை எண்ணும்போது மக்களின் உரிமைகளை அவர்கள் துச்சமாகவே மதித்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. இதன் விளைவுகள் நாட்டில் எத்தகைய கொந்தளிப்புகளை உண்டாக்குமென்பது இனிமேல்தான் தெரியவரும்.

பிரதிநிதிகள் சபையில் ஆட்சிக் கட்சியினர் அனுபவித்து வரும் உரிமைகளுக்கு எதிர்க்கட்சியினரும் உரிமைபூண்டவர்கள். அவர்களும் மக்களின் பிரதிநிதிகள் தாம் என்பதை மறந்து ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொள்பவர்கள் நடந்துகொள்ளுவது சனநாயக ஆட்சி முறையைக் கேலி செய்வதாகும்.

## பூவலம்

சூத்திரப்பாவை

சில நாட்களுக்குள் உலகப் பிரமுகர்கள் பலர் பூவலஞ் செய்தார்கள். ருஷிய முதல் அமைச்சர் குருஷேவ் பல நாடுகளையும் சுற்றிப்பார்த்தது பழங்கதையாகி விட்டது. அவருடைய உதவி அமைச்சர் மிக்கோயான் அமெரிக்க நாட்டைச் சுற்றிப் பார்த்தபொழுது அவருடைய கேலிக் கதைகளையே உலகப் பத்திரிகைகள் வெகுவாக அச்சிட்டார்கள். ஆயினும் அவர் அவ்வூர்த் தொழில் முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் கூறியவற்றையே கவனத்திற் கொள்ளவேண்டி இருக்கிறது. தங்கள் இரு தேசமும் ஐக்கிய முறையில் வியாபாரம் செய்து முன்னேறுவதற்கு அமெரிக்க வெளி விவகாரப் பகுதிதான் தடையாயிருக்கின்றது. இந்தப் பருப்பு அங்கு வேகவில்லை. ஒருமுறை ருஷியத் தலைவர் தம்மூரில் உற்பத்தி செய்யும் ஆக்கப்பொருள்களுக்கு ஒரு கண்டிப்பான விலை குறிக்கமுடியாதென்றும் விலைப் போராட்டம் ஏற்படின் மற்றவர்களிலும் பார்க்கத் தாங்கள் அதிகம் குறைந்த விலைக்கு எதுவும் ஏற்றுமதி செய்யலாம் என்றும் கூறியபொழுது இங்கிலாந்துபோன்ற முதலாளி நாடுகள் திகைத்தன. இந்த முடிவுக்கு இலக்கணமாகச் சந்திர மண்டலத்தைக் கிட்டக்கூடிய ருஷிய விமானங்கள் அதி சீக்கிரத்திற் செய்யப்பட்டன. இருந்தும் அமெரிக்க தேசத்தில் வேகாத பருப்பு நம்மூர்ப் பச்சைத் தண்ணீரில் வேகக் கூடும். சீனதேசத்தின் முதல் அமைச்சர் ஈழநாட்டுக்கு வந்தபொழுது பாதையோரத்தில் நின்ற அழகியிடம் ஒரு செவ்விளநீர் வாங்கினார். அதற்கு விலையாக நூறு ரூபாய் கொடுத்தார். அதையறிந்த யூகோசிலாவிய "டிட்டோ" அண்மையில் ஒரு இளநீருக்கு ரூபாய் இரு நூறு கொடுத்தார் என்றால் எமது மனப்பான்மையை அவர்கள் நன்கு அறிந்துதான் இருக்கவேண்டும். இதை ஒட்டி எமது வர்த்தகர் ஒருவர் எங்கள் கொப்பறாவை இடதுசாரி நாடுகளுக்கு அனுப்பினால் அவர்கள் ஆங்கிலேயர், அமெரிக்கர்களிலும் பார்க்க நூறு மடங்கு விலை கொடுப்பார்கள் எனக் கருதினராம். என்ன விபரீதம்!

ஃ ஃ ஃ ஃ

ஆங்கில முதலமைச்சர் மாக்மில்லன் இன்னும் சில நாட்களில் ருசியநாட்டைச் சுற்றிப் பார்க்கப் பெரும் ஆயத்தம் செய்கிறார். அவர் கையாளும் முறையிற் சில வித்தியாசம் உண்டு. அங்கு போய் ஒரு கிளாஸ் 'வொட்கா' வுக்கு (ருஷிய மதுபானம்) பத்துத் தங்கப் பவுண் கொடுக்கப் போவதில்லை எனத் திடமாகச் சொல்லலாம். அமெரிக்க வெளிநாட்டுக் காரியதரிசி டல்லஸ் ருஷியாவின் முதல் நம்பர் சத்துராதி என்பது யாவரும் அறிந்ததே. ஆகவே, மாக்மில்லன் ருஷியாவுக்குப் போகும் வேளை, டல்லஸ் தனது பதவியிலிருந்து சில நாளாகுதல் நீங்கியிருந்தால் மாக்மில்லனின் தந்திரங்கள் பலிக்கக்கூடுமென யூகிக்கலாம். இந்த நேரத்தில் டல்லசுக்கு வந்த பிணி சாமானிய தூதுவர் கொள்ளும் செயற்கைப்பிணியோ என்று சந்தேகிக்க இடம் உண்டு.

# தமிழ்நூல் பரிசுத் திட்டம்

தமிழ் வளர்ச்சிக்கழகச் செயலாளர்
திரு. பெ. தூரன் அவர்கள் எழுதுவதாவது:

சிறந்த தமிழ் நூல்களுக்குச் சென்னை அரசாங்கம் ஆண்டு தோறும் பரிசளித்துத் தமிழ் வளர்ச்சிக்கு உதவுகின்றது. புதிய திட்டத்தின்படி தமிழ் நூல்கள் இருபது தொகுதிகளாகப் பிரிக்கப்பெறும். ஓர் ஆண்டில் முதல் பத்துத்தொகுதிகளும் அடுத்த ஆண்டில் மற்ற பத்துத் தொகுதிகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பரிசுக்குத் தகுதியான நூல்களுக்குச் சென்னை அரசாங்கம் ஆயிரம் ரூபாய் வீதம் பரிசளிக்கும்.

இந்தத் திட்டத்தில் சேர்வதற்கு 1957 — 58-ம் ஆண்டில் வெளியான நூல்களில் இதுவரை அனுப்பப் பெறாதவற்றை உடனே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். முன்பே பல வெளியீட்டகங்களும் ஆசிரியர்களும் இவ்வாண்டுகளில் வெளியான பல நூல்களை அனுப்பியிருக்கிறார்கள். அவ்வாறு அனுப்பிய நூல்களை மறுபடியும் அனுப்ப வேண்டியதில்லை. இதுவரை அனுப்பாதவர்கள் பிப்ரவரி மாதம் 20-ந் தேதிக்குள் 'செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை -5' என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். குறித்த தேதிக்குள் அனுப்பப்பட்ட நூல்களே பரிசீலனையில் இடம் பெறும். புத்தகங்கள் வெளியான உடனே அவற்றின் இரண்டு பிரதிகளை அனுப்பிவைத்துவிட்டால் அவற்றை எந்தெந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமோ, அவ்வாறு சேர்த்துக்கொள்ள வசதியாக இருக்குமாதலால், இனிமேல் அவ்வாறே அனுப்பக் கோருகிறோம்.

மொழிபெயர்ப்பு நூல்கள் சாதாரணமாகப் பரிசுத் திட்டத்தில் இடம் பெறா. ஒரு தடவை பரிசுத் திட்டத்தில் சேர்ந்த நூல்கள் மறுபடியும் அதில் சேரா. ஆனால், அவற்றை மாற்றியோ, அபிவிருத்தி செய்தோ, மறு பதிப்பாக வெளியிட்டால் அவற்றை அனுப்பலாம். இதுவரை பரிசுக்கு அனுப்பப்பெறாத நூல்களில் புதிய பதிப்பு இப்பொழுது வெளியாகியிருந்தால் அவைகளும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு அல்லாத வேறு மாகாணங்களிலும், இலங்கை முதலிய இடங்களிலும் வெளியான தமிழ் நூல்களும் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

## பூவலம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்விதமும் ருஷியாவின் கோபத்தைத் தணிக்க வேண்டிய நிலைமையில் மேல் நாட்டவர்கள் இருக்கிறார்கள். ஏனெனில், ஜேர்மன் தலைநகரான பேர்லின் பட்டினத்தில் மேல் நாட்டவரின் உயிர்நிலைய முண்டென்பது ருஷியருக்கு நன்றாகத் தெரியும். பேர்லின் நகரைக் கிட்டிகட்டி நெரிப்பது ருஷியாவுக்கு ஒரு வில்லங்கமான வேலையல்ல. அந்த முயற்சியிலும் ஈடுபட்டுவிட்டார்கள். பேர்லின் முழுவதையும் கைப்பற்றுவிடின் ஜேர்மன் நாட்டையே இழந்ததாக முடியும். ஆகவே, மாக்மில்லனின் தூது' கிருஷ்ணன் தூது போன்றது.

சென்ற உலகயுத்தத்திற்குமுன் சேம்பர்லின் என்னும் ஆங்கில முதலமைச்சரும் ஹிட்லரைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய போது தனது குடையை வெற்றிக் குடைபோல் உயர்த்தி ஒரு சந்ததி காலத்துக்காகுதல் உலகத்தில் சமாதானம் நிலவச் செய்துவிட்டேன் என்று கொக்கரித்தார். அடுத்த ஆண்டு அவர் தன் பிழையை உணர்ந்து பதவியை நீத்தார்! மாக்மில்லனின் கதி எப்படியாகுமோ!

ஃ ஃ ஃ ஃ

சுகவாழ்விற்கேற்ற வழிவகைகள் வேறு இல்லையா! உலகம் சுருங்கிக்கொண்டே வருகிறது. மக்கள் கூடிவாழும் வழிமுறைகளைத் தேடி அவற்றை விருத்திசெய்ய மூன்றாம் படை ஒன்றை ஆக்கவேண்டுமென்று பலர் நினைத்தார்கள். நேரு, டிட்டோ, பண்டா ஆகியோர் சென்ற வாரத்தில் மூன்றாம் படையொன்று தேவையில்லை எனவும் தாம் அதில் முயற்சி செய்வதில்லையெனவும் தீர்மானித்து விட்டார்கள். அணில் நொட்டிப் பனங்காய் விழுமோ என்பாருமுளர். அப்படியிருந்தும் உண்மையைக் கடைப்பிடிப்பாரில்லையோ? உண்மையும் நீதியும்தான் அமைதிக்கு இன்றியமையாதன என்பதை எப்படித்தான் உணரப்போகிறோம்!

### உதவி அமைச்சர் சுபசிங்க விலகுதல்

**பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேறியதை ஆட்சேபித்து வெளிவிவகார, பாதுகாப்பு உதவி அமைச்சர் திரு. டி. பி. சுபசிங்க தமது பதவி விலகற் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.**

தூய வெண்மைக்கு
**வீனஸ் சோப்**
— சிறந்தது —
**வீனஸ் சோப் தொழிற்சாலை**
269, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# துறைமுகத்திற் துரிதவேலை

## வர்த்தகரிடையே புதிய நம்பிக்கை

— நமது நிருபர் —

கொழும்பு.

**பொது**ப் பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தை எதிர்த்துத் தொழிலாளர் யூனியன்களெல்லாம் செய்த கிளர்ச்சி வெற்றியடைந்துள்ளது. சட்டப்படி நடைபெறும் வேலை நிறுத்தங்கள் குற்றமாகமாட்டா என்று அரசாங்கம் ஒரு முக்கிய திருத்தம் செய்துவிட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுட்பட வலதுசாரி எம்பீக்களுக்கு இது ஒரு தோல்வியே என்றாலும் யூனியன்கள் செய்த கிளர்ச்சி வலது சாரியின் செல்வாக்கைக் குறைக்க பயன்பட்டதுபற்றி முதலமைச்சர் உள்ளூர மகிழ்ச்சியடையலாம். மற்ற இடது சாரிக் கட்சிகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் இது இனி வழி செய்யக்கூடும்.

### அமைச்சரின் மாளிகை

அனுராதபுரத்தில் 75,000 ரூபாய் செலவில் புதிய மாளிகையை நீங்கள் எப்படிக் கட்டினீர்களென்று வவுனியாப் பிரதிநிதி சபையிற் சனப்பிரதிநிதிகள் கேட்டதற்கு "வெளியில்வந்து இதைக் கேளுங்கள்" என்றுபோக்குவரத்து அமைச்சர் பதிலளித்தார் என்றாலும் இந்தக் கேள்வி பொது மக்கள் உள்ளத்திற் பல சந்தேகங்களைக் கிளப்பிவிட்டன.

அந்த வீடுகட்ட 655 ஆயிரம் ரூபா செலவாகுமென்றும் அனுராதபுரம் பழைய நகரில் தாம் விற்ற பூமிக்கு நஷ்ட ஈடாகக் கிடைத்த பணமும் இலங்கை சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி இவற்றில் வாங்கிய கடனையும் கொண்டே இவ்வீடு கட்டியுள்ளதாயும் அமைச்சர் பின்னர் தெரிவித்த விளக்கத்தை சபாநாயகர் சபையிற் படித்தார்.

### பட்டியாக் கொல்லை

சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை இயக்குநராகக் கொண்ட (டைரக்டர்) பிட்டியாக்கொல்லைத் தேயிலைத் தோட்டத்தில் ஜனப் அஸீஸின் சனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்தி வரும் வேலை நிறுத்த விஷயமாக வெளியிட்ட ஒரு அறிக்கை சமஷ்டிக் கட்சிக்கும் இலங்கை இந்திய வம்சாவளியினர்க்கும் தப்பெண்ணத்தையும் பிளவையும் ஏற்படுத்தி விடுவதாக இருந்தது. இந்தியா வம்சவளியினர்பால் சமஷ்டித் தலைவருக்கு அனுதாபமில்லையென்று பொருள்படும்படி அந்த அறிக்கை கூறியது.

இதற்கு திரு. செல்வநாயகம் வெளியிட்ட பதிலில் இந்தச் சந்தேகங்களைத் தீர்த்து இது தொழிற் சங்கத் தகராறென்றும் அந்தத் தோட்டத்தின் நிர்வாகிகள் தகராறான விஷயங்களை மத்தியஸ்துக்கு விடத் தயாரென்றும் யூனியன் என்ன கூறினாலும் தாமும் சமஷ்டிக்கட்சியும் தோட்டங்களிலுள்ள அத்தொழிலாளரின் அரசியல் முதலிய நலவுரிமைக்காகத் தொடர்ந்து தொண்டாற்றிவரப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமை நிலவவேண்டிய இச்சமயத்தில் வவனியாப்பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்திற் பேசுகையில் இந்திய வம்சாவளியினரின் விஷயத்தில் இலங்கைத் தமிழர் இனி அக்கறை காட்டப்படாதெனக் கூறியதாக வெளியான செய்தி இந்திய வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியது. வவனியாப் பிரதிநிதி தாம் அப்படிக் கூறவில்லை என்று பிறகு தெரிவித்தார்.

### கொழும்புத் துறைமுகம்

கொழும்புத்துறைமுகத்தைக் குறித்துப் பொதுவாக வர்த்தகர்களிடையே இப்போது புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. முன்னர் துறைமுகத்திற்கு வெளியிலே இராப்பகலாகச் சராசரி பதினைந்து கப்பல்கள் 'கியூ' வரிசையில் நிற்கும் இந்தக் காட்சி சென்ற சில நாட்களாக இல்லை. துறைமுகவேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கு இது அறிகுறியென்றும் வந்த கப்பல்களிலிருந்து சாமான்கள் அதிக தாமதமின்றி கீழே இறக்கப்பட்டு விடலாம் என்றும் பொதுவாக நம்பப்படுகின்றது. கப்பல் 'க்யூ' வரிசை மறைந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. கப்பல்கள் வெளியில் வாரக்கணக்காக நிற்கையில் அவற்றிலிருந்து பல பொருள்கள் கள்ளத்தனமாகப் படகுகளிற் கொண்டு சென்று பதுக்கப்பட்டனவாம். இதனைக் கண்டுபிடித்தவுடன் வெளியிலிருந்த கப்பல்களைத் துறைமுகத்துக்குள் கொண்டு வந்துவிட ஒழுங்கு செய்யப்பட்டதென்பது ஒரு காரணம்.

கொழும்புத் துறைமுகத்திற் கப்பல்களுக்கு மிகுந்த தாமதம் ஏற்படுகின்றதென உலகெங்கும் 'புகழ்' பரவி விட்டதால் இங்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை சமீபகாலமாக வெகுவாய்க் குறைந்திருக்கலாம்.

இதே சமயத்தில் துறைமுகத்தில் அதிக வேலை செய்பவர்களுக்கு விசேஷ போனஸ் பரிசுகள் அளிப்பதால் தொழிலாளர் முன்னணியும் அதிக ஊக்கத்துடன் காரியங்கள் செய்வதாயும், காலி, திருக்கோணமலை முதலிய துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறுவதாலும், கொழும்புத் துறைமுகத்தில் நெருக்கடி குறைந்திருக்கலாமென்றும் கூறப்படுகிறது. என்றாலும் தினசரி பத்தாயிரம் தொன் கையாள வேண்டியிருக்கையில் எண்ணாயிரம்தொன் வேலைதான் நடைபெறுகிறதாம். தேங்கிக்கிடக்கும் பழைய வேலைகள் மலைபோலுள்ளன. மீண்டும் எந்தச் சமயமும் பழைய நிலைமை வந்துவிடுமோ என்ற அச்சம் இல்லாமலில்லை. எல்லாம் தொழிலாளர் கையில்தான் உள்ளது.

### பெரிய 'ரகளை'

சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பு, மருதானை புகையிரத நிலையத்தில் நடைபெற்ற பெரிய ரகளை இந்த அவசர நெருக்கடி காலத்திலும் காடைத்தனம் எவ்வளவு மோசமாகியுள்ளதென்பதைக் காட்டுகின்றது.

காலியிலிருந்து கொழும்பு வந்துகொண்டிருந்த பொருள்கள் ஏற்றிச்செல்லும் வண்டியின் 'டிரைவர்' வண்டியை விட்டுவிட்டு அலுத்கமையிற் சாப்பிடச் சென்றுவிட்டாராம். அதனால் அங்கிருந்து வரவேண்டிய பொலவத்தை ரயில் தாமதமாகிவிட்டது. மருதானையிற் காத்திருந்த ஏறத்தாழ ஆயிரம் பிரயாணிகள் பெரும் சங்கடப்பட்டனர். மற்றொரு வண்டியை விடலாமென்றால் இஞ்சின் இல்லையாம். தொலைபேசியும் பழுதாயிற்று. இரண்டு மணி நேரமாகக் காத்திருந்த பிரயாணிகள் மற்ற வண்டிகளில் புறப்பட்டுச் செல்லமுடியாமல் தடுத்துப் பலவித அட்டகாசங்களையும் செய்தனர். முதலிற் பொலிசார்வந்து குண்டாந்தடிப் பிரயோகம் செய்து நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாயிற்றாம்.

சென்ற மே மாத அக்கிரமங்களுடன் ஒப்பிடுகையில் இது சின்ன விஷயந்தான். என்றாலும் காடைத்தனம் அடங்கவில்லை என்பதையும் அது மீண்டும் எச்சமயமும் தலைதூக்கலாமென்பதையும் இந்தச் சம்பவம் காட்டுவதாயுள்ளது. மேலும் புகைவண்டிச் சிப்பந்திகளிடையே ஒழுங்கு முறையும் சரிவர இல்லை என்பதற்கும் இது ஓர் அத்தாட்சி.

சென்ற ஆண்டு ஒரு கோடி ரூபாய் இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு நஷ்டமாம். பிரயாணச் சீட்டின்றிப் பிரயாணம் செய்வதாலும் வேறு மோசடிகளாலும் சென்ற ஆண்டில் முப்பது லட்சம் ரூபாய் பறிபோயுள்ளதென்கிறார் புகையிரதப் பகுதிஅதிகாரி திரு. ராம்பாலா.

# பஸ் தொழிலாளர் கவலை

## மேலிடத்துக்குப் பிரதிநிதிகள் முறையீடு

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்.

**யா**ழ்ப்பாணம் வடபகுதியில் இ. போ. ச. ஊழியர்கள் அண்மையில் வேலை நிறுத்தம் செய்யக்கூடும் என்ற வதந்தி ஆதாரமற்றதெனத் தெரிகிறது. ஆயினும் பஸ் தொழிலாளர்கள் மத்தியில் இ. போ. ச. வுக்கு எதிரான மற்றும் சில நெருக்கடிகள் உருவாகி வருகின்றன.

வடபகுதியில் நிலவும் பஸ் போக்குவரத்தின் சீர்கேட்டை இ. போ. ச. மேலிடத்துக்கு எடுத்துரைக்கும் முகமாக யாழ்ப்பாணத்திலிருந்து சில பிரமுகர்கள் இன்று கொழும்புக்குச் சென்றுள்ளனர். வட இலங்கை ஒம்னிபஸ் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அப்பிரதிநிதிகளுடன் வட பிரதேச நிர்வாக உதவி அதிகாரி கப்டன் தர்மரத்தினமும் கொழும்பு சென்று பேச்சு வார்த்தைகள் நடத்துவாரென அறியப்படுகிறது.

தொழிலாளிகள் தினமும் செய்யவேண்டிய 8 மணி நேர வேலையை ஒன்றுக்கு மேற்பட்ட பங்குகளாகப் பிரித்துக் கொடுப்பது தவறானதென்பதே மேற்கண்ட சங்கப் பிரதிநிதிகளின் முக்கிய கோரிக்கையாகும். பஸ் வண்டிகளின் நிலை மிக மோசமாகி விட்டதால் அவற்றை உபயோகிப்பதில் தொழிலாளர் அதிருப்திகொண்டுள்ளனர் என்பதும் மேலிடத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்.

பஸ் வண்டிகளின் பேரால் இன்சூரன்ஸ் பணம் கட்டுவதில் இ. போ. ச. காலதாமதம் செய்து வருவதுபற்றி பஸ் தொழிலாளர்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர். இவ்விஷயம் ஒரு வேலை நிறுத்தத்துக்கு அத்திவாரமாக அமைந்திருப்பதாயும் கொழும்புப் பேச்சு வார்த்தைகளின் பின்னரே அது பற்றி இறுதி முடிவு செய்யப்படுமென்றும் தொழிலாளர் சமாச நிர்வாகியொருவர் தெரிவித்தார். அதாவது இன்சூரன்ஸ் புதுப்பிக்கப்படாத வரை பஸ் வண்டிகளைக் கொண்டு செலுத்த முடியாதெனத் தொழிலாளர் மறுத்து வேலை நிறுத்தம் செய்யக்கூடும்.

# நமது நூல் நிலையம்

**நிலாப்பாட்டி.** ஆசிரியர்: பெ. தூரன். வெளியீடு: புத்தகங்கள் (இந்தியா) லிமிட்டெட், 135, பவளக்காரத் தெரு, சென்னை, 1. விலை ரூ. 1-50.

வயதுநிரம்பிய கிழவி ஒருத்தி இருந்தாள். அவளுக்கு உதவி செய்ய யாரும் இல்லை. அவள் தனியாக ஒரு சின்னக் குடிசையிலே வசித்துவந்தாள்.

அந்தக் கிழவி யாருடைய வீட்டிற்கும் போகமாட்டாள். அவள் வீட்டிற்கு யாரும் வரவும் மாட்டார்கள். அருகிலேயுள்ள வீட்டுக் குழந்தைகள் எல்லாம் அந்தக்கிழவியை நிலாப்பாட்டி என்று கூப்பிடுவார்கள். வறுமையால் வாடிய இந்தப் பாட்டிக்குக் குருவியொன்று செய்த உதவியை, ஆசிரியர் தூரன் அவர்கள் குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில் இனிமையாக எழுதியுள்ளார். வண்ணச் சித்திரங்கள் நூலை அழகு செய்கின்றன.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

**கண்ணகை அம்மன் குளுத்திப் பாடல்.** பதிப்பாசிரியர்: பண்டிதர் வி. சீ. கந்தையா, மட்டக்களப்பு. ரூ. 1-25.

மட்டக்களப்புத் தமிழகத்திலே மக்கள் நாவில் வழங்கி வரும் எழுதா நூல்கள், அச்சேருத ஏடுகள் பல உண்டு என அறிகிறோம். அவைகள் காலகதியில் இறந்து பட்டுப் போகாமற் காப்பாற்றப்பட வேண்டுமானல் அவற்றை அச்சேற்றுதல் அவசியமே! இந்தப் பணியைச் செய்யப் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்கள் முன் வந்துள்ளார். மேற்கூறிய புத்தகத்தில் குளுத்திப்பாடல், ஊர் சுற்றுக் காவியம், மழைக்காவியம், ஊஞ்சல் என்பன உள்ளன. பண்டிதரின் இந்த வெளியீட்டை ஆதரித்துத் தமிழ் கூறும் நல்லுலகம் அவரை இப்பணியில் ஊக்குமாக.

**எழுத்து** -இலக்கிய மாத ஏடு- ஆசிரியர்: சி. சு. செல்லப்பா, 19-A, பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5. ஆண்டுச் சந்தா: ரூ. 5-00. தனிப்பிரதி: ந. பை. 50.

இலக்கிய வாசகர்களைத் தேடிப்பிடிக்கும்நோக்கத்துடன் புதுமை இலக்கிய மாத ஏடாகிய 'எழுத்து'த் தோன்றியுள்ளது. சிறந்த தமிழ்ச் சிறுகதைகள் நிறைந்த தொகுப்புக்களை வெளியிடுவதற்கான யோசனைகளை, க. நா. சு. கூறியிருக்கின்ருர். ந. பிச்சமூர்த்தி, மயன், சிட்டி, ந. சிவசுப்பிரமணியன், சாலி வாஹனன், தி. ஜானகிராமன் ஆகியோரின் படைப்புகள் முதல் இதழில் உள. புத்தக மதிப்புரையும் ஓர் அம்சமாகும். புதுமை இலக்கியத் துறையில் இது ஒரு துணிச்சலான முயற்சியாகும்.

**கலைச்செல்வி**-பொங்கல் மலர்; நிர்வாக ஆசிரியர்: சி. சரவணபவன், கந்தரோடை, சுன்னுகம், விலை சதம் 30.

'கலைச்செல்வி' பொங்கல் மலர், கதைகள், கட்டுரைகள், கவிதைகளுடன் அழகாக வெளியாகியுள்ளது. எழுத்துலகில் தாம் பெற்ற அனுபவத்தைச் 'சம்பந்தன்' அவர்கள் சுருக்கமாக எழுதியுள்ளார். காலஞ்சென்ற பேராசிரியர் 'கல்கி' அவர்களின் உளப்பாங்கைப் பற்றிப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆராய்ந்துள்ளார்கள். கே. டானியல், வி. சிவசுப்பிரமணியம், சிற்பி ஆகியோரின் எழுத்துக்களும் மலரை அணிசெய்கின்றன.

### பின்வந்த நூல்கள்

Dr. K. S. Krishnan's 60th Birthday Souvenir 1958; Issued by: Dr. K. S. Krishnan's 60th Birthday Celebrations Committee, New Delhi.

**கம்பனது கதாபாத்திரங்கள்.** ஆசிரியர்: கி. லஷ்மணன், எம். ஏ. வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை; 5. திருச்சி 2. விலை ரூ. 1-00.

**வீரத்தாய்** (கதைப் பாடல்) யாத்தவர்: 'சொக்கன்'. வெளியீடு: கலாபவனம், பருத்தித்துறை. விலை சதம் 60.

**மாணவர் சரித்திரக் காட்சி.** (இலங்கையும் உலகமும்) எட்டாம் வகுப்புக்குரியது. ஆசிரியன்: வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை; வெளியீடு: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம். விலை ரூ. 3-00.

# அமெரிக்காவின் குடியரசுத்தலைவர்...........

[7-ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிடுங்குகிறவர்களுக்கு நகைச்சுவை ததும்பத் தலையடி கொடுப்பதில் அவர் சமர்த்தர். சில சமயங்களில் மிகுந்த புத்தி சாதுரியமாகவும் நடந்துகொள்வார்.

**மக்களோடு தொடர்பு**

யுத்தகாலத்திற் சேர்ச்சிலுடன் அவர் மாநாடு நடத்தும் இடம் எது என்று அறிய விடாப்பிடியாகக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பத்திரிகையாளருக்குச் சாவும் மூப்பும் சஞ்சலமுமற்ற ஒரு பிரதேசம் 'ஷாங்கிரிலா' என்றுமட்டுமே விடையளித்தார். ஆனல் மக்களோடு இடையருத தொடர்பும் தோழமையும் பூண அவருடைய வானெலி அரட்டைகளும் இந்த மாநாடுகளும் இன்றியமையாதன என்பதை உணர்ந்திருந்தார். 998 செய்தி மாநாடுகள் நடாத்தினர். மக்கள் இந் நன்றியை மறக்கவில்லை. பத்திரிகைகள் கூறிய சோதிடம் யாவற்றையும் பொய்யாக்கி, மூன்று தடவை தேர்தலில் அடுத்தடுத்து வெற்றிபெற்ருர். இவர் சேர்ச்சிலுடன் சேர்ந்து நடாத்திய கூட்டுச் செய்தி மாநாடு வரலாற்றில் முதலாவதாகும். அந்தச் சந்தர்ப்பத்திலே சேர்ச்சில் 'கியாதி' முழுவதையும் தட்டிக்கொண்டார். ட்ரூமன் அவர்களும் இவற்றைப் பலன்தரும் வகையில் பேணிவந்தார். ஆனல் ஐஸன்ஹோவருக்கு இவை மேடும் பள்ளமும் தான். காரணம் அவருடைய உடல்நலமின்மையே. ஆனல் நான் பிரசன்னமாயிருந்த சந்தர்ப்பத்தில் நிலைமையைக் கட்டுக்கு மீறவிடவில்லை. தன் சுகவீனத்தைப் பற்றிக் கிண்டல் பண்ணினர். தன் 'கொல்ப்' ஆட்டத்தை நையாண்டிபண்ணினர். ஷெர்மன் அடம்ஸுக்குச் சாதகமாக நடந்துகொண்டார் என்று அர்த்தம் தொனிக்கக் கேள்வி கேட்டவர்கள்மீது சீறி விழுந்தார். 1953 நவம்பரில் காரசாரமான ஒருசெய்தி மாநாட்டுக்கு வந்திருந்த நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் பாரிஸ் நிருபர் எழுதிய செய்தியில் பத்திரிகையாளருக்குக் குடியரசுத் தலைவர் காட்டும் தாராளத்தைக் கண்ட ஐரோப்பியர் மூக்கில் விரலை வைக்கிருர்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அந்த மாநாட்டில் முன்னுள் குடியரசுத் தலைவர் ட்ரூமனின் நிர்வாகம் வழவழப்பாயிருந்ததெனக் குற்றம் சாட்டி, சட்டப்பகுதித் தலைவர் ஆற்றிய ஒரு சொற்பொழிவு பற்றிப் பேசப்பட்டது. அந்தப் பத்திரிகை நிருபர் தன் கட்டுரையில் குடியரசுத் தலைவரை இப்பத்திரிகையாளர் படுத்திய பாட்டில் ஓர் இம்மியளவு தானும் ஒரு சிறிய ஐரோப்பிய அமைச்சர் பத்திரிகையாளர் கையிலோ பாராளுமன்ற உறுப்பினர் கையிலோ படமாட்டார் என்றும் எழுதியிருந்தார்.

**ஒரு வித்தியாசம்**

குடியரசுத்தலைவரின் பேச்சை அப்படியே அவர் வாயிலிருந்து பிறந்ததாக வெளியிடுவது மரபன்று. ஆயினும் அவர் வார்த்தைகளை அறிக்கைகளில் அப்படியே உபயோகிக்க அனுமதி பெறுவதில் எவ்வித கஷ்டமும் இல்லை. உதாரணமாக நான் பங்குபற்றிய மாநாட்டு நிகழ்ச்சி யாவும் அப்படியே வர்ணிக்கப்பட்டது. 1955 இல் நடைபெற்ற ஒரு மாநாடு சலனப் படமாகப் பிடிக்கப்பட்டதுடன் ஒலிப்பதிவும் செய்யப்பட்டது. குடியரசுத் தலைவரின் உத்தியோகத்தர் அதில் நீக்க வேண்டியவற்றை நீக்கியபின் திரையிடப்பட்டபோது அதற்கும் பத்திரிகைச் செய்திகளுக்கும் வித்தியாசம் இருந்தது. அரசினர் நாடகம் ஆடியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஆகவே, 'கத்தரிகைப் பிரயோக'த்தைத் தவிர்ப்பதற்காகக் குடியரசுத் தலைவர் பத்திரிகையாளருக்கு உள்ளதை உள்ளபடி கூருமற் பொதுப்பட, பிடிகொடுக்காமல் பேசுவது விரும்பத் தக்கதல்ல. கால்வின் கூலிட்ஜ் 520 மாநாடுகளில் அதிகமானவற்றில் வேண்டும் என்றே அப்படி நடந்திருக்கிருர். நேரடியாக இம் மாநாடுகளை ஒலிபரப்புவதும் 'டெலிவிஷ'னில் காட்டுவதும் இப்போது தடைப்படுத்தப் படுகிறது. இவை சலனப்படமாக அடிக்கடி பிடிக்கப்படுவதுண்டு. குடியரசுத் தலைவரின் செய்தி மாநாட்டை இன்றைய செய்திச் சாதனங்களாகிய 'டெலிவிஷன்', வானொலி ஆகியவற்றுக்கு ஏற்றவையாக மாற்றுவது இனிமேல் நடக்க வேண்டிய காரியம்.

### அறிவைப் பெருக்குங்கள்! விடைகள்.

1- ஆகாயத்தை நோக்கிப் பந்தை நேரே மேலே எறிந்தால் அது உங்களிடம் தானே மீண்டும் திரும்பி வரும்!

2- 8+8+8+88+888 — 1,000. 3- ஹம்மிங் பறவை.

4- முந்திரி. 5- கண்களைத் திறந்த வண்ணம் அவை நித்திரை செய்யும்.

# உலகமெலாம் தமிழோசை

[3-ஆம் பக்கத் தொடர்ச்சி]

**மூன்று காரணங்கள்**

இவைகளை விலக்கினல் பிறமொழியாளர் தமிழை விரும்பிக் கற்கும்படி செய்ய வேறு வழி யாது? ஒரு மொழியை அதற்குரியரல்லாத பிறர் கற்க விரும்புவதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம்.


1. **ஆத்மீகம்**: ஒரு மொழியிலே ஆத்மீகத்துறையிலே சிறந்த இலக்கியங்கள் இருப்பின் மொழி பெயர்ப்பு மூலம் அவைகளை அறிவதோடு அமையாமல் மூல நூல்களையே நேரே வாசிக்கும் நோக்கத்தோடு பிறர் அம்மொழியைக் கற்க விரும்புவர். இத்துறையிலே தமிழ் மொழியிலே தலைசிறந்த பல இலக்கியங்கள் இருக்கின்றனவெனினும் இன்றைய உலகிலே இத்துறையிலே நாட்டமுள்ளோர் தொகை மிகக் குறைவு.

2. **கலை**: சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், இசை, சிறுகதை, நாவல் ஆகிய கலைகளிலே எந்த நாடு தலைசிறந்து நிற்கின்றதோ அந்த நாட்டு மொழியைப் பிறநாட்டினருங் கற்க விழைவது இயல்பு. இத்துறையிலும் தமிழ்நாடு தலைசிறந்து நிற்கின்றதெனத் துணிந்து கூறலாம். ஆனல் இத்துறையிலே தமிழ் நாட்டிலேயுள்ள தனிப்பெருஞ் சிறப்புக்களை ஏற்கெனவே உலகப் பெருமொழிகளாயுள்ள ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், ருஷியன் ஆகிய நான்கு மொழிகள் மூலமும் உலகுக்கு அறியப்படுத்தல் வேண்டும்.

2. **விஞ்ஞானமும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தற்குரிய கருவிகளும்**: இதுவே மிக முக்கிய காரணம். இன்றைய உலக மக்கள் அனைவரும் இம்மையிலுள்ள சுகங்களைப் பூரணமாக அனுபவிப்பதற்கான சாதனங்களைக் கண்டு பிடிப்பதிலேயே நாட்டமுள்ளவராயிருக்கின்றனர். தனது சிந்தனையாலும் அயராத உழைப்பினலும் எந்த நாடு தனக்குமட்டு மன்றிப் பிறருக்கும் பயன்படக்கூடிய புதுப் புதுச் சாதனங்களைக் கண்டு பிடிக்கின்றதோ அந்த நாட்டையே இன்று உலகம் வியக்கின்றது. அதன் மொழியே உலக மொழியாகின்றது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், ருஷியன் ஆகிய மொழிகளின் ஓசை இன்று உலகெலாம் பரவுவதற்கு இதுவே காரணம். இத்துறையிலே தமிழன் தனது ஆற்றலைக்கொண்டு தன் தேசத்தவருக்கு மட்டுமன்றிப் பிற தேசத்தவருக்கும் பயன்படக்கூடிய நவீன சாதனங்களை ஆக்கவல்ல நிலையை என்று அடைகின்ருனே அன்றுதான் தமிழோசை உலகமெலாம் பரவ அடிகோலும் நாளாகும்.

> **இலகுவான நடையில் விஞ்ஞானம்**
>
> பொதுமக்களுக்கு விளங்கும்படியான இலகுவான நடையில் விஞ்ஞானிகள் விஞ்ஞான நூல்களை எழுதி வெளியிட முன்வர வேண்டுமென்பது நேருஜி கருத்து. சமீபத்தில் ஆக்ராவில் நடைபெற்றதேசிய விஞ்ஞானக்கழகத்தின் 28-வது ஆண்டு மாநாட்டுக்குப் பாரதத்தின் முதலமைச்சர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் மேற்கண்ட தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.


தந்தி: "சோதி"



தொலை பேசி எண் 457

திரு. கந்தப்பு பரமலிங்கம்

★ 1945ல் தனது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தார். இப்போது நல்எண்ணெய் வியாபாரத்தில் நற்கியாதி பெற்று பல பொது ஸ்தாபனங்களிடம் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுள்ளார்.

★ 1949ல் முனிசிபல் சுகாதாரப் பகுதியார் நடாத்திய சுகாதார விழாவிலும் நற்சாட்சிப் பத்திரம் பெற்ருர்.

★ 1954ல் இந்துமகளிர் கல்லூரி நடாத்திய காணிவலிலும் நற்சாட்சிப் பத்திரம் பெற்ருர்.

இப்பொழுது இலங்கையில் நற்கியாதிபெற்று விளங்கும்

**K. P. லிங்கம் நல்எண்ணெயை**

வாங்கி எப்பொழுதும் உபயோகியுங்கள்:

தயாரிப்பாளர்:

**க. பரமலிங்கம்,**
26, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

# சிறுவர் பகுதி

செல்வச் சிறுவர்களே!

உங்களில் அநேகர் சுவையான கடிதங்கள் எழுதியிருக்கின்றீர்கள். அவை அனைத்தையும் படித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். சில கடிதங்களை நான் பத்திரப் படுத்தி வைத்திருக்கின்றேன். நேரம் கிடைக்கும் போது அக்கடிதங்களிற் சிலவற்றுக்கு இப்பகுதியிலே மறுமொழி எழுதுவேன். அதுவரை மருமக்கள் அவசரப்படாமல் இருக்கவேண்டும்.

ஒரு மருமகன், அருமையான ஒரு கேள்வி எழுதி அதற்கு விளக்கம் தருமாறு கேட்டிருக்கின்றான்.

கடலில் எப்பொழுதும் திரைகள் இருப்பதன் காரணமென்ன? என்று அவர் கேட்டிருக்கின்றார். இது ஒரு நல்ல கேள்விதான்; அவர் மட்டுமன்றி மற்றையோரும் தெரிந்துகொள்வதற்காக இதோ, அதன் காரணத்தை எழுதுகின்றேன்.

கடலிலே எங்காவது ஓர் இடத்தில் காற்றானது எப்பொழுதுமே வீசிக் கொண்டிருக்கும். காற்றுத்தான் திரைகளை உண்டாக்குகின்றது. காற்று மெதுவாகவும் வீசும்; வேகமாகவும் வீசும். மெதுவான காற்று, நீரை அசையச் செய்வதற்குப் போதுமானது. சிலவேளைகளிற் பகற்பொழுதிலே, புயல் உண்டாகமுன்னர் காற்று அசைவின்றியிருக்கும். அப்போது கடல் பளிங்கு (கண்ணாடி) போலக் காணப்படும். காற்று மிக வீசி, கடல் கொந்தளிப்பதாற் பென்னம்பெரிய திரைகள் உண்டாகின்றன.

சிறுவர்களே! உங்களில் அநேகர் கட்டுரைகள், கதைகள் எழுதியனுப்ப விரும்புகின்றீர்கள். அப்படி அனுப்பும்போது கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் மையால் அழகாக எழுதி அனுப்பவேண்டும். பென்சிலால் எழுதி அனுப்புங் கதைகளையும் கட்டுரைகளையும் நான் ஏற்கமாட்டேன். இன்னும் ஒன்று நினைவூட்ட விரும்புகின்றேன். நீங்கள் அனுப்புங் கதைகளும் கட்டுரைகளும் உங்கள் சொந்த முயற்சியாக இருக்கவேண்டும். அடுத்தவாரம் மீண்டும் சந்திப்போம்.

சின்ன மாமா

# சிறுவனின் வீரம்

ஒரு சிறுவன் தையற்கடை ஒன்றில் வேலை செய்து வந்தான். ஒருநாள் அவன் தன்னுடைய தையல் ஊசியை இழந்து விட்டான். எங்கும் தேடிப்பார்த்தும் அது கிடைக்கவில்லை. ஆனபடியால், அவன் அங்கு இருந்தபடியே வெளியே கடலைப் பார்த்த வண்ணம் இருந்தான். அப்பொழுது இங்கிலாந்துக் கப்பற்படை ஒன்று கடலிலே வந்துகொண்டிருந்தது. சிறுவன் உடனே தன் இடத்தை விட்டுக் கடற்கரைக்கு ஓடினான்.

கடற்கரையை அடைந்ததும் அச்சிறுவன் அங்கிருந்த ஒரு வள்ளத்துள் குதித்தான். வள்ளத்தை விரைவாக ஓட்டி அவன் அங்குள்ள கப்பற்படை அருகிலேயே சென்றுவிட்டான். மறுகணம், வள்ளத்திலிருந்து கப்பற்படையைச் சேர்ந்த ஒரு பெரிய கப்பலிற் குதித்து விட்டான். அச்சிறுவன் அக்கப்பல் தலைவனிடம் சென்று தன்னையும் கப்பற்படையிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினான். தலைவனும் அச்சிறுவனை ஏற்றுக் கொண்டான்.

அந்த நாட்களில் இங்கிலாந்துக் கடற்படை அதிகமாகப் போரில் ஈடுபட்டிருந்தது. ஆதலினாலே, அந்தச் சிறுவன் சேர்ந்த அடுத்த நாளே இங்கிலாந்துக் கப்பற் படைக்கும் பிரான்சுக் கப்பற்படைக்குமிடையே போர் மூண்டது. சிறுவனும் அதிற் சேர்ந்து தன் கடமையை ஓரளவுக்கு நன்றாகவே செய்தான். போர் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதைப் பார்த்த சிறுவனுக்கு அது எப்பொழுது, எப்படி முடியும் என்றுவிளங்கவில்லை. எனவே, தன் பக்கத்தே நின்ற ஒரு மனிதனைப் பார்த்து "எதிரி தோற்றுவிட்டான் என்பதை எவ்விதம் நாம் அறிந்து கொள்ளலாம்?" என்று கேட்டான். அதற்கு "அதோ! அந்தக் கப்பலின் உச்சியில் ஒரு கொடி பறப்பது தெரிகின்றதல்லவா? அந்தக் கொடியை அவர்கள் எப்போது கீழே இறக்குகின்றார்களோ அப்போதே அவர்கள் தோல்வி அடைந்துவிட்டார்கள் என்பது அறிகுறி" என்று அந்த மனிதன் கூறினான்.

"பூ! அவ்வளவு தானா?" என்று சொல்லிவிட்டு அச்சிறுவன் அங்கிருந்து விரைந்து சென்றான்.

அக்காலத்திலே கப்பல்கள் இன்று போல் வெகு தூரத்தில் நின்று போர் புரியவில்லை. அவை மிக அருகே நின்று தான் போர் புரிந்தன. ஆதலால், பக்கத்திலே நின்ற பிரான்சுக் கப்பலுக்குள்ளே சிறுவன் குதித்துவிட்டான். போர் நடந்து கொண்டிருந்த அமர்க்களத்தில் அவனை ஒருவருமே கவனிக்கவில்லை. அவன் கிசு, கிசு வென்று பாய் மரத்தில் ஏறி மேலே பறக்கவிடப்பட்டிருந்த கொடியை அவிழ்த்தான். பின், அதைத் தன் உடலிலே சுற்றிக் கட்டிக்கொண்டு கீழே இறங்கி வந்து விட்டான்.

அங்குள்ளவர்கள் ஒருவரும் அவனுடைய துணிகரமான செயலைக் கவனிக்கவில்லை. ஆனால், சில நிமிடங்களில் இங்கிலாந்துக் கப்பற்படை வீரர் பிரான்சுக் கப்பலின் கொடி இறக்கப்பட்டுவிட்டதைக் கவனித்துவிட்டார்கள். அவ்வளவு தான்! எதிரிகள் தோற்றுவிட்டனர் என்று நினைத்து அவர்கள் பிரான்சுக் கப்பலுக்குள்ளே குதித்து விட்டார்கள். எதிர்பாராத, ஆனால் துணிச்சலான இந்தத் தாக்குதல் பிரான்சுக் கப்பற்படை வீரரைச் சின்னாபின்னமாக்கி விட்டது. இங்கிலாந்துக் கப்பற்படையினருக்குத்தான் வெற்றி என்பதைக் கூறவும் வேண்டுமா?

வெற்றி அடைந்ததும், சிறுவன் தன்னிடமிருந்த பிரான்சுக் கப்பற் கொடியை இங்கிலாந்து வீரர்களுக்குக் காட்டினான். அவர்கள் மிகுந்த ஆச்சரியத்துக்குள்ளாயினர். கப்பல் முழுவதும் அவ்வீரச் சிறுவனின் கதை பரவியது. கப்பலின் தலைவனிடம் சிறுவன் அழைத்துச் செல்லப்பட்டான். தலைவனே அந்த நிமிடமே சிறுவனுக்கு ஓர் உயர்ந்த பதவியை அளித்தான்.

இதே சிறுவன் தான் பின்னொருகாலத்தில் இங்கிலாந்துக் கப்பற் படைக்குத் தலைவனானான். அவன் பெயர் அட்மிரல் ஹொப்சன்.

## புதிய உறுப்பினர்

'ஈழநாடு' சிறுவர் பகுதியிற் சேர்ந்துள்ள உறுப்பினர்களின் பெயர் வருமாறு :

**க. மனோன்மணி**
'தில்லை வாசம்'
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

**இ. அருநாயகம்**
றக்கா ரோட்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

**மா. குணநாதன்**
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

**த. பூங்கோதை**
'சிவசக்தி'
மானிப்பாய்.

**சந்திரா மயில்வாகனம்**
'மாலினி பாங்ஸ்'
உரும்பராய்.

**த. மாணிக்கம்**
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(—தொடரும்)

# அறிவைப் பெருக்குங்கள்.

1. ஒரு பந்தை நீங்கள் முழுப்பலம் கொண்டும் எறிந்து, பின்னர் நிறுத்தி, ஒரு பொருளிலும் தட்டாமல் மீண்டும் உங்களிடம் திரும்பி வரச் செய்வீர்களா?
2. 8 ஆகிய இலக்கத்தை 8 முறை எழுதி அக் கூட்டுத்தொகையை 1000 ஆக்குவீர்களா?
3. பின் பக்கமாகவும் பறக்கக்கூடிய பறவை ஒன்று உண்டு. அது எது?
4. எந்தப் பழத்திற்கு அதன் வெளியே விதை உண்டு?
5. மீன்கள் நித்திரை செய்வதுண்டா?
6. சிலந்திகள் ஏன் தங்கள் வலைகளிற் சிக்குவதில்லை?

(விடைகள் : 10-ம் பக்கம் பார்க்க.)

## பேதைமை

பேதை என்பது அறியாமை எனவும் அறிவில்லான், வறியவன் எனவும் பொருள் படும். மை என்பது பண்பினை உணர்த்தி நிற்கும் எழுத்து. பேதம் என்பது வேற்றுமை. பேதமை என்பது வேறுபட்ட தன்மை எனப் பொருள் படும். ஆகவே அறியாமை என்பதைக் குறிக்க வேண்டிய இடத்திற் பேதைமை என எழுதலே தக்கது. பேதமை என எழுதல் பிழை.

பொன். மு.

## குழந்தை எழுத்தாளர் சங்கம்

சென்னையிலுள்ள குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் கிளைச் சங்கம் ஒன்று சமீபத்தில் நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டது. பின்வருவோர் இச்சங்கத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். **உபதலைவர்:** க. பாலசுப்பிரமணியம், **உபகாரியதரிசி:** திரு. க. ஆனந்தகுமாரசுவாமி. **தனதிகாரி:** திரு. ரி. சண்முகவேல். **கணக்குப் பரிசோதகர்:** திரு. க. ஞானசுப்பிரமணியம், **செய்குழு உறுப்பினர்:** திரு. எஸ். சோமசுந்தரமூர்த்தி, திரு. எஸ். சிதம்பரநாதன், திரு. வ. சிவகுரு. **ஆலோசனைக்குழு:** திரு. க. குணரத்தினம். (ஆசிரியர்); திரு. வ. தங்கராசா (ஆசிரியர்)

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய சிறுவர் சிறுமியர் அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 21-2-59க்குப்பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

**சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும் :

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(14-2-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்........................................................

விலாசம்..................................................

..................................................

..................................
கையொப்பம்

..................................
பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

இங்கே வெட்டவும்

# சூழ் நிலை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கேட்பானே? இதையெல்லாம் நினைத்து நான் வேதனைப் படுகிறேனே யொழிய, நிர்மலா சிறிதும் யோசித்ததாகத் தெரியவில்லையே?

ஆத்திரமும் குழப்பமும் நிறைந்த உள்ளத்தைச் சுமந்தவாறு நடந்து குறிப்பிட்ட வீட்டு வாசலில் வந்து நின்றேன். சிறிய வீடுதான் அது. வாயிற் கதவு இலேசாகத் திறந்திருந்தது. உள்ளே நுழைந்ததும் நான் கண்ட காட்சி...... சின்னஞ்சிறு குழந்தையொன்றைத் தன் மடியில் கிடத்திக் கண்ணாடிப் புட்டியொன்ருல் பால் புகட்டிக்கொண்டிருந்தாள், நிர்மலா! என் கண்களையே என்னல் நம்ப முடியவில்லை!

அவள் முகத்தில் தவழ்ந்த புன்னகை என்னை வரவேற்றது. அசாதாரணத் திகைப்போ, செய்த குற்றத்திற்கான தண்டனையை அனுபவிக்கப் போகிறோம் என்ற உணர்ச்சியோ அந்த முகத்திற் பிரதிபலிக்கவில்லை. "வாருங்கள்" என்ருள், ஒரே வார்த்தையில்.

"நிர்மலா! இதென்ன காரியம்? உனக்கே அழகாக இருக்கிறதா! நிதானமிழந்து, இப்படி ஒரு காரியம் செய்யலாமா? இதன் விளைவைப்பற்றிச் சிந்தித்தாயா? உன்னிடம் நம்பிக்கை வைத்திருந்த ஆஸ்பத்திரி அதிகாரிகள், நோயாளிகள், உன் அண்ணு, நான்—எல்லாரையும் ஏமாற்றிவிட்டு இப்படி ஓடிவந்திருக்கிருயே? நீயாக ஏற்றுக்கொண்ட தொழிலை, திடீரென்று புறக்கணித்துவிட்டு வரக் காரணமென்ன? சிறையிலிருந்து கைதிகள் தப்பியோடுவதுபோல் நீ இரகசியமாக ஓடிவந்தது, உன் நல்ல பெயருக்கே எவ்வளவு இழுக்கைத்கேடித்தந்திருக்கிறதுஎன்பதை அறிவாயா?"—ஆத்திரம் தீரக் கத்தினேன்.

குழந்தையை அருகிலிருந்த தொட்டிலில் விட்டு விட்டு நிர்மலா, "நீங்கள் இப்படிக் கோபித்துக்கொள்ளுவீர்கள் என்பதை நான் எதிர்பார்க்காமல்லில்லை. ஆனல்......" என்று தயக்கத்துடன் பேச ஆரம்பித்தாள்.

நான் குறுக்கிட்டு, "நீ செய்தது நியாயம்! நான் கோபித்துக்கொள்ளுவதுதான் தவறு. அப்படித்தானே?" என்றேன், அதே கடுமையான குரலில்.

"கோபித்துக்கொள்ள உங்களுக்கு உரிமை யுண்டு. நான் தவறுசெய்தால் கண்டிக்க உரிமையுள்ளவர்தாம் நீங்கள். ஆனல், நான் செய்தது பெரிய குற்றம்தான என்பதைச் சிந்திக்கவேண்டும்" என்ருள் சாந்தமாக அவள்.

"முன்பின் தெரியாத ஒருவனுடன் நீ ஓடிவந்திருப்பது நியாயம் என்று என் நாலு வயதுப்பிள்ளைகூட ஒப்புக்கொள்ள மாட்டானே? எந்த ஆதாரத்தைக்கொண்டு உன் செயலுக்குப் பலம் தேடிக்கொள்ளப்போகிருய்? விவேகமிழந்து, நேர்மைக்கு முரணுக, குடும்பத்துக்கே களங்கம் விளைவிக்கும் முறையில் நடந்துகொண்ட நீ, உலகில் எல்லோருடைய அனுதாபத்தையும் இழந்துவிட்டாய் ஒரு நொடியில். உன் அண்ணனுக்குத் தெரிந்தால் மனமொடிந்து போய்விடுவானே?" என்று சீறினேன். சிவராமன் எனக்களித்திருந்த உரிமையின் பேரில்தான் அவ்விதம் பேசினேன்.

நிர்மலா சாந்தமாகக் கூறினுள்: "அண்ணுவுக்கு என்முடிவைத் தெரியப்படுத்தி இன்று கடிதம் எழுதிவிட்டேன். நான் சொல்லப்போவதைச் சற்றுக் காதுகொடுத்துக் கேளுங்கள். நான் ஏதோ அவசரப்பட்டுச் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்டுவிட்டதாகத்தான் உங்களுக்குத் தோன்றும். என் நிலையில் உள்ள ஒரு பெண்ணுக்குத்தான் என் உணர்ச்சிகள் புலப்படும். செடியில் மலர்ந்து நிற்கும் பூவின்மீது தென்றல் தவழ்ந்தால், மலர் மகிழ்ச்சியோடு அசைந்தாடும். தென்றலும் மணம்பெறும். என் வாழ்க்கை மலர் இதழ் விரியும்போதே சூருவளி வீசிக் கிளையோடு முறிந்து விழுந்து விட்டது. அந்தச் சோக நினைவுகளில் உழன்று மனம் புழுங்கித் தவித்து வாழ்வின் ஒவ்வொரு விநாடியையும் நரகமாக்கிக் கொள்ளுவதைவிட, நோயாளிகளுக்குச் சேவை செய்து என் துன்பத்தைத் துடைத்துக் கொள்ளலாமென்றுதான் இந்த வாழ்க்கையை மேற்கொண்டேன். பயிற்சிக்காலத்தில் என் மனம் வெகுவாக அமைதியோடுதானிருந்தது. ஆனல் பயிற்சி முடிந்ததும் பிரசவ ஆஸ்பத்திரியில் எனக்கு வேலை கிடைத்தது ஒரு சோதனைதான்! என் மன உறுதியைச் சோதிப்பதாக அமைந்தது இப்பணி. எந்தச் சூழ்நிலையில் நான் மனச்சாந்தி பெறலாமென்று நம்பினேனே அதுவே என்உறுதியைக்குலைப்பதாக அமைந்தது. பிரசவித்த பின் குழந்தையோடு வீடு திரும்பும் தாய்மார்களின் மகிழ்ச்சி நிரம்பிய முகத்தைப் பார்க்கும்போதெல்லாம், இழந்துவிட்ட எதையோ எண்ணி, எண்ணி அழுதது என் உள்ளம். பாலுக்கு அழும் குழந்தையைத் தூக்கி மார்போடணைத்துக்கொள்ளும் தாயின் பரிவும், பிறந்த சிசு யாருடைய போதனையுமின்றி வாயைக் கூப்பிப் பாலருந்தி உயிர்வாழ முயலும் இயற்கை நியதியும் நான் இழந்துவிட்ட போகங்களை எனக்கு நினைவூட்டத்தான் செய்தது. இயற்கை என்னைப் பார்த்துஏளனம்செய்ததை ஒவ்வோரு நிமிடமும் உணரத்தொடங்கினேன்.

என் உணர்ச்சிகள் உச்சநிலையை எய்தியபோதுதான் 'இவர்' மனைவி அங்கு வந்து சேர்ந்தார். இந்தக் குழந்தையைப் பெற்றுவிட்டு அவள் போய்விட்டாள். பிறந்த குழந்தையைஒருதடவை கண்திறந்து பார்க்கக்கூடக் கொடுத்துவைக்கவில்லை, அவள். அதன் பிறகும் ஒருவாரம்வரை அவர் தினமும் ஆஸ்பத்திரிக்கு வந்து குழந்தையைப் பார்த்துவிட்டுச் செல்லுவார். அவரிடம் எனக்கு ஒருவித அனுதாபம் பிறந்தது.

'இதை எப்படிக் காப்பாற்றப்போகிறேனே?" என்று புலம்பினுர் ஒருநாள். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் துடித்தது என் உள்ளம். எப்படித்தான் என் மனதைத் திறந்து அவரிடம் அப்போது பேசினேனே, எனக்கே விளங்கவில்லை. அவர் என் யோசனைக்கு இணங்கினுர். என் பழைய கதையையும் அவருக்குச் சொன்னேன். நான் வாழ்ந்த லட்சணந்தான் உங்களுக்குத் தெரியுமே? கலியாணம் முடிந்த மறுநாளே என் அண்ணு கிளம்பிவிட்டார், என்னைப் புக்ககத்தில் விட்டுவிட்டு தாலிகட்டிய புருஷன் மறுநாளே இருதய நோய் ஆஸ்பத்திரிக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். சிகிச்சை பெற்றுக்கொண்டு சில மாதங்களில் திரும்பிவிடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு. அவரை அதன்பிறகு நான் உயிரோடு காணவில்லை. கல்யாணத்தின் பிறகு ஒருநிமிஷம் அவரைத் தனிமையில் நான் சந்தித்ததுமில்லை. ஒரு வார்த்தைகூடப் பேசியறியேன். இது உங்களுக்கே தெரியுமோ தெரியாதோ......"

நிர்மலா இதைக் கூறும்போது ஏறத்தாழ முப்பத்தைந்து வயது மதிக்கக்கூடிய ஒரு மனிதர் உள்ளே நுழைந்தார். மிகவும் இளமையான தோற்றம். சாந்தமான முகம். என்னை வியப்புடன் நோக்கினுர் அவர்.

"என் அண்ணுவின் நெருங்கிய நண்பர் வேலாயுதம் என்று சொன்னேனே—இவர்தான்" என்று கூறி என்னை அவருக்கு அறிமுகம் செய்வித்தாள் நிர்மலா. அவரைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை.

"நமஸ்காரம்" என்று கரங்கூப்பியவர், "இந்தப் பெண்ணுக்கு எவ்வளவோ சொன்னேன். உன் அண்ணுவின் சம்மதத்துடன் உன்னை மணந்துகொள்ளுவதுதான் முறை. அவசரப்படாதே" என்று எச்சரித்தேன். இவள் கேட்கவில்லை; பிடிவாதமாக வந்துவிட்டாள். நீங்களே சொல்லுங்கள்—மிஸ்டர் வேலாயுதம்! என் மனைவி இறந்து பதினைந்து நாட்கள் கூட ஆகவில்லை. 'ஆஸ்பத்திரியில் கண்ட ஒரு நேர்ஸை இழுத்து வந்துவிட்டான் இந்தக் கல்நெஞ்சன்' என்று உலகம் என்னை அவதூருகப் பேசாதா?" என்ருர்.

நான் கேட்கவேண்டியதை, கேட்கநினைத்ததை அவரே சொல்லிவிட்டபிறகு அவரிடம் நான் எப்படிக் கோபிப்பது?

'முறை, முறையென்று இவர் சொல்லுகிருரே—கல்யாணமாகிப் புருஷனைப் பறிகொடுத்த ஒரு பெண், பெண்சாதியை இழந்த வேருெருவரை மணந்துகொள்ளுவதை யாராவது எளிதில் ஒப்புக்கொள்ளுவார்களா? முறைப்படி இது நடக்கக்கூடியதுதானு? அண்ணுவுக்குத்தெரிவிக்காமலிருக்கப் போகிறேனு என்ன? இதில் இரகசியம் என்ன வந்தது? மூடி மறைத்து வைக்கும்படியான குற்றம் என்ன செய்துவிட்டேன், நான்?" என்று என்னைப் பார்த்துக் கேட்டாள், நிர்மலா.

நான் மௌனமாக நின்றேன்.

"நீங்கள் வேண்டுமானுல் நிர்மலாவை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம். அவள் அண்ணு சம்மதித்ததும் நான் அழைத்துக்கொள்ளுகிறேன். கிரமப்படி மணம் செய்துகொள்ளுகிறேன்" என்ருர், அவர், உறுதியோடு.

ஆனல் நிர்மலாவும் அதே உறுதியுடன், "அது அவசியமில்லை. நான் இங்கிருந்து கிளம்பவும் விரும்பவில்லை. இது போன்ற விஷயங்களில் தீர யோசியாது ஒரு பெண் எந்த முடிவுக்கும் வரமாட்டாள். முடிவுக்கு வந்தபின் அவள் உறுதி ஒருபோதும் தளராது" என்ருள்.

நான் என்ன சொல்லுவது? மௌனமாக வெளியேறினேன், அங்கிருந்து.

* * *

"இப்போது சொல்லுங்கள், எழுத்தாளரே! சூழ்நிலையின் வலிமை நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு சாமான்யமா என்று?—வேலாயுதம் வெற்றிப்பார்வையுடன் கேட்டார்.

நான் அவருக்கு என்ன பதிலிறுப்பதென இன்னமும் யோசித்துக் கொண்டுதானிருக்கிறேன்.

"பிறருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தாங்களும் அப்படியே நடக்க வேண்டும். சொல்லுக்கும் செயலுக்கும் துளிக்கூட வித்தியாசம் இருக்கக் கூடாது......" என்பதை இக் கட்டுரையில் 'மகரம்' சுவையாக விளக்குகின்ருர்.

# பதில் எங்கே?

— மகரம் —

நான் எழுதும் கடிதங்களைப் படித்துவிட்டு உடனுக்குடன் எனக்குப்பதில் போடுகிறவர்களைவிடப் பதில் போடாதவர்களே அதிகம்! எனக்கு வரும் கடிதங்களுக்கு நான் மறுநாளே பதில் எழுதிவிடுவது வழக்கம். என்னுடைய கட்டுரைகளையோ புத்தகங்களையோ பாராட்டி அன்பர்கள் எழுதும் கடிதங்களுக்கு அன்றே அப்பொழுதே நன்றி தெரிவித்து மறுமொழி எழுதிவிடுவேன். ஆனல் என்னல் எழுதப்பெறும் பலகடிதங்கள் பதில்பெருமற் போவதற்குக் காரணம் பதில் எழுத வேண்டியவர்களின் சோம்பேறித்தனம் இல்லை. ஒருவரைப் புகழ்ந்தோ, அல்லது அவருடைய கல்யாண குணங்களைப் பாராட்டியோ, அல்லது அவருடைய பேச்சையும் நடையையும் ஆதரித்தோ கடிதம் எழுதிப் பாருங்கள். எவ்வளவு 'உரித்த வாழைப்பழத்தை விலைபேசும்' சோம்பேறியாக இருந்தாலும் அவர் மறுநாளே, "உங்கள் அன்புக்கு நன்றி. என்னை அளவுக்கு மீறித் தோத்திரம் செய்துவிட்டீர்கள். நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன்," என்று பதில் எழுதி உங்களிடம் சரணுகதி அடைந்து விடுவார். ஆனல் எவ்வளவுதான் வேண்டியவராக இருந்தாலும் அவர் செய்கிற காரியங்களில் உள்ள தவறை எடுத்துக் காட்டி, அவர் பேச்சுக்கும் நடத்தைக்கும் உள்ள வித்தியாசத்தைப் பகிரங்கப்படுத்திக் கடிதம் எழுதினுல் அவர் என்ன செய்ய முடியும்? அவர்செய்யாத பிழையைச் செய்ததாக எழுதினுல், "நான் அப்படிச் செய்யவில்லை. நீ சொல்வதுதான் பிழை," என்று அவர் எதிர் தாக்குதல் நடத்தக்கூடும். அவருடைய குற்றத்தை விண்டு அவர்முன் வைக்கும்போது அவர் விலவிலத்துப்போய் மறுக்கவும் தைரியமின்றி ஒப்புக்கொள்ளவும் நேர்மையின்றி முடிவில் வாளா இருந்து விடுகிருர்!

"சொன்னல் விரோதமிது ஆயினும் சொல்லுவன்" என்ருர் நம்மாழ்வார். அவருடைய வாய்மொழியை நான் கடைப்பிடித்து, ஒருபடி மேலேபோய், விரோதம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டாலும் பயப்படாமல், நான் என்ன நினைக்கிறேனே அதைச் சொல்லுவதோடு நில்லாமல் எழுத்துமூலமாகத் தெரிவித்து விடுவேன்! அப்படிப்பட்ட ஆசாமிகளிடமிருந்து நாளைவரை எனக்கு யாதொரு விதமான கடிதமும் பதிலாக வராதது எனக்குப் பெருமையாக இருக்கிறது! நான் யார் யாருக்கு எந்த எந்த விஷயங்கள்பற்றிக் கடிதம் எழுதி அவர்கள் வாயை அடைத்து விட்டிருக்கிறேன் என்பதைச் சற்று விவரிக்கலாமா?

பிறருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தாங்களும் அப்படியே நடக்கவேண்டும். சொல்லுக்கும் செயலுக்கும் துளிக்கூட வித்தியாசம் இருக்கக்கூடாது. அப்படி உங்களால் நடக்கமுடியாது என்று தோன்றினுல் தயவுசெய்து உபதேசம் செய்வதையாவதுநிறுத்தி விடுங்கள்-என்பது என்னுடைய தீவிரமான கொள்கை. வஞ்சகநாவொன்று பேச, கை வேறுஒன்று செய்யும் நபர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. அவர்களை உடனே, "நீர் இப்படிச் சொல்லிவிட்டு அப்படி ஏன் செய்தீர்?" என்று எழுத்து மூலம் கேட்டுவிடுவேன். இதனுல் எனக்கு விரோதிகள் அதிகமாகி இருக்கிருர்கள். ஆனல் நான் பயப்படுவதில்லை. பயந்து அவர்களிடம் நான் குழைவேனுகில் சொல் ஒன்றும் செயல் மற்ருென்றுமாக நடக்கும் கோஷ்டியில் நானும் சேர்ந்தவனுகி விடமாட்டேனு?

* * *

ஒரு பத்திரிகையில் அதன் ஒவ்வொரு இதழிலும் தமிழைப் பிழையற எழுதுவது எப்படி? என்ற தலைப்பின்கீழ் நாம் சாதாரணமாகச் செய்யும் எழுத்துப்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் எடுத்துக் காட்டி; இது தவருன பிரயோகம், இது சரியான உருவம், என்றெல்லாம் எழுதிவந்தார்கள். எனக்கு மிகவும் பிடித்த

(13-ம் பக்கம் பார்க்க.)


நகைகளுக்கும் வைரங்களுக்கும்



நகை மாளிகை

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

65, கன்னுதிட்டி - யாழ்ப்பாணம்

# எனது திட்டம் காட்டும் வழி

— ஆச்சாரிய வினோபாஜி —

இன்றைய இராஜதந்திரிகள் எல்லாம் பண்டைக்காலத்தின் விளைவு ஆவர். புதிய காலத்தை நிர்மாணிக்கும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை. எனவே, இவர்களாற் பயனென்ன? ஒன்றுமில்லை. ஆனால் இன்றைய தேர்தல்களிலே தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள் இவர்களே. தேர்தல்களிற் சாதாரணமானவர்கள் வெற்றி பெற்று வருகிறார்களேயன்றி, முதல்தரமானவர்களுக்கு அதில் இடமே இல்லை. ஆகையால், இவர்களுள் எவருக்கும் சீரிய அறிவிருக்கும், அவரால் சமுதாயத்தின் இன்னல்கள் தீரும் என்பதற்கு இடமில்லை. எந்த அறிவினால் இன்னல்கள், சிக்கல்கள் தோன்றியிருக்கின்றனவோ அதே அறிவுகொண்டு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால் இன்னல்களை எவ்வாறு போக்கமுடியும்? இவர்களிலிருந்துவேறு வகையான மனம் படைத்த, நடுவுநிலையில் நின்று எதையும் பார்க்கக்கூடிய ஒருவர் கிடைத்து அவருக்கு அறிவாற்றலுமிருந்து, அவர் சொல்லுவதைத்தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியாளர்கள் கேட்பதாகவும் இருந்தால், இந்தச் சாதாரண ஆட்களின் தேர்தலில், அவர்கள் நடத்தும் ஆட்சியில் ஆபத்தில்லை யென்று சொல்லலாம்.

இன்றைய மக்களாட்சியில் 49 பேருக்கு எதிராக 51 பேர் வெற்றி பெறுகிறார்கள். **தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு நூற்றில் 51 பேரின் ஆதரவே இருப்பினும், அவர்கள் நூறு பேரையும் கட்டியாள வேண்டியிருக்கிறது. இந்த 51 பேரிலும் எல்லோருமே நல்ல அறிவாளிகள் என்பதற்கில்லை. அவர்களுக்கு எப்பொழுதும் மக்களின் தயவு தேவையாய் இருக்கிறது. எனவே அவர்கள் சொல்லுகிறபடி இவர்கள் நடக்கவேண்டியதாகிறது.** அதாவது, தேர்தலில் வெற்றி பெற்றபின் இவர்கள் அவர்களது தலைவர்களாயில்லாமல் ஊழியர்களாகிவிடுகிறார்கள். தேர்ந்தெடுத்தவர்களின் கட்டளைகளை இவர்கள் தலைமேல் தாங்கவேண்டியிருக்கிறது. இவர்களுக்கு எஜமானர் கடவுளல்ல ஆதரவாளரே. எனவே, இவர்கள் கடவுளுக்கு அஞ்சுவதை விடுத்து ஆதரவாளருக்கு அஞ்சிநடக்கவேண்டியிருக்கிறது.

ஆனால், காந்தியடிகளின் நிலை எவ்வாறிருந்தது? "என் உள்ளத்தில் ஒரு தேவதை இருக்கிறது; அதன் ஏவலின்படியே நான் எதையும் செய்வேன்" என்று அவர் சொல்லிவந்தார். பர்டோலி சத்தியாக்கிரகம் தொடங்கவிருந்த சமயத்திற் சௌரிசாராவில் கலகம் நடந்தது. அப்பொழுது காந்தியடிகளே "சத்தியாக்கிரகத்திற்கு இது தருணமல்ல, நான் அதை நிறுத்திவிட்டேன்" என்று அறிவித்தார். பத்திரிகைகளெல்லாம் இவ்வாறு முடிவு செய்ததற்காக அவரைக் கண்டித்தன; தூஷித்தன. ஆனால் காந்தியடிகளோ சிறிதும் அசைந்து கொடுத்தாரில்லை. "உலகமே என்னைக் கண்டித்தாலும் நான் என் உள்ளக்குரலின்படியேதான் நடப்பேன்" என்று சொல்லி இயக்கத்தை நிறுத்திவிட்டார். இதிலேதான் நாம் அவரது பேராற்றலைக் காண்கிறோம். **அவர் எதையும் விரிக்கவோ குறுக்கவோ சக்தி பெற்றிருந்தார். ஆனால் இன்றைய தலைவர்களுக்கோ எதையும் தொடங்க, விரிக்கத் தெரிகிறதேயன்றி, விரித்த ஒன்றை மடக்க, தொடங்கியது ஒன்றை நிறுத்திவைக்க, முடியவில்லை; தாமே தொடங்கிய ஒன்றிற் சிக்கிக்கொண்டு வெளியேற முடியாது விழிக்கிறார்கள்.**

ரிக்வேதத்தில் ஒரு வர்ணனையுள்ளது. சூரிய நாராயணன் காலையிலே தன் கிரணங்களை எங்கும் பரப்பவும், மாலையிற் பரப்பிய கிரணங்களையெல்லாம் தம்மிடம் இழுத்துக்கொள்ளவும் செய்கிறார். சூரிய தேவனின் சிறப்பு அவர், தம் கிரணஜாலங்களை ஒரு கணத்தில் எங்கும் பரப்புவதிலும், பிறகு எல்லாவற்றையும் சுருட்டிக் கொள்வதிலுமே அமைந்திருக்கிறது என ரிக்வேதம் புகல்கிறது. இந்த இருவகை ஆற்றல்களும் படைத்தவனே தலைவன்.

இன்று நம் நாட்டில் இவ்வாற்றல் படைத்த தலைமையைக் காணோம். மதிப்பிற்குரிய தலைவர் பலர் இருப்பினும், அவர்கள் நாற்புறமும் மேலும் கீழும் கட்டுண்டிருக்கிறார்கள்.

இராமாயணத்தில் இராமபிரானுடைய வருணனையொன்றுள்ளது. அவருக்குமுடிசூட்டல் நடக்க வேண்டிய நாள் எங்கும் பெருமகிழ்ச்சி. விழாவிற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. இதற்குள் ஆபத்து குறுக்கிடுகிறது. முடிசூட வேண்டிய இராமன் காட்டுக்குப் போக வேண்டிவருகிறது. இதைக் கேட்டதும் அவருக்கு உண்டான மகிழ்ச்சியை துளசிதாசர் அற்புதமாக வருணித்திருக்கிறார். இளம் யானையொன்று தன் கால்களிற் பூட்டப்பட்டிருந்த சங்கிலிகள் தகர்க்கப்பட்டதும் பெருமகிழ்ச்சியுடன் "தப்பினேம், தப்பினேம்" என்று காட்டை நோக்கி ஓட்டம் பிடிப்பதைப்போல் அவர் காட்டிற்குச் சென்றாராம். காட்டில் இஷ்டம் போல் திரிந்த பிராணியை அவர்கள் நாட்டிற் கட்டிவைக்கப் பார்த்தார்கள். இப்பொழுது அதை விட்டுவிடவே, அது பெரு மகிழ்ச்சி கொண்டு காட்டிற்குப் பாய்ந்து ஓடியது!


சமீபத்திற் பண்டித நேருவுக்கு இராமபிரானைப்போன்று செய்யவேண்டுமென்று என்னவோ தோன்றிற்று. இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ததைப்போல், தாமும் சில நாட்களுக்கு வெளியேற வேண்டுமென்று எண்ணினார். "வெளியேறிப்போனால் நன்றாயிருக்கும், இந்தச் சிக்கல்களிலிருந்து, சுழலிலிருந்து விலகுவோம்" என்று நினைத்துத் தம்மை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர் யாரிடம் கேட்டுக் கொண்டாரோ, அவர்களது நிலை இதனால் பரிதாபகரமாகி விட்டது. இவரை நாம் போக விட்டால் நம் இடம் நிலைக்காது என்று அவர்களுக்குத் தோன்றியது. எனவே, அவர்களெல்லாம் சேர்ந்து, "நீங்கள் இருக்கவே வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் பிழைப்போம், எங்கள் இடம் நிலைக்கும்" என்று தெரிவித்து, நேருஜியை ஒப்புமாறு செய்துவிட்டார்கள்! அவர்கள், **ஆற்றல் உள்ள சிலர் அரசாங்கத்திலிருந்து வெளியே இருத்தல் அவசியமாகையால், "நாங்கள் வெளியே இருக்கிறோம். நீங்கள் உள்ளேயே உங்கள் பதவியிலேயே இருங்கள்" என்று சொல்லியிருந்தால் அதற்குப் பொருளுண்டு. ஆனால் அதிகார மோகம் கூடாதென்று ஒரு பக்கம் சொல்லிக் கொண்டு, அவர்களே அதில் திளைத்திருத்தல் ஒரு வேடிக்கைதான். இதனால் அவர்களுக்கே சிரமமுண்டாகிறது.**

இவ்வாறு இன்று மதிப்பிற்குரிய பெரியவர்களெல்லாம் வலையிற் சிக்கிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஆற்றல் படைத்த எவருக்கும், அறிவாளியான எவருக்கும் தம் பதவியை விடும் ஆற்றலோ மனமோ இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் சாதாரண அறிவாளிகள் ஆட்சி புரியத் தேர்ந்தெடுக்கப்படுவதே.

இக்காலத்துக்கு மிகவும் தேவையானது உடனுக்குடன் எதையும் முடிவு செய்யும் ஆற்றல் என்று சொன்னேன். இத்தகைய ஆற்றலுள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெறவில்லை, அவர்கள் தேர்தலுக்கே நிற்கவில்லை என்பது தெளிவு. உடனுக்குடன் முடிவு செய்வதற்கு மனத்தளத்திலிருந்து மேலே எழுந்தாக வேண்டும். அவ்வாறு எழக்கூடியவர்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பெரிய சிக்கல்கள் இல்லை, சிறிய சிக்கல்களை நிர்ணயிக்க வேண்டி வரும்பொழுதும்

(14-ம் பக்கம் பார்க்க)

கட்டடங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு



போன்: 697

சண்முகம் ஸ்ரோர்ஸ்

பிரபல இரும்பு வியாபாரிகள்

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# பதில் எங்கே ?

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

உபயோகமான பகுதியாக அது இருந்துவந்தது. 'சுவற்றை' என்று அதற்கு முன்பு எழுதிவந்த நான் 'சுவரை' என்றும், 'தவறை' என்று தவருக எழுதிவந்த நான் 'தவற்றை' என்று சரியாக எழுதவும் கற்றுக்கொண்டது அந்தப் பத்திரிகையின் மூலமாகத்தான்! நான் இந்தப்பகுதியைப் பாராட்டி எழுதும் போதெல்லாம் அதன் ஆசிரியர் உடனுக்குடன் மகிழ்ச்சி தெரிவித்துப்பதில் எழுதுவார். ஆனால் ஒருமுறை அந்தப் பத்திரிகையின் ஓர் இதழில், 'வெண்ணை' என்றும் 'புடவை' என்றும் எழுதக்கூடாது, 'வெண்ணெய்' என்றும் 'புடைவை' என்றும்தான் எழுதவேண்டும்," என்ற விளக்கம் தரப்பட்டிருந்தது. நமது வெண்ணெய் வியாபாரிகளும் புடவை வியாபாரிகளும் தங்கள் கடைகளின் பெயர்ப் பலகையை அழித்து எழுத யாராவது இயக்கம் தோற்றுவிப்பார்களா என்று நினைத்துக்கொண்டே அந்தப் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டி வந்த நான் ஒருநிமிஷம் திடுக்கிட்டே விட்டேன். 'நப்பின்னை ஸில்க் எம்போரிய'மும் 'ராதா கிருஷ்ணராவ் ஸ்டோர்ஸ்' காரரும் அந்தப் பத்திரிகையிற் கொடுத்திருந்த விளம்பரங்கள் தாம் என்னுடைய அதிர்ச்சிக்குக் காரணம். "எங்கள் கடையில் விற்கப்படும் புடவைகள் எல்லாம் உயர்ந்தவையே," என்று நப்பின்னை ஸில்க் விளம்பரமும், "கண்ணன் தின்னும் பண்டம் ராதா கிருஷ்ணராவ் வெண்ணை" என்று ஸ்டோர்ஸ் விளம்பரமும் அடுத்தடுத்துக் காணப்பட்டன!

உடனே நான் அந்தப்பத்திரிகையின் ஆசிரியருக்கு, "தங்கள் ...... வார இதழில் வெண்ணெய், புடைவை என்று எழுதவேண்டுமென்ற குறிப்பைப் பார்த்து மகிழ்ந்தேன். ஆனால் விளம்பரங்களில் 'வெண்ணை' என்றும் 'புடவை' என்றும் வெளிவர எப்படி அநுமதித்தீர்கள்? விளம்பரங்களில் உள்ள எழுத்துப்பிழையைத் திருத்த உங்களுக்கு ஏன் தைரியமில்லை? அப்படித் தைரியமில்லாவிட்டால் பிறரிடமுள்ள குறையை எடுத்துக் காட்டுவதையாவது தவிர்த்திருக்கக் கூடாதா? உங்கள் சமாதானத்தை உடனே எதிர்பார்க்கிறேன்," என்று காரமாகவே எழுதிவிட்டேன். ஆனால் இன்று வரை ஆசிரியரிடமிருந்து பதில் வரவில்லை!

* * *

என்னுடைய நெருங்கிய உறவினர் ஒரு பிரபல நியாயவாதி. சட்டத்தைக் கரைத்துக் குடித்து ஏப்பம் விட்டவர்! மாதம் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவில்லாமற் சம்பாதிப்பவர். அவருக்கு ஒரு அக்காளும் ஒரு தங்கையும் உண்டு. அக்காள் அந்தஸ்து மிகுந்தவள். அவள் கணவன் உயர் நீதிமன்ற நீதிபதி. அவருடையதங்கையோ ஏழைக் குமாஸ்தாவின் மனைவி. வக்கீலுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்த பிள்ளைக்குத் தன் அக்காளின் மகளைத் திருமணம் செய்துவைத்தார். அக்காவுக்குக் கடிதம் மேல் கடிதம் எழுதி, அத்தானை அடிக்கடி தோத்திரம் செய்து அந்தஸ்துள்ள மருகப் பெண்ணை அடைந்துவிட்டார். அக்காளானவள், நம்மைவிட அந்தஸ்து குறைந்தவனானாலும் என் தம்பியை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று கணவனை நீதிபதிக்கு நீதியை எடுத்துக்காட்டிப் பிடிவாதமாகக் கல்யாணத்தை நிறைவேற்றினாள்.

இப்போது நியாயவாதியின் தங்கைக்கு நல்ல அழகான ஒரு பெண் இருக்கிறாள். தங்கை தன் தமையனிடம், "அண்ணா! உன்னைவிட்டால் எனக்கு யார் ஆதரவு? உன் இரண்டாவது பிள்ளைக்கு என் பெண்ணைக் கல்யாணம்செய்துவை" என்று கேட்டுக் கொண்டிருக்கிறாள். நியாயவாதி இப்போது ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறார். தங்கையிடம், 'நீ ஏழை, நான் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் அந்தஸ்துள்ளவன். உன் பெண்ணுக்கு என் பிள்ளையைக் கேட்டது தகாது," என்று சொல்லிவிட்டார். இந்த விவாகத்தை அறிந்த நான், "உமது தமக்கையிடம்-நீதிபதி மனைவியிடம்—அந்தஸ்து குறைவான நீர் சம்பந்தம் செய்த போது உமது தாழ்மையை நீர் எண்ணிப் பார்த்தீரா? உமது தமக்கையும் அவருடைய நீதிபதிக் கணவனும் தங்களைவிட மட்டமான உம்மிடம் எதற்காகச் சம்பந்தம் செய்தார்கள்? உறவு விட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தானே. அந்தப் பெருந்தன்மையை நீர் இப்போது உம்மை விடத் தாழ்ந்த படியில் உள்ள உமது தங்கையிடம் காட்ட வேண்டாமா? நீர் வெட்கப்படாமல் மண்டியிட்டீர்; பலனடைந்தீர். உம்மிடம் தயவு எதிர்பார்ப்பவரிடம் பரிவுகாட்டத் தவறினால் உம்மை மனித இனத்தில் சேர்க்க முடியுமா? உடனே உமது கட்சிக்கு நீரே வக்காலத்து வாங்கி உமது கட்சியை ஆதரித்துப் பேசிப் பாரும். சாதகமாக ஒருவரி கூட உம்மால் பேச இயலாது. உமது பிடிவாதத்தை மாற்றிக் கொண்டு 'தங்கையின் பெண்ணை மருமகளாக ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்று ஒருவரி பதில் போடும். இல்லாவிட்டால் உலகம் உம்மைக் கோழை என்று தீர்ப்பளிக்கும்," என்று எழுதி விட்டேன், மனிதன் வாயைத் திறக்கவேண்டுமே! பதில் எழுத அவருக்குக் கை யெழும்புமா என்ன? சுயநலப் புலிகள் இவ்வளவு தொடை நடுங்கிகளாக இருப்பார்கள் என்பதை நான் இந்தச்சந்தர்ப்பத்திற்குப் பிறகுதான் அறிந்தேன்!

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உதவாக்கரை உலுத்தர்களை, பிறருக்கு ஒருநீதி தனக்கு ஒருநீதி என்று பேசித்திரியும்பித்தர்களைத்தாட்சண்யம் பார்க்காமல் சமயம் நேரும் போதெல்லாம் 'மண்டையில் அடிக்காமல்' இருந்தால் சமூகம் உருப்படுமா? நீதியும் நேர்மையும் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடமாட்டாவா?

அதனாலே தான் நான் அநீதியைக் கண்டவிடத்து என்னுடைய கண்டனத்தை ஒழிவு மறைவு இல்லாமல், பதிலை எதிர்பார்க்காமல் — நிஷ்காம்யமாகச்செய்துவிடுவது வழக்கம். நீங்களும் இப்படிச் செய்யத் துணிந்தால் இத்தகைய போலி வேஷதாரிகளை அடக்கிய புண்ணியம் உங்களைச் சேரும்.

## விளையாட்டுப் பகுதி

# விளையாட்டுப் போட்டிகள்

★ **யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கத்தின்** முதலாம் பிரிவு அப்போதிக்கரீஸ் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எட்டுக் கோஷ்டிகள் பங்குபற்றும் இச்சுற்றுப்போட்டியில் கிருஸ் ஹொப்பர்ஸ் ஒரேயொரு ஆட்டத்தை மட்டுமே இழந்திருக்கிறது.

★ **இரண்டாம் பிரிவுப் போட்டிகள்** பண்ணை மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மொத்தம் 18 கோஷ்டிகள் பங்குபற்றும் இப்போட்டி மூன்று உப பிரிவுகளாக நடைபெறுகிறது. ஒவ்வொரு உப பிரிவிலும் வெல்லும் கோஷ்டிகள் ஒன்றோடொன்று விளையாடி வெற்றி வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

★ **இச்சங்கத்தால்** நடத்தப்படும் மன்மதராயன் வெற்றிக் கேடய உதைபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் நடைபெறுமெனத் தெரிகிறது. விண்ணப்பப் பத்திரங்கள் இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

★ **யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கம்** சமீபத்தில் அனுப்பிய சுற்றறிக்கையொன்றில் 'யுத்கவுன்ஸில்' விளையாட்டுக் கழகம் கைவிடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கிறார்கள். வேறெவ்வித விளையாட்டுச் சங்கமும் அகில இலங்கை கழகத்துடன் இணைந்ததில்லையெனவும், ஆகையால் அப்படியானோர் நடத்தும் போட்டிகளில் இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட கழகங்களைச் சேர்ந்தவர்கள் ஆடுவது சட்ட விரோதமெனவும் இவ்வறிக்கை கூறுகிறது.

★ **யாழ்ப்பாண விளையாட்டுச் சங்க** உப காரியதரிசி மத்தியஸ்தர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் யாழ்ப்பாண மத்தியஸ்தர் சங்க செயற்குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

★ **யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் சம்மேளனத்தின்** உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வைத்திய ஊழியர் இதுவரை ஒரு ஆட்டத்தையும் இழக்கவில்லை. சென்ற வாரம் கல்விப்பகுதியுடன் அவர்கள் ஆடிய ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்திருக்கிறது.

★ **யாழ்ப்பாணக் கல்லூரிகளிடையே** கிரிக்கட் ஆட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

★ **தமிழ்ப் புத்தாண்டையனுசரித்துப்** பத்து மைல் சைக்கிளோட்டப் போட்டியொன்று ஏப்ரல் 12-ந் திகதி யாழ்ப்பாண பொலிஸ் மைதானத்தில் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

★ **அகில இலங்கை கைப்பந்தாட்டப் போட்டியில்** 27 மாவட்டங்கள் கலந்து கொண்டிருக்கின்றன.

★ **பிறையன் ஸ்டாதம்,** பீட்டர் லோடர் ஆகிய இரு ஆங்கிலேய பந்து வீச்சு வீரரும் ஒரு கார் விபத்தில் அகப்பட்டுக் காயத்துக்காளானார்கள்.

★ **விளையாட்டுப் போட்டிகளிற்** பங்குபற்றும் பெண்களின் உடை துப்பரவாகவும் விரசமற்றதாகவும் அமைய வேண்டுமென விதி செய்யப்பட்டிருக்கிறது. பெண்கள் விளையாட்டுச் சங்கத் தலைவி லேடி றீட் "சுருக்கமான உடையே தேவை. அழகான பெண்கள் அதை அணிவதில் தவறென்ன?" என்கிறார். ஆயினும் நைலான் உடைகள் தரிப்பதனால் படங்களில் உடையே இல்லாததுபோல் தோன்றுவது விரும்பத்தக்கதல்ல என்பதை ஒப்புக்கொள்கிறார்.

* * *

**இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே** நடைபெறும் கிரிக்கட் போட்டியில் 5 ஆவது ஆட்டத்துக்கு மக்கின்ஸ் என்பவர் மத்தியஸ்தராக நியமிக்கப்படவில்லை. முந்திய ஆட்டங்களில் இவர் அளித்த தீர்ப்புகள்பற்றி ஆங்கிலேயர் மத்தியில் முணுமுணுப்பு இருந்தது.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**
**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறாப்பர்

Std. 14.


## சினிமா உலகம்

# ★ பதி பக்தி ★

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், தங்கவேலு, சந்திரபாபு, நாகையா, சாவித்திரி, எம். என். ராஜம் முதலியோர் நடித்த படம்தான் **பதிபக்தி.** புத்தா பிக்ஸர்ஸ் அளிக்கும் இத்திரைப்படம் யாழ்ப்பாணம் **வெலிங்டன்** படமாளிகையில் இப்பொழுது திரையிடப்படுகிறது.

நடிகர் — நடிகைகள் முதலியோரின் பெயர்களைத் திரையிலே காட்டுவதற்கு முதலே சில காட்சிகளைக் காட்டிவிடுகிறார்கள்! இது அவசியம்தானா?

கதை இதுதான்: பிழைப்புக்காக ராணுவத்திற் சேர்ந்த பாண்டியன் (சிவாஜி) தன் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும்படி ஒரு பணப்பெட்டியை, ரயில் நண்பன் மூர்த்தி (ஜெமினி)யிடம் கொடுக்கிறான். பெட்டியுடன் அது சேரவேண்டிய விலாசத்தையும் கொடுக்கிறான். ஆனால் ஜெமினி துரதிஷ்டவசமாக விலாசத்தை இழந்துவிடுகிறான். பின் அதைத்தேடி அலைகிறான். வழியில் அல்லி (சாவித்திரி) அகப்படுகிறாள். ஆனால் விலாசம் அகப்படவில்லை.

ராணுவ வீரனாக நடிக்கும் சிவாஜி கணேசன் நன்றாகவே நடித்திருக்கிறார். தன் தமக்கையின் கடிதத்தை ஆஸ்பத்திரியில் வாசித்ததும் படுக்கையை விட்டோடிப்போய் டாக்டரிடம் தன்னை வீடு செல்ல விடுமாறு கதறுகின்ற பொழுது, எவர் கண் தான் கலங்காது? அந்தக் கட்டத்திற் சிவாஜியின் நடிப்புத் தத்ரூபமாகவிருந்தது.

ராணுவத்திற் பெரும் உத்தியோகஸ்தராக வரும் ஜெமினி கணேசனுக்குப் பாத்திரமும், வேஷமும் பொருத்தமாக அமைந்திருக்கின்றன. நடிப்பும் நன்று. கடைசிக் காட்சியிற் சாவித்திரியைச் சந்தேகக் கண்கொண்டு ஒரு பார்வை பார்க்கிறாரே, அப்பப்பா! பயமாகத் தானிருக்கிறது!

சாவித்திரியின் நடிப்புத் தென்றல்காற்றைப்போலவந்து தடவிக்கொண்டு போகிறது. மேலே வீசிக்கொண்டிருக்கும் மின்சார விசிறிகள் செய்ய முடியாததை அவர் தன் விழிகளினாலும், முக பாவத்தினாலும் செய்துவிடுகிறார். மொத்தத்தில் அவருடைய நடிப்பு கச்சிதம்.

எம். என். ராஜம் சிவாஜின் - அதுதான் பாண்டியனின் காதலியாக வருகிறார். அவள் ஒரு அப்பக்காரி. அப்பக்காரியின் பாகத்தைத் தப்பிதம் இல்லாமல் செய்திருக்கிறார் ராஜம். அல்லியின் குழந்தைக்கு ஆட்டோ ரிக்ஷாப் பொம்மை வாங்கி வந்த பாண்டியனைப்பார்த்து 'என்ன இருந்தாலும் ஒன் புத்தி ஒன்னை விட்டுப்போகுமா?' என்று பரிகாசம் செய்யும்பொழுது, அவர் நடிப்பு நம் உள்ளத்தை அப்படியே அள்ளிக்கொண்டல்லவா போய்விடுகிறது!

தங்கவேலுவும், சந்திரபாபுவும் வருகிறார்கள், ஆனால் வெவ்வேறு வித்தியாசமான பாத்திரங்களில். தங்கவேலு ஒரு புதுப் பாகத்தை ஏற்று நடித்திருக்கிறார். ஜெமினியின் தந்தையாக, சாவித்திரியின் மாமனாக, படத்தின் வில்லனாகநடிக்கிறார். முதல் இரண்டு பாகங்களையும் சரிவரச் செய்திருக்கிறார். வில்லன்பாகத்தில், வில்லன் மாதிரி நடிக்காவிட்டாலும், வில்லன் வேலையை எப்படியோ திருப்திகரமாகத் தான் செய்து விடுகிறார்.

சந்திரபாபு கலைப்பித்தனாக வருகிறார். அவசியமில்லாமல் ஜெயிலுக்கும்போகிறார், பாவம்! அவரது பரதநாட்டியம் நல்ல அபிநயத்துடன் விளங்குகிறது. "ராக் - அன்ட் - ரோல் டான்ஸ்" அவரைப் பொறுத்தளவில் ஒரு தனி வெற்றி.

நாகையா ஒரு புத்த பிக்குவாகவருகிறார்; மறுகணம்போய் விடுகிறார்.

பாடல்கள் எல்லாமே பரவாயில்லை. என்றாலும், சிவாஜி தனிமையில் படிக்கும் "வீடு நோக்கி ஓடிவந்தஎன்னையே..." என்னும் பாட்டு உள்ளத்தைத் தொடுகிறது.

படப்பிடிப்புச் சில இடங்களில் திறமையுடன் விளங்குகிறது.

'டைரக்ஷன்' சிலஇடங்களில் புதுமையைப் புகுத்தியிருக்கிறது; பல இடங்களிற் பழமையை இறுக்கி அணைத்துக்கொள்கிறது.

சிவாஜி கணேசன், சாவித்திரி இருவரினதும்திறமையான நடிப்புக்கும், சந்திரபாபுவுக்குமாகப் பார்க்க வேண்டிய படம் **"பதிபக்தி".**

# எனது திட்...

(13-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதனுடன் தொடர்புள்ளவர்களுக்கும் முடிவு செய்யும் ஆற்றல் இருக்க வேண்டும். இதற்குக் கிராமராச்சியமே வழி. டில்லியில் எழும் சிக்கல்களே கிராமங்களிலும் சிறிய அளவில் எழுகின்றன. அச்சிறு சிக்கல்களை கிராம மக்கள் தம் சுய அறிவைக் கொண்டு தீர்ப்பார்களானால், கிராமந்தோறும் மக்கள் நிர்வாகம் நடத்துவார்களானால், தாமே நன்கு சிந்தித்து, ஆராய்ந்து, திட்டம் வகுத்து, காரியங்களைச் செய்வார்களானால் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியும், நிர்வாக ஆற்றலும், முடிவு செய்யும் வன்மையும் ஏற்படும். சிறிய சிக்கல்கள் விஷயத்தில் இவ்வாற்றல் பயன்பெறுமாயின் பிறகு பெரிய சிக்கல்களை உடனுக்குடன் தீர்க்கவும் அவர்களால் முடியும்.

# நீலாவுக்கு நெறஞ்ச மனசு

இப்பொழுது யாழ்ப்பாணம் **ராணி** சினிமாவில் நடைபெறும் படம் "நீலாவுக்கு நெறஞ்ச மனசு". இந்தப் படம் சோமு — நாகராஜன் — மஹாதேவன் கூட்டுத் தயாரிப்புகளில் ஒன்று.

இக்கதை 'நீலாவின் நெறஞ்ச மனசை'ச் சுற்றியே ஓடுகின்றது. ஒரு குமாஸ்தாவின் குடும்பம். அதிலே தாயில்லாத பெண்களாகப் பாலா, மாலா, கலா, நீலா என்பவர்கள். இவர்களில் மூத்தவள் தான் நீலா. அவள் தன்னுடைய இளைய சகோதரிகளுக்கு ஒரு தாய்போல. பொறுமையும், அன்பும், அடக்கமும் அவள் அணிகலன்கள். பாலா, மாலா, கலா இவர்களை முறையே பரமசிவம், மணி, திவாகர் காதலிக்கின்றனர். ஆனால், நீலாவோ தன் காதலை, தன் தங்கை மாலாவைக் காலிகள் கூட்டத்திலிருந்து காப்பாற்றும்பொழுது கண்களை இழந்த சேகரிடமே அர்ப்பணிக்கிறாள்.

நீலாவாக நடிப்பவர் வேறு யார், பண்டரிபாய்தான். அதிகம் கண்ணீரைச் சிந்தாமல், அளவுக்குச் சிந்தி அளவுடனேயே தன் பாத்திரத்தையும் நன்குணர்ந்து நடித்திருக்கிறார்.

பாலாவாக நடிக்கும் ராகினி, மாலாவாக நடிக்கும் ராஜம், கலாவாக நடிக்கும் முத்துலட்சுமி இவர்களுக்குள் ராஜத்தின் நடிப்பு மற்றவர் இருவரையும்விடச் சிறந்ததாகவிருக்கின்றது. அவர் வீரப்பாவுக்கும், டி. கே. ராமச்சந்திரனுக்கும் கொடுக்கும் நறுக்கு நறுக்கென்ற பதில்கள் நமக்கு இதமாகவிருக்கின்றன.

முத்துக்குமாரசுவாமி முதலியாராக, பெண்களின் தந்தையாக வருபவர் வி. கே. ராமசாமி. வழக்கம்போல வெட்டிக் கதைக்கிறார், ஆனால் 'வள்' ளென்று விழவில்லை. சுமாராக நடித்திருக்கிறார் அவர்.

'குழந்தை'யாக வரும் சம்பந்தத்தை, எந்தக் குழந்தையுமே நம்பாதே குழந்தையென்று! குள்ளமாக இருந்தாலும் அவர் வயதுதான் அவர் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறதே!

சேகரின் பாகத்தை ஸ்ரீராம் ஏற்று நடித்துள்ளார். இது ஒரு சிறுபாகம். சில இடங்களில் தவிர, மற்றும்படி நடிப்பில் உணர்ச்சியே இல்லை.

திவாகரராக கிரிக்கட் மட்டையைத் தூக்கிக்கொண்டு, மேல்நாட்டுச் சங்கீத வல்லமையையும் விளம்பரப்படுத்திக்கொண்டு, கொச்சை ஆங்கிலமும் பேசி வைக்கிறார் தங்கவேலு. அவரைப்பற்றி வேறு என்னதான் சொல்வது? பாடுகிறார், ஆடுகிறார் (கிரிக்கெட்டும் - ஆங்கில நடனமும்), நாடுகிறார் (முத்து லட்சுமியை)!

டி. கே. ராமச்சந்திரன், டி. ஆர். ராமச்சந்திரன், இருவரும் சின்னப் பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். இருவரும் பேரளவில் மாத்திரமல்ல, நடிப்பளவிலும் ஒற்றுமையையே காட்டுகிறார்கள். அவர்கள் நடிப்பில் விசேஷமாகச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

வில்லனாக வருகின்றார் வீரப்பா. இடையிடையே மோட்டார் சைக்கிளும் ஓடுகிறார். தன் வில்லன் பாகத்தை என்னவோ திருப்தியாகத் தான் செய்திருக்கிறார்.

இப்படத்தின் சிறப்பான அம்சங்களில் ஒன்று வடநாட்டு நாட்டியக்காரி ஹெலனின் கேவா கலர் நடனம். இது அவசியமாகத் தோன்றாவிட்டாலும், கண்களுக்கு மட்டும் நல்லதொரு விருந்தாக அமைந்துள்ளது.

'நீலாவுக்கு நெறஞ்ச மனசு' நீலாவைப் பொறுத்த மட்டில் நெறஞ்ச மனசுதான். ஆனால், எங்களுக்கு மனசு நெறயறதா? அரைக்கரைவாசியாவது நெறயத்தான் செய்கிறது.

"ரசிகன்"

இப்பொழுது திரையிடப்படுகிறது !

## செல்லமஹால்

(கொட்டாஞ்சேனை)

★ சிவாஜி கணேசன்　★ பானுமதி

★ ராஜசுலோசனா　★ எம். என். நம்பியார்

★ கமலாலக்ஷ்மணன்　★ ஈ. வி. சரோஜா

மற்றும் பலர் நடிக்கும்



## சாரங்கதரா

(தமிழ்)

எதிர்பாருங்கள் !

★ சிவாஜி கணேசன் ★ பத்மினி ★ டி. ஆர். ராஜகுமாரி

நடிக்கும்

## தங்கப் பதுமை

மகத்தான 2 வது மாதம்

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்

(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)

## விஜயா மொடர்ன்

(மட்டக்களப்பு) (பண்டாரவளை)

மற்றும் ஆறு திரைகளில்

உங்கள் சிந்தைக்கினிய நட்சத்திரக் கூட்டம்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, பாலையா, தங்கவேலு, சந்திரபாபு, எம். என். ராஜம், நாகையா, விஜயகுமாரி நடித்த

— புத்தா பிக்சர்ஸ் —

## பதி பக்தி

## எமது அடுத்த வெளியீடு




- சிவாஜி கணேசன்
- ஜமுனா
- நாகையா
- ரங்காராவ்
- (பிரண்ட்) ராமசாமி
- சாந்தகுமாரி
- மைனாவதி
- சுந்தரிபாய் நடிப்பது

— சினிமாஸ் லிமிட்டெட்

## 3-வது வெற்றி வாரம்!

ரசிகர்களை

மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது!

## சென்ட்ரல் ஓடியன் ராணி

(கொழும்பு) (கல்கிசை) (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-00 மணி இரவு 9-30 மணிக்கு

பகல் காட்சி சனி - ஞாயிறு 2 மணி - காலைக்காட்சி ஞாயிற்றுக்கிழமை 10 மணி

ஒரு குளிர்மையான குடும்பச் சித்திரம் !

குடும்பத்தினரைக் கவரக்கூடிய படம் !

★ ஸ்ரீராம்　★ பண்டரிபாய்

★ எம். என். ராஜம்　★ ராகினி


★ டி. ஆர். ராமச்சந்திரன்　★ டி. கே. ராமச்சந்திரன்

★ கே. ஏ. தங்கவேலு　★ டி. பி. முத்துலட்சுமி

★ வி. கே. ராமசாமி　★ பி. எஸ். வீரப்பா

— இன்னும்பலர் நடிக்கும் —

## நீலாவுக்கு நெறஞ்ச மனசு




திரைக்கதை-வசனம்: ஏ. பி. நாகராஜன்

இசை அமைப்பு: கே. வி. மகாதேவன்

விரைவில் எதிர்பாருங்கள் !

சமீபகாலச் சித்திரங்களுக்கெல்லாம் சவால் விடும் பெருமைப்படம் !

அன்னபூரணா பிக்சர்ஸாரின்

## "மஞ்சள் மகிமை"

'எங்கள் வீட்டு மகாலட்சுமி'யின் அடிச்சுவட்டில் !

நட்சத்திரங்கள் :

ஏ. நாகேஸ்வரராவ்—சாவித்திரி

ராஜசுலோசனா—தங்கவேலு

பி. கண்ணாம்பா—சுந்தரிபாய்—எஸ். வி. ரங்காராவ்

கே. சாரங்கபாணி—பாலாஜி—ஜி. வரலட்சுமி.

நடனங்கள் : ராஜசுலோசனா—ராகினி—சுகுமாரி

வசனம் : ஸ்ரீதர்

பாடல்கள் : உடுமலை நாராயணகவி, மருதகாசி.

இலங்கை 'என்டெர் டெயின் மென்ற்ஸ்' சுற்றுக்குள் அடங்கிய ஐந்து தியேட்டர்களில் காண்பிக்கப்படும்

இந்தியச் செய்திகள்

# கூட்டுப்பண்ணை முறையே இந்தியாவுக்கு உகந்தது

—நேருஜி

நில உடைமைக்கு உயர் வரம்பு கட்டுவது சம்பந்தமாகவும், கூட்டுறவு சாகுபடி முறை பற்றியும் சமீபத்தில் இராஜாஜியும் முன்ஷியும் கண்டனங்கள் தெரிவித்தனர். இக் கண்டனங்கட்கு நேருஜி செய்தி நிருபர்கள் மாநாட்டில் பதில் அளித்திருந்தார். அவர் கூறியதாவது இவ்விரு விஷயங்களையும் காங்கிரஸ் நீண்டகாலமாக விவாதித்தது. நாகபுரிக் காங்கிரஸ் மாநாட்டில் இச்சிக்கல்கள் திடீரென முடிவுசெய்யப்படவில்லை. பிரபல பொருளாதார நிபுணர்களைக் கொண்ட சபைகள் நியமிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. ஆகவே, இச்சீர் திருத்தங்களை காங்கிரஸ்மீது திணித்ததாக இராஜாஜி கூறுவது: உண்மைக்கு முரணானதாகும். இந்தியாவின் முன்னேற்றத்தில் எனக்குத் திடமான நம்பிக்கை இருப்பதால் காங்கிரஸ் தெரிவிக்கும் கருத்துக்களை நான் அப்படியே ஏற்றுவருகின்றேன். ஆகவே, நான் எனது சொந்தக் கருத்துக்களைத் திணிப்பதற்காகக் கூறுவது சரியன்று. நான் உயிரோடு இருக்கும் சொற்ப காலத்துக்குள் விவசாய பொருளாதாரத்தை மாற்றவிரும்புகிறேன்.

இன்றைய சூழ்நிலையில் கூட்டுப்பண்ணை முறையே இந்தியாவுக்கு உகந்ததென நேருஜி கருதுகின்றார்.

### தேசப்பிரிவினையா ?

இந்தியாவின் கல்வி அமைச்சராகப் பணியாற்றிய காலஞ்சென்ற மௌலானா ஆசாத் "இந்தியா சுதந்திரம் அடைகிறது" என்ற தமது நூலில் இந்தியாவைப் பிரிப்பதற்குக் காங்கிரஸ் செய்த முடிவைக் கண்டித்திருக்கிறார். நிருபர்கள் மாநாட்டில் இது சம்பந்தமான கேள்விகளுக்கு நேருஜி பதில் அளிக்கும் போது பாரதமும் இந்தியாவும் கண்டிப்பாக இணைந்தே இருக்கவேண்டுமெனக் காங்கிரஸ் தலைமை வற்புறுத்தியிருந்தால் உள்நாட்டுப் பூசலிலேயே சக்தி விரயமாகி விடுமென்றும், காங்கிரஸ் தலைவர்கள் கருதினர் என நேருஜி குறிப்பிட்டார்.

நேருஜி மேலும் பேசுகையில் தாம் (நேரு) தவருக நடந்து கொண்டாரென ஆசாத் நினைப்பது முற்றிலும் சரியாக இருந்தாலும் சில சமயம் ஆசாத் தனிப்பட்ட முறையிலேயே அதிகம் சிந்திக்கின்ருர் எனக் கூறினர்.

### இந்தியா—ஆப்கன்

இந்தியாவிலுள்ள ஆப்கன் முதலமைச்சர் சர்தார் முகமது தாவுத்தும், பாரதத்தின் முதலமைச்சர் நேருவும் கூடிப் பேசினர். பல முக்கிய விஷயங்களில் கருத்து ஒற்றுமை இருப்பதாகத் தெரிகின்றது.

### நேருஜி ஆட்சேபம்

இந்தியாவில் ஒரு 'கன்ஸர்வேட்டிவ்' கட்சி அமைக்கலாம் என இராஜாஜி தெரிவித்துள்ள கருத்துப் பற்றி நிருபர்களுக்கு நேருஜி கூறியிருப்பதாவது: தனிப்பட்ட முறையில் இராஜாஜி பற்றி நான் விவாதத்தில் இறங்குவது முறையாகாது. எல்லோரையும் போலவே அவருக்கும் அபிப்பிராய சுதந்திரமுண்டு.

ஆனல் சில சமயங்களில் உண்மை யாதென்பதைப் பூரணமாகப் பரிசீலனை செய்யாமல் ஒருமுடிவுக்கு வந்துவிடப்பார்க்கின்றார்.

"சென்ற இருபது முப்பது வருடகாலமாக எனக்கும் இராஜாஜிக்கும் கருத்து வேற்றுமை இருந்து வருவது எனது துரதிஷ்டமே".

### நாம் தமிழர் இயக்கம்

திரு. சி. ப. ஆதித்தன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'நாம் தமிழர்' இயக்கத்தினரின் அடுத்த நடவடிக்கை இந்தியாய் படத்தில் தமிழில்லாத பிரதேசங்களை எரிப்பதாகும்.

### முதலமைச்சரின் கதிர்காம யாத்திரை

சென்ற திங்கட்கிழமை முதல் அமைச்சர் பண்டாரநாயக்கா தம் மனைவியுடன் கதிர்காமம் சென்று வழிபட்டு, அங்குள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கும் சென்றுள்ளார். பொதுசன பாதுகாப்புச் சட்டத் திருத்த 'மசோதா' வினல் ஏற்பட்டுள்ள பெரிய கண்டத்திலிருந்து தப்ப அவர் முருகனின் அருளை நாடியதாகக் கூறப்படுகிறது.

### சிசிர் குமார் பாதுரி

இந்திய அரசினர் 'பத்மபூஷணம்' என்ற பட்டத்தை நாடக ஆசிரியர் சிசிர் குமார் பாதுரி அவர்களுக்கு அளித்தனர். ஆனல், அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். கலைகளுக்கும் விளையாட்டுகளுக்கும் மத்திய அரசினர் போதியளவு ஆதரவு அளிப்பதில்லையென்பதே அவருடைய மனத்தாங்கல்.

## இராணுவ நடவடிக்கை? நகரசபையின் கண்டனம்

யாழ்ப்பாணம்,

இயந்திரத் துப்பாக்கிகள் தாங்கிய போலீசாரும், இராணுவமும் வியாழக்கிழமை இரவு யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பீதியடையக் கூடிய வகையில் நடந்து கொண்டதாக யாழ்ப்பாணம் நகரசபையில் இன்றைய மாதாந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின்மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுசன பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் விளைவாக ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழலாமென்ற எண்ணத்தின்பேரில் இராணுவ, போலிஸ் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருந்தமையே இப் புகாருக்குக் காரணமாகும்.

சமசமாசக்கட்சியைச் சேர்ந்த திரு. அ. விசுவநாதன் வியாழக்கிழமை நடந்த சம்பவங்களைச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்து பேசுகையில் அமைதிக்குப் பங்கமேற்படும் வகையிலும் மக்களை மிரட்டி அடக்கும் வகையிலும் அன்று இராணுவமும் போலிசுப்படையும் நடந்துகொண்டிருந்ததாகவும், இயந்திரத் துப்பாக்கிகளும் மற்றும் திகில் விளைக்கும் ஆயுதங்களும் அன்று சந்திக்குச் சந்தி வைக்கப்பட்டிருந்தது ஏனே தெரியவில்லையெனவும், இது அருவருக்கத்தக்க ஒரு பூச்சாண்டிச் செயலென்றும் சொன்னர்.

ஆட்சியாளரின் இச் செயல் மக்கள் மத்தியில் ஒரு சமயம் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருப்பின் அதனல் ஏற்படும் அசம்பாவிதங்களுக்குப் பொறுப்பாளியார் என்றும் அவர் கேட்டார்.

அரசாங்கத்தை நோக்கி விடுக்கப்பட்ட இந்த ஆட்சேபத்தைச் சபை அபிப்பிராய பேதமின்றி ஏற்றுக்கொண்டது.

— ந. நி.

## அடுத்த தேர்தலில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றுமை இருப்பினும் கடைசிவரை அவர்கள் கை கோர்த்துக்கொண்டே இருப்பர். மூன்று அரசியற் பெண்டிரை வைத்துக்கொண்டு இன்னும் இரண்டாண்டுகளுக்காகுதல் பண்டாரநாயக்கா ஆட்சித்தேரை ஓட்டி விடலாமென்றே அனுமானிக்க இடமுண்டு.

### சாதகம் எப்படி ?

ஆனல் அடுத்த பொதுத் தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும், பல அரசியற் கட்சிகளின் சாதகம் எப்படி என்பதைப்பற்றி விவாதிக்கையில் பொது மக்களின் மனப்போக்கை 'டிரிபியூன்' ஆராய்ந்து மூன்று முக்கிய விஷயங்களில் பல கட்சிகளும் என்ன மனப்பான்மை காட்டுகின்றனவோ அதனைப் பொறுத்தே அவற்றுக்கு ஆதரவும் கிடைப்பதாய் இருக்குமென்று கூறுகிறது. சென்ற பொதுத் தேர்தலில் எம். ஈ. பி. வெற்றி பெறுமென்று 'டிரிபியூன்' கூறிய சோதிடம் பலித்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1. அந்நியர் சொத்துக்களைத் தேச உடைமையாக்குதல். 2. தனிச்சிங்களம். 3. அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் ஆகிய மூன்று விஷயமாக மக்கள் அபிலாஷைகளை எந்தக் கட்சி நிறைவேற்ற முடியுமோ அதற்கே வாக்காளரின் ஆதரவு விசேஷமாக இருக்குமென்றும் பொருளாதாரகலாசார விடுதலையை பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் அப்பத்திரிகை கூறுகின்றது.

ஆனல் எம். ஈ. பி. கட்சிக்குள்ளேயே பல பிற்போக்குச் சக்திகள் உள்ளன. அப்பிற்போக்கு வாதிகள் மனம் மாற்றமடையவேண்டும் அல்லது அகற்றப்படல் வேண்டும். இக் கூட்டுக் கட்சி நிலைத்து உயிர் வாழ்வது இதைப் பொறுத்தே இருக்கும்.

யு என். பி. இவ்வளவு தீவிரமான பொருளாதார நடவடிக்கையை எடுக்கத்துணியாதென்றும் ஆகவே, மக்களின் ஆதரவு அதற்குக் கிடைப்பது சந்தேகமென்றும் கூறப்படுகிறது. பண்டாரநாயக்கா மக்களின் உணர்ச்சியை உணர்ந்துதான் சமீபகாலமாக முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டப்போவதாகப்பல கூட்டங்களிலும் கூறி வருகின்றார். பொதுமக்கள் மனம் இப்படிப் பொருளாதார விடுதலையையே அதிகம் நாடுகின்றது. அந்நியர் சொத்துக்கள் — தோட்டங்கள் முதலியவற்றைத் தேசவுடைமை ஆக்குவதாகச் சென்ற தேர்தலிலேயே எம். ஈ. பி. வாக்குறுதி அளித்தது என்றாலும் அது நிறைவேற்ற முடியவில்லை. கட்சிக்குள் கிளம்பும் பலத்த எதிர்ப்புக்கள் இதற்குக் காரணமாய் இருக்கலாம். எப்படியும் அரசியல் அனுபவம் மிகுந்த பண்டாரநாயக்கா தேர்தல் நெருங்கும் சமயத்தில் மற்ற முற்போக்குச் சக்திகளின் ஒத்துழைப்பைப் பெற்று தேர்தல் ஏற்பாடுகளைக் கடைசி நேரத்திற் செய்து கொள்ள முடியுமெனின் அதில் வியப்படைவதற்கில்லை.

### யு. என். பி. பிரசாரம்

யு.என்.பி. தலைவரான டட்லி சேனநாயகா தேர்தல் பிரசாரங்களை மூலைக்குமூலை ஆரம்பித்துவிட்டார். பதவியா குடியேற்றப் பகுதி பற்றியும் ஒரு கூட்டத்திற் பேசினர். அதில் "நான் ஒரு வகுப்பு வாதியல்ல என்றாலும், பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேச சபைகள் ஏற்பட்டு மற்ற ஏழு மாகாணத்தவர் அங்கு சென்று குடியேற முடியாமலும், உத்தியோகம் செய்ய முடியாமலும் தடுப்பதாகும்." என்று கூறியது தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு ஓரளவு சுயாட்சி ஏற்படுவதையும் மறைமுகமாக அவர் எதிர்ப்பதாக இருக்கிறது.

மொழி விஷயமாக யு.என்.பி. கட்சியின் பழைய கொள்கை மாறியதால், அக் கட்சியிலிருந்த தமிழர் பலர் வெளியேற வேண்டியதாயிற்று. மீண்டும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமென்ற நோக்கம் யு.என்.பி. க்கு இருப்பதுடன் மொழி முதலிய விஷயங்களில் அதிக தாராள மனப்பான்மையைக்காட்டி, பெரிய சேனநாயக்காவின் கொள்கையை மீண்டும்பின்பற்ற வேண்டியிருக்கும். ஆனல் அதற்கான அறிகுறிகள் ஒன்றும் இதுவரை காணேம்.

இத்துடன் ஒப்பிடுகையில் பண்டாரநாயக்கா அதிக தாராள மனப்பான்மை காட்டுவதாகத் தெரிகிறது. சிங்களம் மட்டும் கொள்கையை அவர் கைவிடவில்லை. என்றாலும் "நியாயமான அளவு தமிழ் உபயோக" சட்டத்தை நிறைவேற்றிச் சுதந்திர விழாவில் தமிழுக்கு இடம் அளிக்கச்செய்தார்.

தமிழுக்கு சம அந்தஸ்து அளிக்கவேண்டுமென்ற கொள்கையை டாக்டர் என். எம். பெரேராவின் சமசமாசக் கட்சி ஒன்று மட்டும் உறுதியுடன் ஆதரித்து வருகின்றது. இதன் பயனைச் சென்ற நகரசபைத் தேர்தலில் அவர் தமது தானத்தை இழக்க நேரிட்டதைப் பலர் அறிவர். அவர் இதே கொள்கையை ஆதரிப்பதாயின், சிங்களப் பொதுமக்களின் ஆதரவை அடுத்த பொதுத் தேர்தலில் பெற முடியுமா என்பது சந்தேகமே என்றும் அப்படி அவர் கட்சி வெற்றி பெற்றாலும், பல எதிர்ப்புச் சக்திகளால் அவர் இதை நிறைவேற்ற முடியாது போகலாமென்றும் தமிழ் அரசியல் வட்டாரங்களிற் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

### யாரை ஆதரிப்பது ?

இங்கிலையிலே தமிழ் பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டும்? வேறு எந்தக்கட்சியை ஆதரிப்பது? என்பது மிகவும் கஷ்டமான கேள்விகள். அவர்களிடையே வேற்றுமைகள் மலிந்து, அவர்கள் பிளவு பட்டுள்ளது மற்றும் அவர்களுக்குப் பலவீனமாகும்.

இதுவரை எப்படியாயினும் இனியாவது தமிழ் பேசும் மக்களிடையே புதிய ஒற்றுமையும் கட்டுப்பாடும் வேண்டுமென்று தமிழ்பேசும் பொதுமக்கள் ஆவலும் கவனமும் காட்டுகிறார்கள். இப்போதுள்ள அரசியல் அமைப்பில் ஆளும் கட்சியுடனே, அல்லது வேறு கட்சிகளுடனே முட்டிமோதிக் கொள்ளாமல், அதிக பொறுமையும் இராசதந்திரமும் காட்டித் தங்கள் பொருளாதார நிலைமையைப் பல விஷயங்களிலும் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். சமதர்மக் கொள்கை நாட்டிற்பரவப் பரவ இன்றுள்ள பல சிக்கல்களும் படிப்படியாக மறையலாம். இனி தேர்தற் போட்டிகள் வாக்காளருக்குப்பின்னல் ஓடித்திரிதல் முதலிய விஷயங்களில் தங்கள் சக்தியையும், பணத்தையும் விரயம் செய்யாமல் ஆக்கவேலைகளில் ஒற்றுமையாகப் பல கட்சித் தமிழ்த் தலைவர்களும் எவ்வளவு தூரம் ஈடுபட்டுக் காரியங்கள் செய்ய முடிகிறதோ அதைப்பொறுத்தே அவர்களது எதிர் கால வாழ்வும் அமைவதாகும்.

சமூக அறிவியல்

**சூழல் பாடம்**

(II ஆம் வகுப்புத் தொடக்கம் V ஆம் வகுப்புவரை)

அரசினரின் பாடத்திட்டத்துக்கமைய நுணுக்கமாக வகுத்த பாடத்திட்டத்தின்படி மாணவர் எளிதாக விளங்கிக்கொள்ளும் முறையில் சிறந்த விளக்கப் படங்களுடன் 2ஆம் வகுப்புத் தொடக்கம் 5ஆம் வகுப்புவரை தொடர்ச்சியாக எழுதப்பெற்றவை.

இந்நூல் வரிசை, மாணவர் மனதில் நல்லொழுக்கம், கடமை உணர்ச்சி, சுகாதார அறிவு, இயற்கைச் சூழல், நாட்டு வரலாறு, தொழில் முன்னேற்றம், அரசாங்க அமைப்பு, குடும்ப வாழ்க்கை, மனிதரின் சீவியம் என்பன போன்ற பல விடயங்களைத் தொகுத்து இளம்பிராயத்துக்குரிய தேவைகளை உணர்ந்து வகுக்கப்பட்டது.

எல்லாப் பாடசாலைகளிலும் விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்

**கலைவாணி புத்தக நிலையம்**

பாடநூற் பிரசுரிப்பாளர்

யாழ்ப்பாணம் தொலைபேசி: 221

கண்டி தொலைபேசி: 7196

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதி 64-ம் இல்லத்தில் வசிக்கும் பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் யாழ்ப்பாணம் கலாநிலையப் பதிப்பகத்தில் அச்சிடப்பெற்று, யாழ்ப்பாணம் கலாநிலையப்பதிப்பகத்தின் சொந்தக்காரருக்காக எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி வெளியிடப்பெற்றது.